புதிய கொலம்பியா ரிகார்டுகள்


பிரபல வித்வான்களின் சங்கீத விருந்து



செம்பை வைத்யநாத பாகவதர்

GE. 6159 { நீகில பாப / பாகம் 1 & 2 / ராகம் ஷண்முகப்ரியா

(" வாணி " படத்திலுள்ள பாடல்)



சித்தூர் சுப்ரமணிய பிள்ளை

GE. 6162 { நந்த நந்தன / நந்த கேஹினி



மதுரை மணி அய்யர்

GE. 6170 { பரிமள ரங்கபதே / (காம்போதி ராகம் - பல்லவி) / பாகம் 1 & 2

சரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

முகமது இப்ராஹீம் & கம்பெனி, சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சிறுப்பள்ளி. V. S. ராஜகோபாலன் கம்பெனி, சென்னை. பங்களூர், சேலம், கோயமுத்தூர். M. A. ஹிருதயசாமி & கம்பெனி, உதகமண்டலம்.

நகைச்சுவை அரசு

திரு N. S. கிருஷ்ணன் அவர்களின்

மதுரை ஸ்ரீ மங்கள பாலகான சபையாரால்

21-10-44 சனிக்கிழமை முதல்

இழந்த காதல்

(நாடகம்)

★

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

புதிய சீன்கள், புதிய டிரஸ்கள், நூதன லைட் அமைப்புகளுடன் நடைபெறும்.

செவ்வாய், வியாழன், சனி
இரவு 9-30 மணிக்கும்

ஞாயிறு, புதன், வெள்ளி
மாலை 6-30 மணிக்கும்

திங்கள்தோறும் நாடகம் கிடையாது.

சனி, ஞாயிறுகளிலும் சர்க்கார் விடுமுறை நாட்களிலும் காம்ப்ளிமெண்டரி டிக்கட் செல்லாது




டிக்கட் விபரம்: ரூ. 3-0-0, 1-12-0, 1-2-0, 0-9-0, 0-4-6

P. K. பிள்ளை, மானேஜர்.



ஸன்லைட் சோப் காய்ச்சும் மற்றொருவன் சொல்லுகிறான் . . .

“‘சுயசக்தி’யே சுயமாக வெளுக்கும் நுரையின் இரகசியம். இந்த சக்திதான் ஆடைகளிலிருந்து தானாகவே அழுக்கைப் போக்க உதவுகிறது. சுய சக்தி வாய்ந்த சோப்பானது அழுக்கைத் தொட்டவுடன் அதைப் பற்றிக் கொள்ளுகிறது. ஆடைகளை ஸன்லைட் சோப்பின் நுரையில் நனைத்துப் பிறகு தண்ணீரில் அலசினவுடன் நுரையோடு அழுக்கும் போய்விடுகிறது.”



ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 66-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

கல்கி பொருளடக்கம்

மலர் 4 இதழ் 12 | 1944 அக்டோபர் 22 | தாரண ஆ ஐப்பசி 6

என்ன சேதி?	...	7
நிகழ்ச்சிச் சித்திரம்	உம்மன்	8
ஹிட்லருக்கு ஒரு வார்த்தை	...	10
வட்டமேஜை	...	13
வான சஞ்சாரம்	இசைத்தேனீ	14
சிவகாமியின் சபதம்	கல்கி	17
சொர்க்கமே இறங்கியது!	டி. கே. சி.	26
பர மண்டலத்தில்	நாடோடி	28
பாவம், ஹரிஹரன்!	ஸோமாஸ்	30
சுயம் வரம் (பரிசு பெற்ற கதை)	ஸ்ரீதரம் குருஸ்வாமி	33
காலக்ஷேபம்	...	40
அஷ்டாவக்கிரன்	ராஜாஜி	42
நினைந்ததும் நடந்ததும்	சாவி	44
மனச் சாட்சி	வஸந்தன்	48
தெய்வத் தாத்தா	விந்தன்	51

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

தஞ்சை ஜில்லாவிலுள்ள 'பந்த(ணை)நல்லூர்' என்னும் கிராமத்துக்கு தேசப் பிரசித்தி அளித்தவர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை. இலங்கை முதல் இமயம் வரையில் உள்ள நடனக் கலைப் பிரியர்களுக் கெல்லாம் பந்தநல்லூர் இன்று ஸ்தல யாத்திரைக் குரிய கலாக்ஷேத்திரமாக விளங்குவதற்குக் காரணம் இந்தப் பரத கலைப் பேராசிரியர்தான்.





ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை பாக்கியசாலி. அவருடைய இளம் பிராயத்தில் பரத நாட்டியக் கலையானது பெரிய மனிதர்களுடைய ஆதரவைப் பெற்ற 'கேளிக்கை'யாக இருந்து வந்ததைக் கண்டார். பிறகு, அக்கலை சீரும் சிறப்பும் இழந்து அடியோடு மறைந்துபோன காலத்தையும் கண்டார். மீண்டும் பரதக்கலை புத்துயிர் பெற்று, அறிஞர்களும் கலைஞர்களும் போற்ற அரியாசனம் ஏறியிருக்கும் இந்தக் காலத்தையும் தம் கண் முன்னால் காண்கிறார்!


இன்று ஸ்ரீமதி ருக்மணி தேவி உள்ளிட்ட எத்தனையோ பேர் பந்தநல்லூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையைப் பரதநாட்டிய குருவாகக் கொண்டாடுவதில் பெருமை கொண்டிருக்கின்றனர்.

அத்தகைய அவருடைய சிஷ்யப் பெண்களுக்குள்ளே வயதில் சிறியவளாயினும் கலையில் சிறந்து விளங்கும் குமாரி ஜயலக்ஷ்மியின் அபூர்வ அபிநயத் தோற்றங்களை இந்த வருஷத்துக் "கல்கி" தீபாவளி மலரில் நேயர்கள் கண்டு களித்திருப்பார்கள்; பால் வடியும் குழந்தை முகத்தில் என்னென்ன அற்புதமான இருதய பாவங்கள் வெளியாகியிருக்கின்றன என்பதைக் கண்டு வியந்திருப்பார்கள். அப்படி வியக்கும்போது, குமாரி ஜயலக்ஷ்மிக்கு அந்த அற்புதக் கலைச் செல்வத்தை உவந்து அளித்த "நாட்டிய கலா நிதி"யையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுமாறு அவருடைய உருவப் படத்தை இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

ராஜாஜி சொல்கிருர்


நமது சமஸ்தானாதிபதிகள்
அவரவர்களுடைய சமஸ்தானங்களின்
பிரஜைகளுக்கு ஏக சக்கராதிபதிகள்!
பிரிட்டிஷாருக்கு அவர்கள் அருமை மிகுந்த
ஆருயிர் நண்பர்கள்
அவர்களின் தோளோடுதோள் நின்று
ஒத்துழைப்புச் செய்யும் சகாக்கள்.
அதேசமயத்தில், அவர்களுடைய மிகவும்
கீழ்ப்படிதலுள்ள ஊழியர்களுமாவார்கள்


மாஸ்கோவில் சர்ச்சிலும் ஸ்டாலினும் குதூகலமாக ஆறுமணிநேர விருந்துண்டு களித்திருக்கையில், சீனாவின் நெருக்கடியான நிலைமை பற்றிச் சியாங்காய்ஷேக் அழுதுகொண்டிருந்தார்.


பொருத்தமோ, இல்லையோ உங்கள் பெண்ணுக்கும் என் பையனுக்கும் பிடித்துப்போய்விட்டால், கலியாணத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை.
போலந்து கமிட்டி (மாஸ்கோ)
போலந்து சர்க்கார் (லண்டன்)
லண்டனில் வெகு காலமாக இருந்துவரும் போலந்து சர்க்காருக்கும், மாஸ்கோவில் புதிதாக ஏற்பட்டிருக்கும் போலந்து நிர்வாகக் கமிட்டிக்கும் சமரசம் உண்டு பண்ணுவது சர்ச்சில் ருஷியாவுக்குப் போனதின் முக்கிய காரணங்களில் ஒன்று என்று சொல்லப் படுகிறது.

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 12

என்ன சேதி?

ஆசி மொழி

நமது தீபாவளி மலரை முழுதும் படித்துப் பார்த்த பிறகு ராஜாஜி அவர்கள் சொன்னது :—"எந்தப் புத்தகத்தை அல்லது பத்திரிகையைப் பிரித்தாலும் முதலில் அதில் உள்ள பிழை தான் என் கண்ணில் படுவது வழக்கம். ஆனால் இந்த வருஷத்துக் 'கல்கி' தீபாவளி மலரில் ஒரு பிழையும் என் கண்ணில் படவில்லை. விஷயப் பிழையும் கிடையாது; அச்சுப் பிழையும் கிடையாது. அதோடு கட்டுரை, கதை எதைப் படித்தாலும் இந்தத் தடவை புத்தப் புதியதாய்த் தோன்றுகிறது. எதுவும் பழைய விஷயமாகக் காணப் படவில்லை."

மேற்படி ஆசி மொழியை இந்த வருஷத் தீபாவளியில் நமக்குக் கிடைத்த பெறற்கரிய பரிசாகக் கருதி மகிழ்ச்சியடைந்தோம். ஆண்டுதோறும் நமது தீபாவளி மலருக்கு ராஜாஜியிடமிருந்து இத்தகைய நல்லுரையைப் பெற்றால், அதைக் காட்டிலும் நாம் பெறக்கூடிய பாக்கியம் வேறில்லை என்று கருதுவோம்.

வாழ்த்துரை

நம்முடைய காரியத்தை நாமே பாராட்டிக் கொள்வது என்று ஏற்படும் போது, அதை அரை குறையாகச் செய்வதில் அர்த்தமில்லையல்லவா? ஆகையினால் தான், இதற்கு மேல் பாராட்டு மொழி வேறில்லையென்னும்படியாக, நமது தீபாவளி மலரை "1944-ம் வருஷத்து உலக அற்புதம்" என்று குறிப்பிட்டிருந்தோம். "அவ்விதம் குறிப்பிட்டது வெறும் உபசாரப் பாராட்டு மொழியல்ல; — உண்மையாகவே உலக அற்புதம் என்று நமது தீபாவளி மலரைச் சொல்லலாம்" என்பதாக நூற்றுக் கணக்கான நேயர்கள் எழுதியிருக்கும் வாழ்த்துரைகளிலிருந்து நமக்கு நிச்சயமாகிறது. அவற்றில் சிலவற்றை நமது அடுத்த இதழில் வெளியிடலாமென எண்ணியிருக்கிறோம். இங்கே, வாழ்த்துரைகளின் மூலம் தங்களுடைய அன்பையும் அபிமானத்தையும் தெரிவித்திருக்கும் நேயர்களுக்கெல்லாம் நமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். மலர் கிடைக்காத காரணத்தினால் கோபமாகவும் வருத்தமாகவும் கடிதம் எழுதியிருக்கும் நேயர்களிடம் மறுபடியும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலையும் காரணமும்

காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர் டாக்டர் சையத் மகமதை அக்டோபர் 7-ம் தேதியன்று இந்திய சர்க்கார் விடுதலை செய்து விட்டார்கள். தேக அசௌகர்யம் காரணமாக அவர் விடுதலை செய்யப்பட்டதாக முதலில் செய்திகள் வந்தன. பின்னர், இந்தச் செய்திகளை மறுத்து, தேக அசௌகரியத்துக்கும் அவர் விடுதலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சர்க்கார் அறிக்கை கூறிற்று.

நல்லதுதான்; எப்படி டாக்டர் சையத் மகமதைச் சிறையில் அடைக்க ஒருவிதக் காரணமுமில்லையோ, அப்படியே அவரை விடுதலை செய்யவும் காரணம் இல்லாமலிருப்பது ரொம்பவும் பொருத்தமானது. பொருத்தம் என்பது மட்டுமல்ல; காரணமில்லாமல் சிறையிலடைத்ததற்குக் காரணமில்லாமல் விடுதலை செய்ததைத் தகுந்த பிராயச்சித்தமென்றுகூட நாம் கருதுகிறோம். மற்றக் காங்கிரஸ் தலைவர்களையும் இவ்வாறே இந்திய சர்க்கார் விடுதலை செய்து, செய்த தவறுக்குப் பரிகாரம் தேடிக் கொள்வார்களாக!

ஹிட்லருக்கு ஒரு வார்த்தை!

அடால்ப் ஹிட்லருக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம்...... ஆனால் நிஜமாக ஒரு வார்த்தை போதுமா? "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; நல்ல மனிதருக்கு ஒரு வார்த்தை!" என்றுதானே பழமொழி சொல்லுகிறது? ஹிட்லர் நல்ல மனிதரா, என்ன? அடே அப்பா! உலகிலே எல்லாரும் அறிந்த 'பொல்லாத' மனிதராயிற்றே? அவருக்கு ஒரே ஒரு வார்த்தை சொல்வதில் உபயோகமில்லை தான். ஆகையால், சில வார்த்தைகள் சொல்லிப் பார்க்கலாம்.

ஹிட்லருக்கு முக்கியமாக நாம் சொல்ல விரும்பிய அந்த ஒரு வார்த்தை என்னவென்றால்: "ஒழிக!" என்பதுதான். அதாவது ஹிட்லரைப் பெரிய மனது செய்து தயவு பண்ணி ஒழிந்து போகும்படி கேட்டுக் கொள்கிறோம். அவருடைய நன்மையைக் கருதியேதான் இதை நாம் அவருக்குச் சொல்கிறோம். நம்முடைய கோரிக்கையை ஏற்று — நம்முடைய புத்திமதியை ஒப்புக்கொண்டு — அவர் என்றைக்கு ஒழிந்து போகிறாரோ, அன்றைக்கு ஜெர்மனிக்கு நல்ல காலம் பிறக்கும்; உலகத்துக்கும் நல்ல காலம் பிறக்கும். அப்படி ஜெர்மனிக்கும் உலகத்துக்கும் நல்ல காலம் பிறந்தாலும் பிறக்காவிட்டாலும், (அல்லது அந்த நல்ல காலம் செத்துப் பிறந்து தொலைந்தாலும்,) ஹிட்லருக்காவது நிச்சயமாக நல்ல காலம் பிறக்கும் என்று உறுதி கூறுகிறோம்.

நம்முடைய புத்திமதியைப் பின்பற்றுவதற்கு (அதாவது 'ஒழிந்து போத'லுக்கு) ஹிட்லர் எந்த முறையை வேணுமானாலும் கைப்பற்றலாம். யுத்தத்தை நிறுத்திவிட்டு அவர் ஜெர்மனியை விட்டு ஓடிப் போகலாம்; அல்லது நேசக் கட்சியாரிடம் சரணாகதி அடையலாம்; அல்லது ஜெர்மனியிலுள்ள மிகச் சிறந்த பைத்தியக்கார விடுதிக்குப் போய்ச் சேரலாம்; அல்லது ஜெர்மனியின் அதி சாமர்த்திய விஞ்ஞான நிபுணர்கள் கண்டு பிடிக்கும் புதிய இரகசிய முறையில் அவர் ஒழிந்தாலும் ஒழியலாம்!

அவ்விதம் ஏதாவது ஒரு முறையில் ஹிட்லர் ஒழிந்து போய்விட்டால், அப்புறம் அவருக்கு எப்படி நல்ல காலம் பிறக்கும் என்று கேட்கிறீர்களா? அப்படிக் கேளுங்கள்: சொல்கிறோம்.

மற்றதெல்லாம் ஒரு புறமிருக்க "ஹிட்லர் விழுந்தார்" அல்லது "ஒழிந்தார்" அல்லது "மறைந்தார்" என்ற செய்தி கிடைத்ததும், அவருடைய உருவப் படத்தை நமது "கல்கி" அட்டையில் போடுவதாக எண்ணியிருக்கிறோம்! இதைக் காட்டிலும் ஹிட்லருக்குப் பிறக்கக்கூடிய நல்ல காலம் வேறு என்ன இருக்கிறது?

"கல்கி" அட்டையில் வரக்கூடிய அதிர்ஷ்டம் அவ்வளவு அலட்சியம் செய்யக்கூடியதல்லவென்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறோம். தளபதி மாண்ட் கோமரியின் படத்தைக் "கல்கி" அட்டையில் போட்டோம். அடுத்த வாரத்தில் அவருக்கு 'பீல்ட் மார்ஷல்' பதவி கிடைத்தது. நார்மண்டியிலும் பிரான்ஸிலும் அவருக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்தது. இப்போது மனுஷர் ஜெர்மனியின் எல்லைப்புறத்தில் நின்று ஸீக்பிரீட் அரண்களைத் தகர்த்தெறிந்து கொண்டிருக்கிறார்!

இராணுவ தந்திரங்களில் மாண்ட் கோமரிக்குச் சற்றும் சளைக்காதவரான இந்திரஜித்து ரோமலை நாம் அட்டையில் போடவில்லை. அவருடைய கதி என்னவாயிற்று? பாவம்! போர்க்களத்தில் காயம் பட்டு விழுந்தார்; மோட்டார் விபத்துக்கு உள்ளானார்; தோல்வி



அடால்ப் ஹிட்லர்

மேல் தோல்வி யடைந்து பின் வாங்கினார்; கடைசியில் செத்தே போனார்!

இதையெல்லாம் ஹிட்லர் சிந்தித்துப் பார்த்தாரானால், முக்கியமாக அவரை அட்டைப் படத்தில் போடுவதற்கு நாம் காத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தாரானால், உடனே யுத்தத்தை நிறுத்திவிட்டு ஒழிந்து போவதற்கு ஆசைப்படுவார் என்றே நம்புகிறோம்.



மார்ஷல் ரோமல்

மற்றப்படி, வேறு விதத்தில், யுத்தத்தை நிறுத்துவதற்கு ஹிட்லர் அவசரப்படுவதாகத் தெரியவில்லையாதலால் தான் இம்மாதிரி நாம் ஆசை காட்ட வேண்டியதாயிருக்கிறது.

* * *

நார்மண்டியில் பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைகள் இறங்கிய பிறகு அதி வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தன. அவை ஜெர்மனியின் எல்லையை மிதித்தாகி விட்டது என்று செய்தி வந்து ஒரு மாதத்துக்கு மேலாகிறது. ஆனால் எல்லையை மிதித்த இடத்தில் மேலும் மிதித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். எங்கும் சில மைல் தூரத்துக்கு மேல் ஜெர்மனிக்குள் நேசப் படைகள் பிரவேசித்திருப்பதாகத் தெரியவில்லை. ஸீக்பிரீட் அரணைப் பற்றி ஜெர்மானியர் பெருமையடித்துக் கொண்டதெல்லாம் ஒருவாறு உண்மை என்றே தோன்றுகிறது.

கிழக்கு அரங்கத்திலும் ருஷியப் படைகள் அதி வேகமாக முன்னேறியதெல்லாம் ஜெர்மானியர் கைப்பற்றியிருந்த மற்ற நாடுகளிலேதான். ஜெர்மன் எல்லைக்கு வந்ததும் ருஷியப் படைகளுக்கும் முட்டுக்கட்டை போடப்படுகிறது.

போலந்தின் தலை நகரமான வார்ஸா இன்னமும் ஜெர்மானியர் வசந்தான் இருந்து வருகிறது.

இதையெல்லாம் பார்த்தால், ஜெர்மானியர் வெளிநாடுகளிலே செய்த யுத்தத்தைக் காட்டிலும் ஜெர்மனியின் எல்லையிலே செய்யப் போகும் யுத்தம் பன்மடங்கு மூர்க்கமாயும் பிடிவாதமாயுமிருக்குமென்று தோன்றுகிறது.

ஹிட்லரின் அந்தரங்க நம்பிக்கைக்குப் பாத்திரமான எஸ். எஸ். துருப்புக்கள் ஜெர்மன் எல்லைப் புறத்தில் முன்னணியில் நின்று போரிடுவதாகவும், ஏறக்குறைய "ஜப்பானியரைப் போல் அவ்வளவு மூர்த்தண்யமாக அவர்கள் போரிடுகிறார்கள்(!)" என்றும் செய்திகள் வருகின்றன.

இது மட்டுமல்ல; ஸீக்பிரீட் அரண்களைத் தாண்டி ஜெர்மனிக்குள்ளேயே நேசப் படைகள் புகுந்து விட்டால், அதற்குப் பிறகும் ஜெர்மானியர் மூர்க்கத்தனமாயும் மூர்த்தண்யமாயும் சண்டை போடுவார்கள் என்று தோன்றுகிறது. இதற்கு வேண்டிய மூல பலத்தைத் திரட்ட ஹிட்லர் நாலு நாளைக்கு முன்னால் உத்தரவு போட்டிருக்கிறார். ஜெர்மனியில் 16 வயதுக்கு மேல் 60 வயதுவரை உள்ள ஆண் மக்கள் எல்லாரையும் தேசப் பாதுகாப்புப் படையில் சேர்ப்பதற்கும், ராணுவப் பயிற்சி அளிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

தினந்தோறும், ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம் என்ற கணக்கில் நேச விமானங்கள் ஜெர்மனிக்குள் புகுந்து குண்டுகளைப் பொழிந்து ஹதாஹதம் செய்து கொண்டிருக்கும் நிலைமையிலேதான் மேற்கண்ட விதமான நீடித்த தற்காப்பு யுத்தத்துக்கு ஜெர்மானிய மக்கள் ஆயத்தம் செய்யப்படுகிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்போது நமக்கு ஜெர்மனியின் பேரிலும் ஹிட்லர் பேரிலும் எவ்வளவு வெறுப்பும் துவேஷமும் இருந்த போதிலும், ஒரு பக்கம் அவர்களுடைய வீரத்தைப் பற்றி வியப்பும் ஏற்படுகிறது அல்லவா?

* * *

ஹிட்லரைச் சீக்கிரத்தில் யுத்தத்தை நிறுத்திவிட்டு ஒழிந்து போகும்படி நாம் சிபார்சு செய்வதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், அந்தப் 'பொல்லாத' மனிதரிடமுள்ள நல்ல அம்சங்களைப் பாராட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் சீக்கிரத்தில் வேண்டும் என்பதற்காகத்தான்.

ஒரு மனுஷன் நமது பகைவனாயிருக்கிற வரையில், அவனிடமுள்ள நல்ல அம்சங்கள் நம்முடைய கண்ணுக்குத் தெரிவதில்லை. தெரிந்தாலும் பாராட்டிச் சொல்ல நமக்கு மனம் வருவதில்லை. ஒருவேளை மனமிருந்தாலும், அவ்விதம் செய்வதினால் நம்முடைய கட்சிக்குப் பாதகம் நேரலாம் என்று சும்மா இருந்து விடுகிறோம்.

ஆனால் பகைவன் ஒழிந்து போய் விட்டால், பின்னர் அவனிடமிருந்த நல்ல அம்சங்களைச் சொல்வதிலும், அவனுடைய வீர தீரங்களைப் பாராட்டுவதிலும் நமக்குத் தயக்க மிருப்பதில்லை. ஏன், அதிலே பெருமையும் கொள்கிறோம்!

இராமாயணத்திலும், மகா பாரதத்திலும் கூட இராவணாதி ராட்சதர்களின் வீரதீர சாமர்த்தியங்களைப் பற்றியும், கௌரவர்களின் பராக்கிரமங்களைப் பற்றியும் பிரமாதமாகத்தான் சொல்லியிருக்கிறது.

தசகண்ட இராவணன் அவ்வளவு பிரம்மாண்ட சக்தி படைத்தவனுயில்லாம லிருந்தால், இராமருடைய வீர பராக்கிரமத்துக்கு அவ்வளவு மகிமை ஏற்பட்டிராது.

கர்ணன் அத்தகைய வீரதி வீரனுயில்லாவிட்டால், அர்ச்சுனனுடைய காண்டீபத்துக்கு அவ்வளவு பெருமை கிடைத்திராது.

எனவே, எதிரி எவ்வளவுக்கு எவ்வளவு மகத்தானவனே, அவ்வளவுக்கு அவனை வென்றவர்களின் பெருமையும் அதிகமாகிறது.

இப்படிப் பார்க்கும்போது, பிற்காலத்தில் சரித்திரம் எழுதுகிறவர்கள், ஜெர்மனிக்கு நேர்ந்திருக்கும் இந்த நெருக்கடியான தருணத்தில் ஹிட்லர் காட்டும் போர்த் திறமையையும், ஜெர்மானியர் பல்லைக் கடித்துக் கொண்டு உறுதியாகப் பிடிவாதமாக நிற்கும் அதிசயத்தையும் பற்றிப் பெரிதும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. பிரிட்டிஷ் — அமெரிக்கச் சரித்திரக்காரர்கள் கூடத்தான் பாராட்டப் போகிறார்கள்.

அப்படிப் பிற்காலத்தில் அவர்கள் எல்லாரும் பாராட்டப்போகிற ஜெர்மானியரின் தீரத்தையும் ஹிட்லரின் போர்த் திறமையையும் இப்போதே நாம் கொஞ்சம் பாராட்டித் தொலைப்பது சாத்தியமாகும் பொருட்டுத்தான் ஹிட்லரை நாம் ஒழிந்து போகச் சொல்கிறோம்.

மேலும், ஜெர்மானியரின் இவ்வளவு வீர தீரம், பிடிவாதம், போர்த் திறமை எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவும் கடலில் கரைத்த பெருங்காயமாகவும் நிஷ்பிரயோஜனமாகப் போகிறதே என்பதை எண்ணியும் ஹிட்லருக்கு யுத்தத்தை நிறுத்தும்படி யோசனை சொல்கிறோம்.

ஆம்; என்ன வீர தீரம் காட்டி என்ன? என்ன சௌரிய பராக்கிரமம் காட்டி என்ன? விதி என்பது ஒன்று இருக்கத்தானே செய்கிறது? அது ஹிட்லருக்கு விரோதமா யிருக்கிறது என்பதுதான் எப்பொழுதோ தெரிந்து போயிற்றே?

விதி ஹிட்லருக்கு அனுகூலமா யிருக்கும் பட்சத்தில் அவர் ருஷியாவுக்குள் அடி எடுத்து வைத்திருப்பாரா? அவருடைய தீட்சண்யமான புத்தி அப்போது திடீரென்று அவ்வளவு கட்டையாய்ப் போயிருக்குமா?

நாலு வருஷத்துக்கு முன்னல் பிரிட்டன் ஏறக்குறைய நிராதரவான நிலைமையில் இருந்தது. ஒரு ஓட்டை டாங்கி, ஒரு பொத்தல் பாம்பர் விமானம்கூட இல்லாம லிருந்தது. பிரிட்டன் மேல் படை யெடுப்பதற்கு அந்த சந்தர்ப்பத்தைக் கை நழுவவிட்ட ஹிட்லரின் புத்திக் குறைவைப் பற்றிச் சர்ச்சிலே இடித்துக் காட்டி யிருக்கிறார். கிரீட் தீவில் கையாண்ட ஆகாசப் படையெடுப்பு தந்திரத்தை ஹிட்லர் அப்போது பிரிட்டன் விஷயத்தில் கையாண்டிருந்தால்,......ஆஹா! அதை நினைத்துப் பார்க்கவே பயங்கரமா யிருக்கிறது! இன்னும், ஹிட்லருடைய இரகசிய ஆயுதமான பறக்கும் குண்டை அப்போது மட்டும் கையாண்டிருந்தால், ... அம்மம்மா! இப்பொழுதே லண்டனில் பாதி வீடுகள் நாசமாகி யிருக்கும்போது அச்சமயம் என்ன தான் ஆகி யிருக்காது?

ஆம்; விதி ஹிட்லருக்குப் பாதகமாகவும் நேசக் கட்சிக்குச் சாதகமாகவும் இருக்கும்போது, என்ன வீரப் போர் புரிந்துதான் என்ன பயன்? ஜெர்மனியில் ஆண் குலமே நசித்துப் போகும்படியான சர்வ நாசம் நேர்வதைத் தவிர வேறு பயன் ஒன்றுமில்லை.

* * *

இது எல்லாவற்றையும் காட்டிலும் இன்னொரு பரம முக்கியமான காரணத்தை உத்தேசித்து, யுத்தத்தை உடனே நிறுத்தி விட்டு "ஒழிக!" என்று ஹிட்லருக்குச் சொல்கிறோம்.

அக்டோபர் மீ 24௳ இதோ நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

அன்றைய தினம் யுத்தம் முடியப் போகிறதென்று கல்கத்தா வீதியில் ஓடிய டிராம் வண்டியில் திபேத் லாமா ஜோசியம் சொல்லியிருக்கிறார்!

அந்த லாமாவின் ஜோசியத்தைப் பலிக்கச் செய்வதற்காகவாவது ஹிட்லர் நாளது 24௳ செவ்வாய்க்கிழமை பளிச்சென்று துப்பாக்கியைக் கீழே போட்டு, பட் என்று யுத்தத்தை நிறுத்தி விட்டு, தாமும் ஒழிந்து போகும்படி தயவு பண்ணிக் கேட்டுக் கொள்கிறோம்.

வட்டமேஜை

ஆசிரியர், "கல்கி" சென்னை.

ஐயா, தங்கள் 8-10-44 தேதி பத்திரிகையில் "பாரதி பிறந்தார்" என்னும் கட்டுரையின் கடைசியில் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்துக்கு, அநேகர் பொருளுதவி செய்ய முன்வரக் கூடுமென நினைக்கிறேன். என் சக்திக்குத் தகுந்த தொகைக்கு இத்துடன் தங்கள் பெயருக்கு ஒரு 'செக்' அனுப்பியிருக்கிறேன். எட்டயாபுரத்துக்கு யாருடைய விலாசத்துக்கு அனுப்புவது என்று தெரியாதபடியால், தங்களுக்கு இந்த சிரமம் கொடுக்க நேரிட்டதைக் குறித்து வருந்துகிறேன். என்றாலும், தாங்கள் இந்த சிரமத்தைப் பொருட்படுத்த மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன்.

அதி சீக்கிரத்தில் எட்டயாபுரத்து இளைஞர்களின் மிகவும் நியாயமான ஆவல் பூர்த்தி அடைந்து, பாரதி ஞாபகார்த்த புத்தகசாலை ஆரம்ப விழாவுக்குத் தங்களை அவர்கள் கூப்பிட்டு, மறுமுறை தாங்கள் அவ்வூர் போய் வந்த வைபவத்தைத் தம் பத்திரிகை வாயிலாகவே எங்களுக் கெல்லாம் எடுத்துச் சொல்வீர்கள் என்று பூரண நம்பிக்கையுடனிருக்கும்,

தங்கள்,

மயிலாப்பூர்.
11—10—44.


சி. ரகுநாதன்.

[பிள்ளையார் சுழி போட்டுச் சுபகரமாக ஆரம்பித்திருக்கும் மேற்படி கடிதத்துடன் ஐந்து ரூபாய்க்கு ஒரு செக்கும் வந்து சேர்ந்தது. அதை என்ன செய்வதென்று தெரியாமல் கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

எட்டயாபுரத்தில் பாரதியின் ஞாபகார்த்தமாக ஒரு வாசகசாலை அமைக்க வேண்டுமானால் குறைந்த பட்சம் அதற்கு ஒரு பெரிய ஐந்து ரூபாய் அதாவது ஐயாயிரம் ரூபாயாவது வேண்டும். நண்பர் ஸ்ரீ சி. ரகுநாதன் எதிர் பார்ப்பது போல் இந்தக் காரியத்துக்குப் பொருளுதவி செய்ய முன் வரக் கூடியவர்கள் அநேகம் பேர் உண்டா? அன்னை கஸ்தூரிபா நிதி போன்ற பல தர்ம காரியங்களுக்குச் சமீபத்திலே தான் தமிழ்மக்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களை மேலும் தற்சமயம் தொந்தரவு செய்வது நியாயமா?......

இத்தகைய எண்ணங்களினால் தயக்கம் உண்டான போதிலும், ஒரு அவசியமான-உத்தமமான-காரியத்தைச் செய்வதற்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை வீண் சந்தேகங்களினால் கை நழுவ விடுவதையும் நான் விரும்பவில்லை.

எனவே, எல்லாவற்றிற்கும் கடிதத்தைப் பிரசுரித்து, பாரதியார் பிறந்த எட்டயாபுரத்தில் பாரதியாரின் ஞாபகார்த்தமாக ஒரு புத்தகசாலை ஏற்படுத்துவது அவசியமா, அதற்குப் பிரயத்தனம் இப்போது தொடங்க வேண்டியதுதானா என்னும் விஷயங்களைத் தமிழ் மக்களின் தீர்ப்புக்கே விட்டு விடுவதென்று முடிவு செய்தேன்.



ஸ்ரீ சி. ரகுநாதனைப்போல் இன்னும் பல நேயர்கள் முன் வந்து சிறு தொகைகளோ பெரிய தொகைகளோ அனுப்பி வைத்தால், அவர்களுடைய பெயர்களைக் "கல்கி"யில் முறையாக வெளியிடுவதுடன், குறைந்த பட்சம் ஐயாயிரம் ரூபாய் வசூலானதும், பெரியோர்களைக் கலந்து கொண்டு, நல்ல முறையில் ஞாபகச் சின்னத்தை அமைக்க ஏற்பாடு செய்யலாம். அந்தமாதிரி ஒருவரும் முன் வரா விட்டால், சந்தர்ப்பம் அவ்வளவு சரியில்லையென்று தெரிந்து கொண்டு, மேற்படி ஐந்து ரூபாய் செக்கை ஸ்ரீ சி. ரகுநாதனுக்கே திருப்பி அனுப்பி விடுகிறேன்.

கூடிய சீக்கிரத்தில் நேயர்களின் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். —ஆசிரியர்.]



அத்தியாயம் 25

புள்ளலூர்ச் சண்டை

கண்ணபிரான் ரதத்தை விட்டுக் குதித்து, குதிரைகளின் தலைக் கயிறுகளைப் பிடித்துக் கொண்டே, சிவகாமியை நெருங்கி வந்து, "தங்காய்! இதென்ன? இங்கே எப்பொழுது வந்தீர்கள்? இது என்ன ஊர்?" என்று துரிதமாய்க் கேட்டான்.

"அண்ணா! சிதம்பரம் போகலாமென்று கிளம்பி வந்தோம். வழியிலே இங்கே தங்கினோம். இந்த ஊருக்கு அசோகபுரம் என்று பெயராம். அதோ அசோக மகாராஜாவின் ஸ்தம்பம் தெரிகிறதே; நீங்கள் பார்க்கவில்லையா?" என்றாள் சிவகாமி.

"அதையெல்லாம் பார்க்க எனக்கு இப்போது சாவகாசமில்லை. ஆமாம், தங்காய்! நீங்கள் என்னத்திற்காக இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு யாத்திரை கிளம்பினீர்கள்?......"

"அந்தக் காட்டு வீட்டில் இந்த யுத்த காலத்திலே தனியாக இருப்பானேன் என்றுதான் கிளம்பினோம். குமார சக்கரவர்த்தியுந்தான் எங்களை அடியோடு மறந்து விட்டார்......"

"என்ன வார்த்தை, அம்மா, சொல்கிறாய்? மாமல்லராவது, உங்களை மறப்பதாவது? போர்க்களத்துக்குப் போகும்படி சக்கரவர்த்தியிடமிருந்து அநுமதி வந்ததும், முதலில் உங்கள் வீட்டைத் தேடிக்கொண்டு தானே வந்தோம்? வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டதும் குமார சக்கரவர்த்திக்கு என்ன கோபம் வந்தது, தெரியுமா?"

"எட்டு மாதம் எங்களை எட்டிப் பாராமலே இருந்தவருக்குக் கோபம் வேறேயா?......போகட்டும்; எங்கே இப்படி எல்லாரும் தலை தெறிக்க ஓடுகிறீர்கள்?"

"புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி நீங்கள் கேள்விப்படவில்லையா?" என்று சொல்லிக் கொண்டே கண்ணன் ரதத்தில் ஏறினான்.

"ஓகோ! சண்டைக்குப் பயந்து கொண்டா இப்படி ஓடுகிறீர்கள்?" என்று சிவகாமி பரிகாசச் சிரிப்புடன் கேட்டாள்.

"இல்லை, அம்மா, இல்லை. சண்டைக்குப் பயந்து ஓடுகிறவர்களை நாங்கள் துரத்திக் கொண்டு ஓடுகிறோம். தங்காய்! நீ மட்டும் இங்கேயே இருந்தால், நான் திரும்பி வரும்போது இந்த ரதத்தின் சக்கரத்திலே கங்கபாடி அரசன் துர்விநீதனைக் கட்டிக்கொண்டு வருவதைப் பார்ப்பாய்!" என்று சொல்லிக் கொண்டே கண்ணன் சாட்டையை உயர்த்தினான்.

"அண்ணா! நான் கட்டாயம் இங்கேயே இருக்கிறேன்... மாமல்லரிடமும் சொல்லுங்கள்!" என்று கூறி, மறுபடியும் தயக்கத்துடன், "நான் ஏதாவது தவறு செய்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளும்படி அவரிடம் சொல்லுங்கள்!" என்றாள்.

அதே சமயத்தில் கண்ணன் சாட்டையைச் சுளீர் என்று கொடுக்கவே, குதிரைகள் பிய்த்துக் கொண்டு கிளம்பின. கண்ணன் தலையை மட்டும் திருப்பி 'ஆகட்டும்' என்பதற்கு அறிகுறியாகக் குனிந்து சமிக்ஞை செய்தான்.

மறுகணம் ரதம் மாயமாய்ப் பறந்து சென்று விட்டது.

அப்போது உள்ளே இருந்து வந்த ஆயனர், "சிவகாமி! யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்? ரதத்தில் போனது யார்?" என்று கேட்டார்.

"கண்ணபிரான், அப்பா! ரதத்துக்கு முன்னால் குதிரைமேல் மாமல்லரும் பரஞ்சோதியும் போனார்கள்!"

"அப்படியா? நாம் அவர்களை விட்டு விட்டு வந்தாலும், அவர்கள் நம்மை விடமாட்டார்கள் போலிருக்கிறதே?"

"அவர்கள் நமக்காக வரவில்லை, அப்பா!"

"நமக்காக அவர்கள் ஏன் வரப் போகிறார்கள்? சிற்பியின் வீட்டைத் தேடிச் சக்கரவர்த்திகள் வந்த காலம் எல்லாம் போய்விட்டது, சிவகாமி!"

"அப்படிச் சொல்லாதீர்கள், அப்பா! கோட்டையை விட்டுக் கிளம்ப அநுமதி கிடைத்தவுடனே மாமல்லர் நம்முடைய வீட்டைத் தேடிக் கொண்டுதான் வந்தாராம்."

"அப்படியானால், குண்டோதரன் சொன்னது உண்மைதானா?" என்றார் ஆயனர்.

"ஆமாம், நாம் வீட்டில் இல்லாமற் போனதில் மாமல்லருக்குக் கோபம் என்பதும் உண்மைதான்."

"அதனால்தான் நான் சொன்னேன், இருக்கும் இடத்திலேயே இருப்போம் என்று. நீ பிடிவாதம் பிடித்து, கிளம்ப வேண்டுமென்று ஒற்றைக் காலால் நின்றாய்!"

ஆயனருக்கு மனம் கசந்து போயிருந்தபடியால் இப்படியெல்லாம் பிறர்மேல் குறை சொல்வது கொஞ்ச நாளாக வழக்கமாய்ப் போயிருந்தது. எனினும், இப்போது அவர் கூறியது உண்மையானபடியால், சிவகாமிக்குப் பெரிதும் வேதனை உண்டாயிற்று.

"போனதைப் பற்றிச் சொல்லி என்ன பயன், அப்பா!"

"ஒன்றுமில்லைதான்; இருந்தாலும் இந்த வழியாய்ப் போனவர்கள் சற்று நின்று நம்மைப் பார்த்து விட்டுப் போகக்கூடாதா? ஒரு காலத்தில் குமார சக்கரவர்த்தி நம்மிடம் எவ்வளவு பிரியமாயிருந்தார்?"

"பிரியத்துக்கு இப்போதுதான் என்ன குறைவு வந்தது? இது யுத்த காலமல்லவா? அதனால் எல்லாருக்கும் அவசரமாயிருக்கிறது. திரும்பி வரும்போது மாமல்லர் இங்கே வந்து நம்மைப் பார்ப்பார் என்று கண்ணபிரான் சொன்னான், அப்பா!"

"அந்தமட்டில் சந்தோஷம்! ஆனால் எதற்காக இப்படி எல்லாரும் ஓடுகிறார்களாம்?"

"புள்ளலூர் என்னுமிடத்தில் பெரிய யுத்தம் நடந்ததாம்!......"

"ஓகோ! யுத்த களத்திலிருந்துதான் இப்படி ஓடுகிறார்களாக்கும்! ஆஹா! காலம் எப்படி மாறிவிட்டது! முன் காலத்தில் போருக்குப் புறப்படுகிறவர்கள் வெற்றி அல்லது வீர சொர்க்கம் என்ற உறுதியுடன் கிளம்புவார்கள். போர்க்களத்தில் முதுகு காட்டி ஓடுவதைப் போல் கேவலம் வேறொன்றுமில்லை என்று நினைப்பார்கள்......"

"அப்பா! இந்த யுத்தத்தில் போர்க்களத்திலிருந்து ஓடியவர்கள் எதிரிகள்தான்; அந்த வரையில் திருப்திதானே?"

"அதிலே என்ன திருப்தி? சத்த வீரர்களை வென்று ஜயக் கொடி நாட்டினால் புகழும் பெருமையும் உண்டு. புறமுதுகிட்டு ஓடுகிறவர்களைத் துரத்தி ஜயிப்பதில் என்ன கௌரவம் இருக்கிறது?"

எந்த வழியிலும் ஆயனரைத் திருப்தி செய்ய முடியாது என்பதைக் கண்ட சிவகாமி அவருடன் பேசுவதில் பயனில்லையென்று தீர்மானித்து மௌனம் பூண்டாள். இருவருடைய உள்ளங்களும் வெவ்வேறு சிந்தனையில் ஆழ்ந்தன.

* * *

அன்று சூரியன் அஸ்தமிக்க ஒரு நாழிகை இருக்கும்போது, குண்டோதரன் திடும்பிரவேசமாக வந்து சேர்ந்தான். அவன் எங்கே போயிருந்தான், புத்த பிக்ஷுவைக் கண்டு பிடித்தானா, குதிரை திரும்பக் கிடைத்ததா என்னும் விஷயங்களைப் பற்றி ஆயனரும் சிவகாமியும் ஆவலுடன் அவனை விசாரித்தார்கள்.

"அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள்! உங்களுடைய சொல்லைத் தட்டிவிட்டு புத்த பிக்ஷுவைப் பிடிப்பதற்காக ஓடினாலும் ஓடினேன். நேரே யுத்த களத்திலேயே போய் மாட்டிக் கொண்டேன். அப்பப்பா! அந்த மாதிரி பயங்கர யுத்தத்தை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!" என்றான் குண்டோதரன்.

சிவகாமியின் பரபரப்பு இன்னும் அதிகமாகி, "என்ன சண்டை? எங்கே நடந்தது? சண்டை முடிவு என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

"ஆஹா! புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி நீங்கள் இன்னும் கேள்விப்படவில்லையா? ஆமாம்; இந்தப் பாழடைந்த புத்த மடத்தில் புகுந்து கொண்டிருந்தால் எப்படித் தெரியப் போகிறது?" என்று சொல்லி விட்டுக் குண்டோதரன் புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி அவர்களுக்கு விவரமாகக் கூறினான். தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற அந்தச் சண்டையைப் பற்றி இப்போது வாசகர்களும் தெரிந்து கொள்வது அவசியமாகும்:—

வாதாபி புலிகேசியின் சைனியம் பல்லவ சாம்ராஜ்யத்தின்மீது படையெடுத்துச் சில நாளைக்கெல்லாம், கங்க நாட்டு அரசன் துர்விநீதனுடைய சைன்யம் திரண்டு பல்லவ ராஜ்யத்தின் மேற்கு எல்லையில் வந்து நின்றது. மகேந்திர பல்லவரின் சைன்யம் வாதாபி சைன்யத்தினால் முறியடிக்கப் பட்டது என்று கேட்டதும் பல்லவ ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாக அந்த சைன்யம் காத்துக் கொண்டிருந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் திடீரென்று துர்விநீதனுக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, தெரியவில்லை. ஒரு நாள் கங்க நாட்டுச் சைன்யம் பல்லவ ராஜ்யத்துக்குள் நுழைந்து விட்டதென்றும், காஞ்சியை நோக்கி முன்னேறி வருகிறதென்றும் தெரிந்தது. இதையறிந்த மகேந்திர பல்லவர் வடக்குப் போர் முனையிலிருந்து குமார சக்கரவர்த்திக்குக் கட்டளை அனுப்பினார். திருக்கழுக் குன்றத்திலுள்ள பாதுகாப்புப் படையுடன் சென்று கங்க நாட்டுச் சைன்யம் காஞ்சியை அணுகுவதற்கு முன் அதை எதிர்க்கும்படியாகச் சொல்லி அனுப்பினார். இத்தகைய கட்டளைக்காக எட்டு மாத காலமாகத் துடிதுடித்துக் கொண்டிருந்த மாமல்ல நரசிம்மர் தளபதி பரஞ்சோதியுடன் உடனே கிளம்பிச் சென்று திருக்கழுக்குன்றத்திலிருந்த படைக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றார். காஞ்சி நகருக்குத் தென்மேற்கே இரண்டு காத தூரத்தில் புள்ளலூர் கிராமத்து எல்லையில் இரண்டு சைன்யங்களும் சந்தித்தன.

மாமல்லர் தலைமை வகித்த பல்லவ சைன்யத்தைக் காட்டிலும் கங்க நாட்டுச் சைன்யம் மூன்று மடங்கு பெரியது. ஆனாலும் மாமல்லரின் வீரப்படை கங்கநாட்டுச் சைன்யத்தின் மேல் எதிர்பாராத சமயத்தில் இடி விழுவது போல் விழுந்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் கையாண்ட யுத்த தந்திரங்களும், போர்க்களத்தில் முன்னணியில் நின்று நிகழ்த்திய வீரச்செயல்கள் பல்லவ வீரர்களுக்கு இணையில்லாத உற்சாகத்தையும் துணிச்சலையும் அளித்தன. சிறிது நேரத்துக்கெல்லாம் இரணகளத்தில் இரத்த ஆறு ஓடத் தொடங்கியது. கால் போனவர்களும், கை போனவர்களும், தலையற்று விழுந்தவர்களும், மார்பில் குத்துண்டவர்களும் ...... அப்பப்பா! அந்தக் கோரக் காட்சியைக் குண்டோதரனால் பார்க்கச் சகிக்கவில்லை.

அந்தச் சமயத்தில் கங்க சைன்யத்தை மற்றொரு பக்கத்தில் இன்னொரு புதிய படை தாக்குவதாக வதந்தி உண்டாயிற்று. அவ்வளவுதான்! அத்தனை நேரமும் ஒருவாறு தைரியமாய்ப் போரிட்டு வந்த கங்க சைன்யத்தின் வீரர்களைப் பீதி பிடித்தது. தோல்வி நிச்சயமாகி விட்டபடியால் இனிமேல் உயிர் பிழைத்தாற் போதும் என்று கங்க வீரர்கள் கண்ட கண்ட இடமெல்லாம் சிதறி ஓட ஆரம்பித்தார்கள். அவர்களைக் கிழக்கே யிருந்து மாமல்லரின் சைன்யமும், மேற்கே வளைத்துக் கொண்டு வந்து புதிதாக வந்த சைன்யமும் தாக்கியபடியாலும், வடக்கே பாலாற்றில் பெரு வெள்ளம் ஓடியபடியாலும், பெரும்பாலோர் தெற்குத் திக்கை நோக்கியே ஓடினார்கள். ஓடிய

வர்களைத் துரத்திக்கொண்டு பல்லவ வீரர்களும் ஓடினார்கள். ஆனால் ஓடியவர்கள் அதிகமாகவும் துரத்தியவர்கள் கொஞ்சமாகவும் இருந்தபடியால், அதிகம் பேரைப் பிடிக்கவோ சிறைப்படுத்தவோ முடியவில்லை.

புதிதாக வந்த பல்லவ வீரர்கள் வெகு சொற்பமானவர்கள்; அவர்கள் வஜ்ரபாஹு என்னும் மகா வீரனுடைய தலைமையின் கீழ் வந்திருந்தார்கள். பல்லவ சைன்யத்துக்கு வெற்றி நிச்சயம் என்றும், எதிரிகள் சிதறி ஓடுகிறார்கள் என்றும் தெரிய வந்ததும் அந்த வீரர்களும் திரும்பிப் போய் விட்டார்கள். அவர்கள் திரும்பிப் போவதற்கு முன்னால் அவர்களுடைய தலைவன் வஜ்ரபாஹுவும் மாமல்ல நரசிம்மரும் சிறிது நேரம் சந்தித்துப் பேசினார்கள். அவர்களுக்குள் மிகவும் காரமான சம்பாஷணை நடந்தது. குமார சக்கரவர்த்தியின் தனிப் பெரும் வெற்றியாக முடிய வேண்டிய யுத்தத்தில் வஜ்ரபாஹு வந்து தலையிட்டது அவருக்குப் பிடிக்கவில்லையென்று தெரிந்தது.

இதற்கிடையில் கங்க நாட்டரசன் துர்விநீதன் பட்டத்து யானைமேல் ஏறிக்கொண்டு தெற்கு திக்கை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததாகத் தகவல் வந்தது. அவனை எப்படியாவது கைப்பற்றிச் சிறைப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு மாமல்லரும் பரஞ்சோதியும் பல்லவ சைன்யத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துத் தெற்கு நோக்கிப் பல வழிகளிலும் போகச் சொல்லி விட்டுத் தாங்களும் அதே திசையில் ஒரு சிறு படையுடன் அதி வேகமாகச் சென்றார்கள்.

போர்க்களத்தில் தெறி கெட்டு ஓடிய ஒரு குதிரையைக் கைப்பற்றி அதன்மேல் ஏறிக்கொண்டு குண்டோதரனும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தான். துரதிர்ஷ்டவசமாக வழியில் அவன் ஏறி வந்த குதிரை காலை ஒடித்துக் கொண்டது. அதனால் அவன் பின்னால் தங்கிவிடும்படி நேர்ந்தது. குதிரையை அப்படியே விட்டு விட்டுக் கால் நடையாக நடந்து அசோகபுரம் வந்து சேர்ந்தான்.

அத்தியாயம் 26

“திருப்பாற் கடல்”

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்கக் கேட்க, மேலும் மேலும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆவல் ஆயனருக்கும் சிவகாமிக்கும் பொங்கிப் பெருகியது. முக்கியமாகப் போர்க்களத்தில் மாமல்லர் நிகழ்த்திய அதி அற்புத வீரச் செயல்களைப் பற்றிக் கேட்பதில் சிவகாமி அடங்காத தாகம் கொண்டிருந்தாள். குண்டோதரனும் குதூகலத்துடன் அந்த வீரச் செயல்களை வர்ணித்தான்:—

“ஆஹா! போர்க்களத்திலே எதிரிகளுக்கிடையில் புகுந்து மாமல்லர் வீர வாளைச் சுழற்றியபோது எப்படியிருந்தது தெரியுமா? அது கேவலம் வாளாகவே தோன்றவில்லை. திருமாலின் சக்ராயுதத்தைப் போலவே சுழன்று சுழன்று ஜொலித்தது! அந்த வாளிலிருந்து கணந்தோறும் நூறு மின்னல்கள் மின்னின. ஒவ்வொரு மின்னலும் ஒவ்வொரு எதிரியின் தலையைத் துண்டித்து எறிந்தது. ஆகா! அர்த்த ராத்திரியில் நடந்த யுத்தத்திலுங் கூட, போர்க்களத்திலே மாமல்லர் எங்கே இருக்கிறார் என்பதை எளிதில் தெரிந்து கொள்ளும்படி இருந்தது. அவருடைய சுழலும் வாளின் ஜொலிப்பும், அவருடைய கண்களிலிருந்து பறந்த தீப்பொறிகளும் அப்படி அவர் இருக்கும் இடத்தைப் பிரகாசமாகச் செய்து கொண்டிருந்தன. இன்னும், அவர் போன போன இடமெல்லாம் இருபுறத்திலும் எதிரிகளின் உயிரற்ற உடல்கள் மலை போல் குவிந்தன. இந்த அடையாளங்களினால் எந்தக் கணத்திலும் மாமல்லர் எங்கே இருக்கிறார் என்பதைக் கண்டு பிடிப்பது சாத்தியமாயிருந்தது......”

இப்படி வர்ணித்துக் கொண்டே இருந்த குண்டோதரன் திடீரென்று நிறுத்தி, "குருவே! இந்த விஹாரத்திலிருந்த வயோதிக புத்த பிக்ஷு எங்கே?" என்று கேட்டான்.

"அப்பனே! நாங்கள் வந்ததிலிருந்து அவர் பெரும்பாலும் இங்கே இருப்பதில்லை. அநேகமாக சைத்ய*த்திலேயே இருக்கிறார். தினம் இரண்டு தடவை இங்கே வந்து எங்களுக்கு என்ன வேண்டும் என்று விசாரித்து விட்டுப் போய்விடுகிறார்!" என்றார் ஆயனர்.

"குருவே! அவரை எனக்கு அவசரமாகப் பார்க்க வேண்டும். பார்த்து விட்டு இதோ வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனான்.

* * *

குண்டோதரன் விஹாரத்திலிருந்து கிளம்பி வாசலில் வந்தபோது சூரியன் அஸ்தமித்து அந்தி மயங்கிக் கொண்டிருந்த நேரம். ஆனால், அன்று சாதாரண அந்தி நேரமாகக் காணப்படவில்லை. இரவானது திடீரென்று இருண்டு திரண்டு நாலாபுறமும் சூழ்ந்து வந்ததாகத் தோன்றியது. இதற்குக் காரணம் என்னவென்று குண்டோதரன் வானத்தை நோக்கியபோது, வடக்குத் திக்கில் மைபோல் கறுத்த கொண்டல்கள் திரள் திரளாக மேலே எழுந்து வருவதைக் கண்டான். "ஆஹா! இன்றிரவு பெருங் காற்றும் மழையும் திருவிளையாடல் புரியப் போகின்றன. பகலெல்லாம் அவ்வளவு புழுக்கமாயிருந்த காரணம் இதுதான் போலும்! இன்று இராத்திரி வெட்ட வெளியில் இருக்க நேர்ந்தவர்களின் கதி பரிதாபமானதுதான்!" என்று குண்டோதரன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

அவர்கள் தங்கியிருந்த விஹாரத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனித்திருந்த பாழடைந்த புத்த சைத்யத்தைக் குண்டோதரன் நெருங்கியபோது உள்ளேயிருந்து பேச்சுக் குரல் வருவது கேட்டுத் திடுக்கிட்டான்.

வெளியிலேயே இருள் கவிந்து சூழ்ந்திருந்த நிலையில், சைத்யத்துக்குள் குடி கொண்டிருந்த அந்தகாரம் எப்படியிருந்திருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லை. அந்தக் கன்னங் கரிய இருளின் உதவியால் குண்டோதரன், பேச்சுக் குரல் வந்த இடத்துக்கு வெகு சமீபத்தில் போய் மூச்சுக்கூடக் கெட்டியாக விடாமல் தூண் மறைவில் நின்றான். பின்வரும் சம்பாஷணை அவன் காதில் விழுந்தது :—

"உடனே, இந்தக் கணமே, அவர்களை அழைத்துக் கொண்டு கிளம்புங்கள். பொழுது விடிவதற்குள்ளாக வராக நதியைத் தாண்டிவிட வேண்டும். வழியிலுள்ள கிராமங்களில் வண்டி கிடைத்தால் ஏற்றிக் கொண்டு போங்கள். எப்படியும் நாளைச் சூரியோதயத்துக்குள் வராக நதியைத் தாண்டி விடுங்கள்."

"அவர்கள் கிளம்ப மறுத்தால்...?"

"ஆ! அது ஒரு தொல்லைதான். ஏதோ ஒரு சூழ்ச்சியினால், நான் போட்ட திட்டமெல்லாம் வீணாய்ப் போய்விட்டது. ஆனாலும் புத்த பகவான் அருளால் எல்லாம் ஒழுங்காகி விடும். அவர்களிடம் எதையாவது சொல்லிப் புறப்படச் செய்யுங்கள். இங்கே பெரிய சண்டை நடக்கப் போவதாகச் சொல்லுங்கள். இரு தரப்பு சைன்யங்களும் இவ்விடத்தை நோக்கி வருவதாகச் சொல்லும் ...... இதெல்லாம் ஒன்றும் பலிக்கா விட்டால், ...தெரிகிறதா?... ஒன்றும் பலிக்காவிட்டால், திருப்பாற்கடல் உடைப்பு எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொல்லுங்கள்!"

"சுவாமி......?"

"ஆம்; திருப்பாற்கடல் ஏற்கனவே அலை மோதிக் கொண்டிருக்கிறது. புத்த பகவான் கருணையினால் இன்று மழை பெய்தால், கட்டாயம் கரை உடைத்துக் கொள்ளும் ..." என்று கூறி, நாகநந்தி தமது ஆழ்ந்த பயங்கரக் குரலில் சிரித்தார்.

அவர் மேலும் கூறிய மொழிகள் முன்னைக் காட்டிலும் மெதுவான குரலில் வந்தன :—

"அப்படியும் அவர்கள் கிளம்பாமல், உடைப்பு எடுத்து வெள்ளமும்

---

* 'விஹாரம்' என்பது, புத்த பெருமானின் கோயிலும் புத்த பிக்ஷுக்கள் தங்கும் மடமும் சேர்ந்து அமைந்தது. 'சைத்யம்' என்பது புத்த பகவானின் தனிப்பட்ட கோயில்.

வந்து விட்டால், என்ன செய்ய வேண்டும் தெரியுமா? விஹாரத்தில் இன்னும் ஒரு தெப்பம் மீதி இருக்கிறதல்லவா?''

"இருக்கிறது.''

"அதில் ஏற்றிக்கொண்டு, போன மாதம் நாம் பார்த்து வைத்த பாறை மேட்டுக்குப் போய்ச் சேருங்கள். மற்றவர்கள் எப்படியானாலும் சிவகாமியைக் கட்டாயம் காப்பாற்றியாக வேண்டும். தெரியுமா, சுவாமி!''

"தெரியும், அடிகளே!''

"புத்த பகவான் ஆணை!''

"புத்த பகவான் ஆணை!''


மேற்படி சம்பாஷணையின் கடைசிப் பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்த போது, குண்டோதரனுக்கு நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. நாகநந்தியின் சிரிப்பு அவனுடைய தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது. அன்று ராத்திரி ஏதோ பெரிய விபரீதம் ஏற்படப் போகிற



தென்பதையும் அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு தன்னுடைய லையில் சார்ந்திருக்கிற தென்பதை ம் அவன் உணர்ந்தான். அந்தக் காரியத்தில் தனக்கு உதவி புரியும்படி தான் வழிபடும் தெய்வமாகிய பழனி மலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளை வேண்டிக் கொண்டான்.

சப்பாஷணை முடிந்ததும் பிக்ஷுக்கள் இருவரும் சைத்யத்திலிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து குண்டோதரனும் வந்தான். இதற்குள்ளாக மாலை போய், இரவு வந்து, நன்றாக இருட்டி விட்டது. வட கிழக்கிலிருந்து திரண்டு வந்த மேகங்கள் வானத்தைப் பெரும்பாலும் மூடியிருந்தாலும், தெற்கிலும் மேற்கிலும் இன்னும் சில நட்சத்திரங்கள் தெரிந்தன.

சைத்யத்திலிருந்து வெளியேறிய பிக்ஷுக்களில் ஒருவர் அருகிலிருந்த விஹாரத்தை நோக்கிச் சென்றார்.



மற்றொருவர் சைத்யத்தைச் சுற்றிக் கொண்டு தென் மேற்குத் திசையை நோக்கிச் சென்றார்.

ஒரு கணம் குண்டோதரனுடைய மனதில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது. விஹாரத்துக்குப் போய் ஆயனருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டாமா என்று எண்ணினான். ஆனால், என்ன எச்சரிக்கை செய்வது? எப்படியும் அவர்கள் காப்பாற்றப் படுவார்கள் என்று மேற்படி சம்பாஷணையி லிருந்தே தெரிந்தது. அச்சந்தர்ப்பத்தில் தன்னுடைய வேலை நாகநந்தியைப் பின் தொடர்வதுதான் என்று குண்டோதரன் தீர்மானித்தான்.

அவ்விதமே அவரைத் தொடர்ந்து சற்றுத் தூரத்திலேயே நடந்து சென்றான். இருட்டினாலும் சுழன்று அடித்த பெருங் காற்றின் சத்தத்தினாலும் தான் வருவதை அவர் கண்டு பிடிக்க முடியாது என்ற நிச்சயம் அவனுக்கு இருந்தது.

கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் பின்னால் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து அதில் நாகநந்தி ஏறிக் கொண்டார்.

"ஆஹா! திருட்டுப் போன குதிரை மறுபடியும் இன்று எனக்குக் கிடைக்கப் போகிறது!" என்று குண்டோதரன் எண்ணிக் கொண்டான்.

கணத்துக்குக் கணம் வேகமாகிக் கொண்டிருந்த காற்றினாலும் இருட்டினாலும் நாகநந்தி குதிரைமேல் ஏறிய போதிலும் மெதுவாகவே போக வேண்டியிருந்தது. எனவே, அவரைத் தொடர்ந்து குண்டோதரன் நடந்து போவது கஷ்டமாயில்லை. சில சமயம் குதிரை அடிச் சத்தம் முன்னால் கேட்கிறதா, பின்னால் கேட்கிறதா என்பது சந்தேகமாயிருந்தது. இரண்டு பக்கத்திலும் கேட்பது போலவும் இருந்தது. இது வீண் பிரமை என்று எண்ணிக் கொண்டு மேலே போய்க் கொண்டிருந்தான்.

ஏறக் குறைய மூன்று நாழிகை வழி நடந்த பிறகு, எதிரே நீண்ட மலைத் தொடர் போன்ற ஓர் இருண்ட கரை நெடுந் தூரத்துக்கு நெடுந் தூரம் தென்பட்டது.

அதே சமயத்தில் அண்டம் அதிரும் இடி முழக்கங்களுடனும், கண்ணைப் பறிக்கும் மின்னல்களுடனும் மழை பெய்யத் தொடங்கியது.

அந்த மின்னல் வெளிச்சத்தில், நாகநந்தி மேட்டின் ஓரமாக இருந்த ஒரு மரத்தில் குதிரையைக் கட்டி விட்டு அந்தக் கரையின் மேல் ஏறுவது குண்டோதரனுக்குத் தெரிந்தது. குண்டோதரன் அந்தத் திசையை நோக்கி விரைந்து சென்றான். அதே இடத்தில் மேட்டின் மீது அவனும் ஏறினான். இதற்குள் மழையில் நனைந்த காரணத்தினால் கரைமண் சேறாகி வழுக்கத் தொடங்கி விட்டபடியால், மேட்டில் ஏறுவது சுலபமாயில்லை. கடைசியில், கரையின் அடியிலிருந்து முளைத்து வளர்ந்திருந்த மரத்தின் உதவியால் கஷ்டப்பட்டு ஏறி குண்டோதரன் கரை மட்டத்தை அடைந்தபோது, பளீரென்று வீசிய மின்னல் வெளிச்சத்தில் ஒரு அபூர்வ பயங்கரக் காட்சி தென்பட்டது.

கரைக்கு அப்பால் இருந்த 'திருப்பாற் கடல்' என்னும் ஏரி, புயற் காற்றினால் கொந்தளித்து, ஒரு மகா சமுத்திரத்தைப் போல் அலை மோதிக் கொண்டு காட்சி யளித்தது. கொந்தளித்து எழுந்த அலைகள் மின்னல் வெளிச்சத்தில் வெள்ளை வெளேரென்று ஜொலித்த படியால், உண்மையிலேயே 'திருப்பாற் கடல்' என்னும் பெயர் அந்த ஏரிக்கு அச்சமயம் மிகப் பொருத்தமாயிருந்தது.

அபூர்வ சௌந்தரியத்துடன் கூடிய அந்த பயங்கரக் காட்சியைக் கண்ட அதே நேரத்தில் குண்டோதரனுடைய உடம்பின் இரத்தத்தையெல்லாம் சுண்டச் செய்யும்படியான இன்னொரு தோற்றமும் தென்பட்டது.

அலைமோதிய ஏரிக்கரையில் கையை உயரத் தூக்கிக் கொண்டு நின்ற நாகநந்தி 'ஹா ஹா ஹா!' என்று பேய்க் குரலில் சிரித்த சத்தமானது, புயல் முழக்கத்தின் ஓசையையும் அலைகளின் ஆரவார ஒலியையும் அடக்கிக் கொண்டு மேலெழுந்தது.

நாகநந்திக்குப் பக்கத்தில் ஏரிக் கரையைப் பிளந்து கொண்டு ஒரு சிறு கால்வாய் வழியாகத் தண்ணீர் ஓட ஆரம்பித்திருந்தது.

நாகநந்தி அடிகளின் காலடியில் ஒரு மண் வெட்டியும் கிடந்தது!

வான சஞ்சாரம்

"இசைத் தேனீ"

பல்லவியின் அழகு பாடகரைப் பொறுத்தது. சுக பாவமில்லாதவர்கள் பல்லவியைக் கரடுமுரடாய்க் காட்டுவதால், இக்காலத்தில் அதற்கு முன்போல் மதிப்பில்லை. ஞான பாவம், சாதக பலம், கற்பனை இவை சேர்ந்து, ராகம் தானம் பல்லவிகளை ருசிகரமாய் விளக்கிக் காட்டுவதில், எஸ். சோமசுந்தரம் திறம் கொண்டவர் என்பது அவர் அக்டோபர் 11உ சென்னை ரேடியோவில் பாடியதிலிருந்து தெரியவந்தது. சரளமான பிடிகளுடன், பைரவி ராகத்தை ஒழுங்காய் ஆலாபனை செய்தார். தானமும் அழகாயிருந்தது. 'பயமேது நமக்கு வேலும் மயிலும் சேவலும் காவலிருக்க' என்ற பல்லவியை அழுத்தம் திருத்தமாய் விளாசினார். மூன்றாம் கால நிரவலும் ஸ்வரம் பாடும் பந்தாவும் ஜிலு ஜிலுப்பாயிருந்தன.

இனிமை, காத்திரம், உதவுபடி மூன்றும் கலந்த சிறந்த ரகமான சாரீரம் படைத்தவர் ஹம்ஸ தமயந்தி. வாய்ப்பாட்டு, மிருதங்கம், பரத நாட்டியம், மூன்றிலும் தேர்ச்சி பெற்றவர். எதை முக்கியமாய் வைத்துக் கொள்வது என்பதில் தான் அவர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அத்தகையவரின் கச்சேரி 12உ சென்னையில் நடந்தது. பந்துவராளி, அடாணா முதலிய ராகங்கள் சுலபமாய் வெளிவந்தன. இவைகளைவிட உருப்படிகளில் அழகு அதிகம் காணப்பட்டது. 'அப்பராமபக்தி' கிருதியும் அதில் நிரவல் ஸ்வரங்களும் நன்றாயிருந்தன.

அன்று திருச்சி நிலையத்துக்கும் யோகந்தான். இரவில் நடந்த கமலா கிருஷ்ண மூர்த்தியின் கானம் செவிக்கு இன்பமளித்தது. இவரது குரல் சிறியதாயினும் மதுரமும் பிசிர் இல்லாத தெளிவும் கொண்டிருந்தது. நுட்பமோ அதிக வேலைப்பாடுகளோ காணப்படவில்லை. பாடியதிலெல்லாம் ஒழுங்கும், நிதானமும், எளிய நடையும் தென்பட்டன. பலஹம்ஸா, பூர்வி கல்யாணி இவை யிரண்டையும் சாலக்காய்க் கையாண்டார். தர்பார் ராகம் கச்சிதமாயிருந்தது. ஷண்முகப்பிரியாவில் திறமை முழுவதையும் காட்டினார். மொத்தத்தில் அதிக நாஸுக்குக்கு ஆசைப்பட்டு வேலைப்பாடுகளைக் குறைத்துக் கொள்வதாய்த் தெரிகிறது.

13உ சென்னையில் நடந்த கச்சேரிகளில் அய்யா வய்யங்காரின் வீணை வாத்யம் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. பழைய வித்வான். நல்ல சாதகம். இரவில் வாசித்த தேவ காந்தாரி ஆலாபனை சம்பிரதாய முறையுடன் விரு விருப்பாயிருந்தது. செஞ்சுருட்டி ராகமும் அழகாயிருந்தது.

அன்றிரவு திருச்சியிலிருந்து இனிய குரலில் சுகவழியும் அழுத்தமும் கொண்ட காம்போதி ராகமும் அதில் 'உன்னை எனக்கு' என்ற உருப்படியும் காதில் விழுந்தன. பாடியது எம். கலோசனு என்று அறிந்தேன்.

ஸ்ரீ தண்டபாணி தேசிகர் 14உ சென்னையில் செய்த கச்சேரி வெகு குஷியாயிருந்தது. பந்துவராளி ராக ஆலாபனையோடு 'நின்னு நேர நம்மினானு' கிருதியை எடுத்துக் கொண்டு 'வேத சாஸ்திர புராண' என்ற இடத்தில் நிரவல் ஸ்வரங்களை தம் முழுத் திறமையுடன் வெகு நேரம் பொழிந்தார். கல்யாணி, மோஹனம் இவைகளும் விரு விருப்பாயிருந்தன. 'இல்லை யென்பார் யாரடா' என்ற உருப்படியில் இவரிடம் விளங்கிய பாவம் பிரத்யேகம். இறுதியில் பாடிய ராகமாலிகை எல்லா வற்றிற்கும் மேலாயிருந்தது.

15உ சென்னை நிலையத்தில் கொத்தமங்கலம் ஸ்ரீநிவாஸய்யருக்குக் கிடைத்த நேரம் அரை மணியே யாயினும் தம் சரக்கு அதிக முடுக்குள்ளது என்பதைக் காட்டி விட்டார். மணிரங்கு, சக்ரவாகம், சுத்ததேசி இவைகளோடு காம்போதியையும் அலசி வாரிவிட்டார். விரு விருப்புடன் அடுக்கு சஞ்சாரங்கள், அநாயாசமான மேல் ஸ்தாயி வேலைப்பாடு இவை காணப்பட்டன. சாரீரத்துக்கும், திறமைக்கும் தகுந்தவாறு கமகங்களை அதிகம் உபயோகிப்பாரானால் இவருடைய சங்கீதம் இன்னும் மேம்படும்.


அன்று மாலை சென்னையில் நடந்த வி. சேது ராமையாவின் வயலின் கச்சேரியும் பாராட்டத் தக்கதாயிருந்தது. ஜயமனோஹரி, கல்யாணி ராகங்களை நின்று நிலைத்து அழுத்தமாய் வாசித்தார். ராக ஸ்வரூபங்கள் நன்கு விளங்கின. இவரிடம் ஒரிக்கை சாதகம் விசேஷமாய்த் தென்பட்டது.

அன்று காலையில் அங்கு பாடிய கே. வி. ஜானகிக்கு கொஞ்சம் சுருதி சேர்க்கை தகராறாயிருந்தது. ஆனால் இனிமையும் கனிப்பும் கொண்ட சாரீரம். மாலையில் சரிப்படுத்திக் கொண்டு சங்கராபரண ராகத்தை ஒரு கை பார்த்தார். அத்துடன் 'ஸஹஜகுண ராமச்சந்திர' என்ற தாம்பக்கயிறு உருப்படியையும் திறம்படச் சமாளித்து விட்டார்.

16உ தீபாவளி காலை 7-15 மணிக்கே மங்களகரமாய்த் திருச்சியிலிருந்து தர்மபுரம் அபிராம சுந்தரம் பிள்ளையின் நாதஸ்வரம் காதில் விழுந்தது. பிரதி மத்யம ராகங்கள், அபூர்வ ராகங்கள் இவைகளைக் கேட்க வேண்டுமானால் இக்காலத்தில் நாதஸ்வரக் காரர்களிடம்தான் போகவேண்டும். ஹரிகாம்போதி, ஆபோகி, வாசஸ்பதி இவைகளோடு கீரவாணியையும் திறம்பட வாசித்தார். எல்லாவற்றையும் விட 50-வது மேள கர்த்தாவான நாம நாராயணியை விஸ்தாரமாய் அழகுபட விளக்கியதுதான் அவர் கச்சேரியின் பெருமை. பல்லவியில் ராகமாலிகையை எடுத்துக் கொண்டார். நேரமில்லாததால் ஒன்றிரண்டு ராகங்களுடன் நிறுத்தவேண்டி வந்தது.

அதே நிலையத்தில் அன்று மாலையிலும் இரவிலும் நடந்த கே. எஸ். நாராயணஸ்வாமி அய்யரின் வீணைக் கச்சேரியும் குறிப்பிடத் தக்கதாயிருந்தது. கேதாரகௌளை, ஆனந்த பைரவி, கல்யாணி இந்த மூன்று ராகங்களும் சிறந்து விளங்கின.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "புது வேலை" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எல். எஸ். நாகராஜன், பூனா.



81. சொர்க்கமே இறங்கியது!

பரத்துவாஜமுனி, பரதனைப் பார்த்து "ஏன் ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை?" என்று கேட்டார். பரதன் மனசிலே பட்டுவிட்டது: "சரி; சரி! நகரத்திலிருக்கிறவர்கள் எல்லாரும் அயோக்கியர்கள்; நீதியோ முறையோ ஒன்றையும் கவனித்தபாடாக இல்லை; வீட்டையும் நாட்டையும் கட்டி அழுகிறார்கள்; அவர்கள் போகட்டும். இவன் மட்டும் என்ன, முற்றத் துறந்த முனிவனும், நாட்டை விட்டு நகரத்தை விட்டு வனத்தில் வந்து வசிக்கிறானும். உலகமே உருப்படாது இனி!" என்ற கோபத்தில் முனிவரைக் கடிந்து பேசி விட்டான்.

மனசிலுண்டான ஆங்காரத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, முனிவரிடம் தன்னுடைய உறுதியான எண்ணத்தைச் சொல்லுகிறான்.



"நம்ம சீனுவின் குழந்தைக்கு ஏற்பட்ட பணக் கஷ்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டீர்களா?"

"வேடிக்கையாயிருக்கிறதே! நாலு மாதக் குழந்தைக்கா பணக் கஷ்டம்?"

"அது இல்லை ஸார்! குழந்தை ஒரு நாலணா பணத்தை விழுங்கி விட்டு ரொம்பவும் கஷ்டப்பட்டதாம்!......"

மறையின் கேள்வற்கு
மன்இளந் தோன்றல்,பின்,
'முறையில் நீங்கி
முதுநிலம் கொள்கிலேன்:
இறைவன் காக்கில
னும்எனில்,— ஆண்டெலாம்
உறைவென் கானத்(து)
ஒருங்குட னே'என்றான்.

[மறையின் கேள்வற்கு: வேதங்களுக்கெல்லாம் உரியவரான பரத்துவாஜருக்கு: மன்இளந் தோன்றல்: இளவரசனான பரதன்; பின்: சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு; முறையின் நீங்கி முதுநிலம் கொள்கிலேன்: பரம்பரையான வரிசைக் கிரமத்தை விட்டு விலகி அந்தப் பூர்வமான ராஜ்யத்தை ஆளுகிறது என்பது முடியாத காரியம்; இறைவன் காக்கிலன் ஆம் எனில்: சக்கரவர்த்தியான ராமன் ராஜ்யத்தைப் பாதுகாக்கா விட்டால்; ஆண்டு எலாம்: பதினாலு வருஷங்களுமே; உறைவென்: வசித்து விடுவேன்; ஒருங்குடனே: ராமனோடேயே.]

அங்கிருந்த துறவிகள் எல்லாரும், முதலில் பரதனது கோபத்தைப் பார்த்தார்கள். பிறகு அவனது உறுதியையும் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்கு ஒரே அதிசயமாய்ப் போய் விட்டது. "இவனல்லவா துறவி!" என்று அதிசயிக்கிறார்கள். அவர்களது உள்ளத்தில் ஆனந்தக் கடலொன்று பொங்கி அலையடிக்க ஆரம்பித்து விட்டது.

உரைத்த வாசகம்
    கேட்டலும், உள்எழுந்(து)
இரைத்த காதல்
    இருந்தவத் தோர்க்(கு)எலாம்,
குரைத்த மேனியொ(டு)
    உள்ளங் குளிர்ந்ததால்,
அரைத்த சாந்(து)கொண்(டு)
    அப்பிய(து) என்னவே.

[உள் எழுந்து இரைத்த காதல்: இதயத்தில் எழுந்து கொவித்தது ஆனந்த வெள்ளம்; காதல் ஆனந்தம்; இருந்தவம்: பெரிய தவம்; குரைத்த மேனி: விரதங்களினால் வறண்டு திகைத்துப்போன மேனி; சாந்து: சந்தனம்; ஏதோ நன்ருய்ப் பன்னீர் விட்டு அரைத்த சந்தனத்தை மேனி மாத்திரமல்ல, உள்ளத்திலுமே அப்பியதாகத் தோன்றியது; குறிப்பு: அப்பியது என்னவே; இதிலுள்ள ஓசை எதிர்பாராத தன்மையைக் காட்டுகிறது.]

மேலே குறித்த ஆனந்தத்தோடு முனிவர் பரதனைப் பர்ண சாலைக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

ஆய காதலொ(டு)
    ஐயனைக் கொண்டு,தன்
தூய சாலை
    உறைவிடம் துன்னினான்
'மேய சேனைக்(கு)
    அமைப்பென் விருந்(து)' எனத்
தீயின் ஆகுதிச்
    செங்கையன் சிந்தித்தான்.

[ஐயனை: பரதனை; துன்னினான்: அடைந்தான்; மேய சேனைக்கு: வந்த பெரும் படைக்கெல்லாம்; அமைப்பென் விருந்து எனச் சிந்தித்தான்; விருந்து செய்ய வேண்டும் என்று எண்ணினான்; தீயின் ஆகுதிச் செங்கையன்: சதா ஹோமகுண்டத்தில் நெய்யைச் சொரிந்து கொண்டிருக்கும் சாதனத்தில் ஈடுபட்டவர்.]

பரத்வாஜ முனிவர் விருந்து அமைக்க வேண்டும் என்று நினைத்தார். அவ்வளவுதான். சொர்க்கமே மேலே யிருந்து இறங்கி அங்கு வந்து தங்கி விட்டது! அப்படித்தான் சொல்ல வேண்டும் அவர் செய்த ஏற்பாட்டை.

துறந்த செல்வன்
    நினையத், துறக்கந்தான்
பறந்து வந்து
    படிந்தது; வந்தவர்
பிறந்து வேறோர்
    உலகுபெற் றோர்என,
மறைந்து வைகினர்
    முன்னைத்தம் வாழ்(வு)எலாம்

[துறந்த செல்வன்: யாதொரு செல்வமும் இல்லாத ஆண்டி; நினைய: நினைத்த மாத்திரத்தில்; துறக்கந்தான்: சொர்க்க லோகமே; வந்து படிந்தது: வந்து தங்கியது; மறந்து வைகினர் முன்னைத் தம் வாழ்வெலாம்; தங்களுக்கு ஏற்பட்ட சாமான்ய வாழ்க்கையை மறந்தவராய் அங்குள்ள காரியங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.]

நம்முடைய நாட்டின் துறவிகளுக்குள்ள செல்வாக்கு யாருக்குமே இல்லை என்று சொல்லலாம். அரசன் என்றால் அவனுடைய செல்வாக்கு மாத்திரந்தான் அவனுக்கு உதவுவது. துறவி என்றால் பல அரசர்கள் பல பிரபுக்கள் எல்லாருடைய செல்வாக்கும் வந்து உதவும். இன்றைக்கும் நம் நாட்டில் இதைப் பார்க்கிறோமல்லவா? ஆம், ஆண்டி செய்கிற விமரிசையை அரசனும் செய்ய முடியாதுதான்!



"என்ன ஓய், உம்ம பெண் சரோஜாவுக்கு எப்பொழுது கல்யாணம்?"

"நானும்தான் இரண்டு வருஷமாகத் தேடுகிறேன். நல்ல இடமாகக் கிடைக்கவில்லை."

"எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருக்கப்படாதோ, ஸார்! இந்த ஜெயிலே இடத்துக்கா குறைச்சல்? பிமண்ணு சத்திரத்தைச் சுலபமாக வாங்கிக் கொடுத்துவிடுவேனே!"



பரமண்டலத்தில்

நாடோடி

[பர மண்டலத்தில் கர்த்தர் தம் ஆசனத்தில் வீற்றிருக்கிறார். யாரோ பலமாகக் கதவை இடிக்கும் சப்தம் கேட்கிறது.]

கர்த்தர் :—யாரது?

குரல் :—பர மண்டலத்தில் இருக்கிற எங்கள் பிதாவே! உங்கள் நாமம் பரிசுத்தப் படுவதாக! தயவு செய்து கதவைத் திறவும்.

[கர்த்தர் கதவைத் திறக்கிறார்.]

கர்த்தர் :—யாரப்பா நீ? நான் முதல் முதலில் சிருஷ்டித்த மனிதன் ஆதாமைப் போலவே இருக்கிறாயே! மானிடனா நீ?

மானிடன் :—ஆம், பிதாவே! அந்தப் பாக்கிய மானிடன்தான் நான்.

கர்த்தர் :—ஆமாம். நீ இங்கு எதற்காக வந்தாய்? மானிடர்கள் சாவதற்கு முன் இங்கு வருவது வழக்கமில்லையே!

மானிடன் :—வழக்கமில்லைதான். இருந்தும் உலகத்தில் உயிருடன் வாழ்வது மிகவும் கஷ்டமாகிக் கொண்டு வருகிறது. ஆகவே அங்கே சாவதற்கு இங்கே வந்து சாகலாம் என்றுதான் வந்தேன்.

கர்த்தர் :—ஓஹோ, யுத்த நிலைமையைச் சொல்லுகிறாயா? நான் என்னப்பா பண்ணலாம்? உலகில் மானிடர்கள் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டொழுக வேண்டும் என்று உபதேசிப்பதற்காக என் நேச குமாரனையே பூலோகத்துக்கு அனுப்பி வைத்தேன். என் குமாரன் சிலுவையில் அறையுண்டு மாண்டதுதான் மிச்சமே யொழிய ஜனங்கள் திருந்தியதாகத் தெரியவில்லை. கிறிஸ்தவர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கும் ஜனங்களை விடக் கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகள், அவிசுவாசிகள் என்று கூறும் மற்றவர்கள் தேவலை போலிருக்கிறது. "யாராவது இடது கன்னத்தில் அடித்தால் வலது கன்னத்தைக் காண்பி" என்று இயேசு உபதேசித்தார். ஆனால் கிறிஸ்தவர்கள் பிறரை இடது கன்னத்தில் அடித்து விட்டுப் பிறகு வலது கன்னத்திலும் அடிக்கிறார்கள்.

மானிடன் :—நான் தங்களைப் பார்க்க வந்தது அதற்காக அல்ல. அதாவது அந்த யுத்தத்துக்காக அல்ல.

கர்த்தர் :—என்ன! அந்த யுத்தத்துக்காக அல்ல என்றால் பூலோகத்தில் இன்னொரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதா, என்ன?

மானிடன் :—ஆம் எங்கள் பிதாவே! தங்களுக்கு என்னமோ விஷயம் ஒன்றும் தெரியாததுபோல் கூறுகிறீரே? பூலோகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதே, அது தங்களுக்குத் தெரியாதா? ஆதாமைச் சிருஷ்டித்த தாங்கள் எதற்காக ஏவாள் என்னும் பெண்ணையும் சிருஷ்டித்தீர்களாம்?

கர்த்தர் :—துணையில்லாமல் ஆதாம் கஷ்டப்படுவானே என்றுதான் ஏவாளைச் சிருஷ்டித்தேன்.

மானிடன் :—ரொம்ப அழகாய் இருக்கிறது! நீங்கள் பாட்டில் சிருஷ்டி வேலையைப் பர, பர என்று செய்து கொண்டிருந்த சமயத்தில் உலகத்தில் ஆண்கள் போதாதென்று பெண்களையும் சிருஷ்டித்து விட்டீர்கள். இப்பொழுது பெண்களைக் கட்டிக் கொண்டு கஷ்டப்படுகிறது ஆண்களாகிய நாங்களா, அல்லது தாங்களா?

கர்த்தர் :—என்னப்பா ! பெண்களைக் கட்டிக் கொண்டு நீங்கள் கஷ்டமா படுகிறீர்கள் ? ஆச்சரியமா யிருக்கிறதே !

மானிடன் :—பின் அதற்குச் சந்தேகம் வேறேயா ? ஒவ்வொரு வீட்டிலும் புருஷன் தன் மனைவியிடம் படும் அவஸ்தையை நீங்கள் பார்த்தாலல்லவோ தெரியும் !

கர்த்தர் :—என்னப்பா நீ சொல்வது விந்தையாய் இருக்கிறதே ! பெண்கள் ஸ்வபாவத்திலேயே மிருதுத் தன்மை வாய்ந்தவர்களாயிற்றே ! அவர்களிடம் நீங்கள் அவஸ்தைப் படுகிறேன் என்று சொன்னால் நம்ப முடியவில்லையே ! அது இருக்கட்டும், இப்பொழுது என்னை அதற்காக என்ன செய்ய வேண்டும் என்கிறாய் ? எதற்காக என்னைத் தேடிக்கொண்டு பூலோகத்தை விட்டுப் பரமண்டலத்துக்கு வந்தாய் !

மானிடன் :—ஆதவா ! இப்படிப் புருஷர்கள் கண்டு நடுங்கும்படி தாங்கள் ஸ்திரீகளை எப்படித்தான் சிருஷ்டித்தீர்கள் என்று தெரிந்து கொண்டு போவதற்காகத்தான்.

கர்த்தர்:—பூ ! அதற்காகவா இத்தனை சிரமப்பட்டு இங்கு வந்தாய் ? அது தான் கிறிஸ்தவ வேதத்தின் முதல் புஸ்தகமான ஆதியாகமத்தின் ஆதியிலேயே அதைப் பற்றிச் சொல்லி யிருக்கிறதே. ஆதாமைத் தூங்கப் பண்ணி அவன் விலா எலும்பிலிருந்து ஏவாளைச் சிருஷ்டித்தேன் என்று எழுதி யிருக்கிறதே !

மானிடன் :—எழுதி யிருக்கிறது. ஆனால் —

கர்த்தர் :—ஆனால் என்று இழுத்தால் ?

மானிடன் :—ஆனால் எனக்கு அதில் நம்பிக்கை யில்லை.

கர்த்தர் :—என்ன, நம்பிக்கை இல்லையா? கிறிஸ்தவ வேதத்தில் எழுதி யிருக்கிறதில் நம்பிக்கை இல்லையா ?

மானிடன் :—ஆம், இல்லை. எங்கேயாவது மனிதனின் விலா வெலும்பிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஸ்திரீக்கு மனிதனையே ஆட்டி வைக்கக் கூடிய சக்தி ஏற்படுமா ?

கர்த்தர் :—சரி, ஏற்படாதுதான். அதற்காக என்னை என்ன பண்ண வேண்டும் என்கிறாய் ?

மானிடன் :—தாங்கள் ஸ்திரீயை எப்படிச் சிருஷ்டித்தீர்கள் என்பதின் உண்மையைத் தெரிவிக்க வேண்டும் என்கிறேன்.

கர்த்தர் :—அதுதான் மனிதனின் விலா வெலும்பிலிருந்து உண்டாக்கினேன் என்று கிறிஸ்தவ வேதத்தில எழுதியிருக்கிறதே !

மானிடன் :—அதைத்தான் நான் நம்பத் தயாரா யில்லை என்று சொல்லி விட்டேனே ! இப்பொழுது என்ன சொல்கிறீர்கள் ? உண்மையைச் சொல்லப் போகிறீரா ; இல்லை தற்கொலை செய்து கொண்டு சாகட்டுமா ?

[இதைக் கேட்டுக் கர்த்தர் தம் ஆசனத்தில் துள்ளி உட்காருகிறார்.]

கர்த்தர் :—அசட்டுப் பிசட்டென்று ஏதாவது காரியம் செய்து விடாதே. உண்மையைச் சொல்லிவிடுகிறேன். ஆனால் வேறு யாரிடமும் சொல்வதில்லை யென்று சொன்னால்தான் கூறுவேன்.

மானிடன் :—ஏன், சொன்னால் என்ன ?

கர்த்தர் :—சரியாப் போச்சு ! இப்பவே மனிதர்களுக்கு கிறிஸ்தவ வேதத்தின் மீதுள்ள நம்பிக்கை சொல்லவேண்டாம் ! இதையும் நீ வெளிப்படுத்தி விட்டாயோ, கேட்கவே வேண்டாம்.

மானிடன் :—சரி, நான் யாரிடமும் சொல்ல வில்லை. உண்மையைச் சொல்லுங்கள்.

கர்த்தர் :—நிச்சயமாய் ஒருவரிடமும் சொல்ல மாட்டாயே !

மானிடன் :—ஊஹூம். சொல்ல வில்லை.

கர்த்தர் :— (அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் பார்த்து விட்டு) இங்கே, வா. காதோடு சொல்கிறேன். நான் ஆதாமைத் தூங்கப் பண்ணிவிட்டு அவன் விலா வெலும்பிலிருந்துதான் ஏவாளைச் சிருஷ்டிக்க வேண்டும் என்று இருந்தேன். ஆனால் அவசரத்தில்.........

மானிடன் :—ஆனால் அவசரத்தில் என்ன பண்ணினீர் ?

கர்த்தர் :—ஆத்திரப் படாதே. சொல்கிறேன். அவசரத்தில் ஆதாமின் விலா எலும்புக்குப் பதில் அவன் முதுகெலும்பை எடுத்து ஏவாளாகச் சிருஷ்டித்து விட்டேன்.

மானிடன் :—கர்த்தரே ! இப்படியா செய்து வைத்தீர் ! அதுதான் புருஷர்கள் முதுகெலும்பில்லாமல் ஸ்திரீகளைக் கண்டு நடுங்குகிறார்கள் ! சரி, இனி பூலோகத்துக்குப் போய் என்ன பண்ணப் போகிறேன் ! அதைவிட, இங்கேயே மூர்ச்சை போட்டு விழுந்து விடுகிறேன்.

[மூர்ச்சையாய்க் கீழே விழுகிறான்.]

பாவம், ஹரிஹரன்!

சோமாஸ்

ஹரிஹரன் தலை தீபாவளிக்காகத் தன் மாமனார் வீட்டுக்குப் புறப்படும்போது, ஒரு பெரிய இன்பக் கோட்டையைத் தன் மனோ ராஜ்யத்தில் கட்டியிருந்தான். உலகம் என்பது காலேஜ், டென்னிஸ் கிளப், தன் வீடு இவ்வளவே என்று நினைத்துக் கொண்டிருந்த அவன் இப்போது மாமனார் வீட்டையும் அவைகளுடன் சேர்த்துக் கொண்டான்.

ரயிலில் ஒரே மாப்பிள்ளைக் கூட்டம். இந்தக் கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டு ரயில் திருச்சி டவுன் ஸ்டேஷனை யடைந்தது. ஹரிஹரனின் மாமனார் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்.

வீட்டு வாசலில் வண்டியை விட்டுக் கீழே இறங்கினான் ஹரிஹரன். "அத்திம்பேரே, வாங்கோ! வாங்கோ!" என்று கத்திக் கொண்டே விச்சு ஓடி வந்து ஹரிஹரனின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"அக்கா, அத்திம்பேர் வந்து விட்டார்!" என்று விச்சு கத்திக்கொண்டே உள்ளே சென்றான். விச்சுவின் குரலைக் கேட்டதும், கூடத்திலிருந்த மீனு, 'சரேல்' என்று எழுந்து ஓடி, மின்னலைப் போல் மறைந்தாள்.

மீனு மறைந்ததும் அவள் தாயார் கோணிக் கோணிக் கொண்டு வெளிப்பட்டாள். தூர இருந்தபடியே, "அம்மா சௌக்கியமா?" என்று ஹரிஹரனைப் பார்த்தும் பார்க்காமலும் சாஸ்டுக்காகக் கேட்டாள். ஹரிஹரனும் அதே தோரணையில் பதில் சொன்னான்.

★

அன்று முழுவதும் அந்த அசட்டுப் பெண் மீனு ஒரு முறையாவது தலை காட்ட வேண்டுமே! அதுதான் இல்லை. அன்று இரவு முழுவதும் மீனுவை மனம் போனபடி திட்டிக் கொண்டே சிவராத்திரி விரதம் அனுஷ்டித்தான் ஹரிஹரன்.

இதனால் தீபாவளி ஸ்நானத்துக்கு மாப்பிள்ளையை எழுப்ப வேண்டிய கஷ்டம் ஒருவருக்கும் இருக்கவில்லை. தூங்கினால் தானே அவனை எழுப்பவேண்டிய கஷ்டம் யாருக்காவது இருக்கும்?

எண்ணெய் ஸ்நானம் ஆனதும் மீனு வருவாள் என்னும் உத்தேசத்துடன் ஹரிஹரன் மாடி யறைக்குப் போய் உட்கார்ந்து கொண்டான். தனியிடமா யிருந்தால் அவளைச் சந்தித்துப் பேசலாமல்லவா? இந்தச் சமயத்தில் இங்கிதம் அறியாத மாமனார் அங்கே வந்து சேர்ந்தார்.

"மாப்பிள்ளை, என்ன இங்கே வந்து விட்டீர்கள்! தீபாவளிப் பக்ஷணம் எடுத்துக் கொள்ள வேண்டாமோ?" என்றார் அந்த அசட்டு மாமனார்.

அவர் என்னத்தைக் கண்டார்? பாவம்! பழைய காலத்து மனிதர்! தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குப் போவது பக்ஷணம் தின்னத்தானா? முதல் முதலில் மனைவியைப் பார்த்துப் பேசுவதில் உள்ள இன்பம் மைசூர்ப் பாகு, ஜாங்கிரி, சோமாஸ் இவைகளைச் சாப்பிடுவதில் வந்துவிடுமா?



மாப்பிள்ளை மௌனம் சாதிக்கவே, "இங்கேயே கொண்டு வந்து விடட்டுமா?" என்று மாமனார் அசடு வழியக் கேட்டார். அதற்கும் அவன் மௌனம் சாதிக்கவே, அவர் பேசாமல் மாடியை விட்டுக் கீழே இறங்கிப் போய் விட்டார்.

அவர் மறைந்ததும் ஹரிஹரன் பலமாகத் தலையில் இரண்டு தடவை அடித்துக் கொண்டான். மாமனார்மேல் வந்த கோபத்தை எப்படித் தீர்த்துக் கொள்வது? இந்த மனுஷனையா அவன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்?

இந்தச் சமயத்தில், புதுப்புடவையின் சலசலப்புச் சத்தம் அவன் காதில் விழுந்தது. அடுத்த நிமிஷம் ஹரிஹரனின் மனக்குறை தீர, மீனு கையில் பக்ஷணத் தட்டுடன் காட்சியளித்தாள்.

ஆனால், அந்தப் பொல்லாத மீனு, பக்ஷணத் தட்டை மேஜைமேல் வைத்ததும், அங்கே ஒரு நிமிஷமாவது நிற்க வேண்டுமே! — ஊஹூம்!

மறுபடியும் மீனு கையில் காப்பி டம்ளருடன் அங்கே தோன்றினாள். காப்பி டம்ளரை மேஜைமேல் வைத்து விட்டு மாடிப்படியை நோக்கித் திரும்பினாள். இப்பொழுது ஹரிஹரன் அவளை விட்டு விடுவானா? அவள் கையை 'டக்' என்று பிடித்துக் கொண்டான்.

"பேச மாட்டாயா? நேற்று முழுவதும் தான் ஏன் என்று கேட்காமலும் எட்டிக் கூடப் பார்க்காமலும் இருந்தாய்! இன்று கூடவா......?"

இந்த ரஸமான கட்டத்தில் மாமனார் சுந்தரமய்யர், அங்கே பிரசன்னமானார். "மாப்பிள்ளை ஸார், கொஞ்சம் கீழே வாருங்கோ! நம்ம ஊர் வைத்தியர் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமென்கிறார்......!" என்று திருவாய் மலர்ந்தார்.

அதே நிமிஷத்தில் மீனு மாடிப் படியை நோக்கி ஓட்டமெடுத்தாள்.

"மடையன்! வைத்தியனும்! சமய சந்தர்ப்பம் தெரியாத இவனுக்கு வைத்தியம் என்ன தெரியப்போகிறது?" என்று முணு முணுத்துக் கொண்டே ஹரிஹரன் அந்த வைத்தியருக்குக் காட்சியளித்தான்.

இராத்திரி சாப்பாடு முடிந்ததும் ஹரிஹரன் ஹாலில் போய் உட்கார்ந்தான். அந்தச் சமயம் மீனு அந்தப் பக்கம் வந்தாள். ஹரிஹரன் எழுந்து அவளைத் தொடர்ந்து சென்றான்.

அவன் தன்னைத் தொடர்ந்து வருவதைப் பார்த்த மீனு, ஒரு மூலையில் தயங்கி நின்றாள்.

"ராத்திரி சினிமாவுக்குப் போவோம், வருகிறாயா?" என்று கேட்டான் ஹரிஹரன். அவள் பதில் ஒன்றும் சொல்லாமல் 'களுக்' கென்று சிரித்து விட்டுப் போய் விட்டாள்.

ஹரிஹரனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ஏனெனில், அவன் மீனுவுடன் தனியாகக் கைகோர்த்துக் கொண்டு சினிமாவுக்குப் போகப் போகிறானல்லவா?—உல்லாசமாக ஆங்கில கீதம் ஒன்றைச் சீட்டியடித்துக் கொண்டே தன் அறைக்குச் சென்று ஹரிஹரன், உடை மாற்றிக் கொண்டு மீனுவின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அவளும் கதவோரத்தில் நாணிக் கோணிக் கொண்டு வந்து நின்றாள்.

அவளைப் பார்த்ததும், "சரி, போகலாமா?" என்று கேட்டான் ஹரிஹரன்.

"அம்மா வந்து......!" என்று ஆரம்பித்தாள் மீனு.

"அம்மா வேண்டாம்; நீ மட்டும் வா, போதும்!"

"இல்லை ... நாழியாயிடுத்தாம்...ராத்திரியாட்டத்துக்குப் போக வேண்டாம் என்கிறாள் ......"

இதைக் கேட்ட ஹரிஹரனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. "இன்றைக்குப் போய்த் தானாக வேண்டும்!" என்று இரைந்தான்.

அவனை எப்படிச் சமாதானப்படுத்துவதென்று மீனுவுக்குத் தெரியவில்லை. அம்மா சொல்லிக் கொடுத்ததைத்தான் அவளுக்குச் சொல்லத் தெரியும்! — அடி அசட்டுப் பெண்ணே!

★

மறுநாள் காலை மீனு, கையில் டிபன் தட்டுடன் மாடியறைக்கு வந்தாள். அவளைக் கண்டதும் ஹரிஹரன் விறைப்பாக அவளைப் பாராதவன் மாதிரி உட்கார்ந்து கொண்டான். அஜந்தா சிற்ப ஓவியம்போல் அசையாமல் வெகு நேரம் அவள் நின்று பார்த்தாள். போலீஸ்காரனா என்ன, அலுப்பு சலிப்பில்லாமல் நின்று கொண்டிருப்பதற்கு?—டிபனை மேஜைமேல் வைத்து விட்டுப் போகக் கால் எடுத்து வைத்தாள் மீனு.

ஹரிஹரன் ஆத்திரத்துடன் எழுந்து, "இந்தா, எனக்கு ஒன்றும் வேண்டாம். எடுத்துக் கொண்டுபோ! இந்த வீட்டில் இனிமேல் ஜலபானம்கூடச் செய்ய மாட்டேன்!" என்று கூறிவிட்டு விறைப்புடன் நின்றான். அவன் அப்படி நின்றது, கையில்

குழந்தையுடன் நிற்கும் மேனகையை விசுவாமித்திரர் வெறுத்துத் தள்ளித் திரும்பி நிற்கும் காட்சியைப் போலிருந்தது.

ஆனால், அந்தப் பெண் அவனை ஏதாவது கேட்க வேண்டுமே! இல்லவே இல்லை. பக்ஷணத் தட்டை யெடுத்துக் கொண்டு கீழே போய்விட்டாள்!

மணி பத்தரை அடித்தது. காலையில் காப்பி சாப்பிடாதது ஹரிஹரனுக்குப் பிரமாதமான கோபத்தையும் அளவு கடந்த பசியையும் உண்டாக்கி விட்டது.

ஹரிஹரன் என்னென்னவோ எண்ணிக் கொண்டே மனம் பொருமியபடி உட்கார்ந்திருந்தான். அழுது கொண்டே மீனு தன் காலில் வந்து விழவேண்டுமென்றும், அவளுடன் மாமியாரும் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அவர்கள் நிபந்தனையின்றிச் சரணாகதி யடைந்தாலொழிய ஹரிஹரன் தன் உண்ணாவிரதத்தைப் பூர்த்தி செய்வதாயில்லை!

இந்தச் சமயத்தில் மாடிக்கு வந்த மீனு, "அம்மா உங்களைச் சாப்பிட வரச் சொன்னாள்!" என்று அழுகை கலந்த குரலில் சொன்னாள்.

"நீ கூப்பிட வில்லையே? அம்மாதானே கூப்பிட்டாள்?"

இந்தச் சமயத்தில், அறைக்கு வெளியேயிருந்த அவள் அம்மா, "நீங்கள் சாப்பிட்டால்தான் எல்லாரும் சாப்பிடுவோம்னு சொல்லேண்டி!" என்று கூறிக் கொண்டே மாப்பிள்ளைக்கு எதிரே வந்து, "இருட்டு வேளையிலே சிறிசுகள் இரண்டு பேரும் தனியாப் போகணுமென்னு நேற்றைக்கு வேண்டாம் என்றேன். அவள் சிறிசுதானே! அதை அழகாகச் சொல்லத் தெரியல்லே! எழுந்திருந்து சாப்பிட வாருங்கோ! இன்று இராத்திரி வேணுமானால் சினிமாவுக்குப் போகலாம்!" என்றாள்.

*

அன்று இரவு எல்லோரும் சினிமாவுக்குக் கிளம்பினார்கள். கையில் ஒரு தடியுடன், மேலே சால்வையைப் போர்த்திக் கொண்டு சுந்தரமய்யர் கிளம்பினார். மேலாக்கை இழுத்துப் போர்த்திக் கொண்டு மாமியாரும் அவருக்குப் பின்னால் கிளம்பினாள். அவர்கள் இருவரும் சினிமாவுக்குக் கிளம்புவதைப் பார்த்ததும் ஹரிஹரனுக்கு வயிற்றை என்னவோ செய்தது. ஆனால் மீனு அவர்களுக்குப் பின்னால் புதுப்புடவை கட்டிக் கொண்டு வாசனை வீச நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும், அவன் ஒன்றும் பேசவில்லை.

சினிமாக் கொட்டகைக்குப் போய் உள்ளே உட்கார்ந்ததும் ஹரிஹரனுக்கு வந்த கோபத்தை அளவிட முடியாது. கோபத்துக்குக் காரணம் இல்லாமலில்லை. ஹரிஹரன் உட்கார்ந்ததும் அவன் வலது பக்கத்தில் மைத்துனன் விச்சு உட்கார்ந்தான். இடது பக்கத்தில் அந்த விஷயந் தெரியாத மாமனார்! அவருக்குப் பக்கத்தில் மாமியார். அதற்கு அப்புறம் மீனு! இது என்ன அக்கிரமம்! ஹரிஹரன் பக்கத்தில் மீனு உட்கார வில்லையா?

படம் ஆரம்பமாயிற்று. எல்லாரும் படம் பார்த்தனர். ஆனால் ஹரிஹரன் மாத்திரம் தன் கல்யாணத்திலிருந்து இதுவரையில் நடைபெற்ற சம்பவங்களையே மனக் கண்ணினால் பார்த்து மனம் புழுங்கிக் கொண்டிருந்தான்.

ஹரிஹரன் முகக் குறியிலிருந்து அவன் மனக் குறையைத் தெரிந்து கொண்ட மாமியார், மீனுவுக்கு ஏதோ சொல்லி வைத்தாள்.

வீடு வந்து சேர்ந்ததும், மாப்பிள்ளைக்குப் படுக்கையை உதறிப் போடுவதற்காக மீனு மாடிக்கு வந்தாள். இவளிடம், "இதோ, பார்! நான் நாளை, காலையில் ஊருக்குப் போய்விடப் போகிறேன். இந்த விஷயத்தை இப்பொழுதே உன் அம்மாவிடம் சொல்லிவிடு!" என்றான்.

இதைக் கேட்ட மீனு களுக்கென்று சிரித்துவிட்டு, "நாளைக்குப் போவானேன்? இன்று ராத்திரி வண்டியிலேயே போகிறது தானே?" என்றாள்.

இதைக் கேட்டதும் ஹரிஹரன், "மீனு, என்னை யார் என்று நினைத்துப் பேசுகிறாய்? உனக்குக் கூட அவ்வளவு அலட்சியம் வந்து விட்டதா?" என்று இரைந்தான்.

"ஏன் இவ்வளவு கோபித்துக் கொள்கிறீர்கள்? நாம் இரண்டு பேரும் ரயிலிலே சேர்ந்துதானே போகப் போறோம்! எனக்கு இன்றைக்கே புறப்பட்டிருக்கப்படாதா என்று ஆவலா யிருக்கிறது. நாளைக் காலை வரையிலும் காத்துண்டிருக்கணுமே......!" என்றாள் மீனு கண்ணைச் சிமிட்டிக் கொண்டே.

"மீனு, நிஜமாகவா? நீயும் என்னோடு வரப்போகிறாயா? அப்படிச் சொல்லு!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிக்கொண்டே ஹரிஹரன் அவளை நெருங்கினான்.

முதல் பரிசுக்குச் சமஉரிமை பெற்றனவாகப் பஞ்சாயத்தார் தேர்ந்தெடுத்த இரண்டு கதைகளில் ஒன்று: பெண்ணைப் பெற்ற அன்னையின் மனோபாவத்தை அருமையாகச் சித்திரிக்கும் இந்த அழகான கதை, அன்னையின் வாய்மொழியாகவே அமைந்திருக்கிறது. ★

சிறுகதைப் போட்டி
முதற்பரிசுக் கதை
நெ. 1.

சுயம்வரம்

★

ஸ்ரீதாம் குருஸ்வாமி

“ஏண்டா, அம்பி, இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்தாயே வாசலில், அது யாருடா?” என்று கேட்டேன். இப்படி நானாகக் கேட்டுத் தெரிந்து கொண்டால்தான் உண்டு.

நம் நாட்டில் உள்ள தனி வழக்கம் இது. நம் நாட்டைப் பற்றி எழுதும் ஆங்கிலேயர் ஒவ்வொருவரும் இதை ஆச்சரியமாகக் குறிப்பிடாமல் இருப்பதில்லை. “நாம் ஒருவரோடு எவ்வளவோ சகஜமாகப் பழகுகிறோம்; அவர் வீட்டிற்கும் போகிறோம். ஆனால் அவர் மனைவியோ புத்திரியோ யார் என்பதுகூட நமக்குக் கடைசி வரையிலும் தெரியவில்லை” என்று அவர்கள் புகார் சொல்கிறார்கள். இதில் எவ்வளவோ நியாயம் இருக்கிறது.

இப்படிப் பிறர் கண்ணிலிருந்து பெண்களை மறைக்க முயல்வது நம் நாட்டின் பண்டைய அனுஷ்டானம் என்று சொல்லவே முடியாது. வீட்டில் நடக்கும் ஒவ்வொரு நல்ல காரியத்திற்கும் இன்றுகூட நூறு பேர் மத்தியில் பாரியையானவள் கூடத்தில் எஜமானன் பக்கத்தில் வந்து நின்றுதான் ஆகவேண்டும். அந்நியரான ஆங்கிலேயர் போன்றவர்களின் எதிரில் வேண்டுமானால் நாம் வர வேண்டாம். ஆனால் வாசலில் நின்று பேசிவிட்டுப் போகிற சிநேகிதனை உள்ளே கூப்பிட்டு இவர்கள் ஒரு நிமிஷம் உட்காரச் சொன்னால் என்ன? அதோடு, வீட்டிலுள்ளவர்களிடம் அந்நியோன்யமான சிநேகிதர்களை அறிமுகம் செய்து வைத்தால்தான் என்ன முழுகிப் போய் விடும்?

அம்பியைப் போய்ச் சொல்லப் போகிறேனே; அவன் அத்திம்பேர் கூட அப்படித்தான். அவர் இன்னும்கூட மோசம்! வாசல் பக்கத்து அறையில் மணிக்கணக்காய் சிநேகிதரோடு பேசிக்கொண்டேயிருப்பார். உள்ளே வந்து, “டிபன் ஏதாவது பண்ணியாயிற்றா?” என்பார். அதைத் தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு, தானே கொண்டுபோய்க் கொடுத்து விடுவார். வந்தவர் யார், என்ன, என்பதை நாமாகப் பிறகு கேட்டுத் தெரிந்து கொண்டால்தான் உண்டு. அதையும் ஒழுங்காக அவர் சொல்வது என்பது மனசு இருந்தால்தான். நன்றாயிருக்கிறது இவர்கள் கல்வியும் முன்னேற்றமும்! எல்லாம் வெறும் பேச்சோடு சரி. இதற்காகத்தான் ‘காலேஜ் படிப்புப் படித்த பெண்ணாக வேண்டும்; அது இது’ என்றெல்லாம் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டாராக்கும்! இதற்குக் கோஷாவே தேவலையே!

நான் அன்று கேட்டதற்கு அம்பி சரியாகவே பதில் சொல்லவில்லை. “ஹைஸ்கூலில் சின்ன வகுப்பில் என்னோடு படித்தவன், அக்கா! இங்கே ரயில் ஆபீஸில் வேலை. இப்பொழுதுதான் மாற்றலாகியிருக்காம்; வந்திருக்கிறான்” என்றான்.

ஆனால் நான் அவனை அதோடு விடுகிறதாயில்லை. “எந்தத் தெருவிலே இருக்கிறான்? நம்ம ஜாதிப் பையனா?” என்றேன்.

வேறே யாராயிருந்தாலும் அப்படி மேலே கேட்டதற்கு அம்பி உடனே எரிந்து விழுவான். என் பிறந்தகத்துக் கடைக் குட்டியான அவனை நானே எடுத்துத் தூக்கி வளர்த்திருக்கிறேன். ஆகையால், என்னிடத்தில் மாத்திரம் கொஞ்சம் நிதானம் உண்டு.

அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்து, அவன் கையில் இருந்த புஸ்தகத்தை அப்படியே விரல் அடையாளம் மாறாமல் வாங்கி வைத்துக்கொண்டேன். கோடை லீவிற்கு வந்த இடத்தில் கையில் அகப்பட்டதைப் படித்துப் பொழுது போக்கலாம் என்று எடுத்த நாவல்தானே! 'வெடுக்' கென்று அசப்பில் புஸ்தகத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடிப்போய் விடுவோமா என்று யோசனை செய்கிறான் என்பது தெரிந்தது. ஜாக்கிரதையாக இருந்தேன். சிரித்து விட்டான்.

“போ, அக்கா! உனக்கு எப்பொழுதும் உன் பெண் கல்யாணத்திலே தான் குறி. 'இந்த மீன் நம் வலையில் அகப்படுமா?' என்று தானே யாரைப் பார்த்தாலும் யோசனை? நீ பதினெட்டாவது வயதிலே தானே கல்யாணம் செய்து கொண்டாயாம். அப்பொழுது ஊரெல்லாம் ஏகக் கூக்குரலாம். நாகத்துக்குச் சரியாகப் பதினைந்து வயது நிரம்ப வில்லை. பின்னே ஏன் அவசரப்படுகிறாய்? இந்த நாளில் 'அதற்குள் பெண் கல்யாணத்திற்கு என்ன அவசரம்?' என்று தான் உன்னைத் திட்டுவார்கள். அதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் திண்டாடுவாய், ஜாக்கிரதை!” என்றான்.

“நாகத்தை நீ கல்யாணம் செய்து கொண்டு விடுகிறேன் என்று சொல்லு, நான் கவலைப்பட வில்லை. சில ஜாதிகளில் தெரியுமா, பெண்கள் அம்மானுக்கே வாழ்க்கைப் படுகிறது சர்வ சகஜம். அம்மான் தான் செய்து கொள்ளா விட்டாலும், வேறு வரன் அவனே தான் தேடிப்பிடித்தாக வேண்டும். அவனுக்குத்தான் மருமகளைக் கட்டிக் கொடுக்கப் பாத்யதை” என்றேன். நான்.

“அக்கா, இந்த சுந்தரத்திற்குக்கூட ஒரு தங்கை உண்டு. ஆறு, ஏழு, வயது இருக்கும். ஒரு நாள் நான் அவன் வீட்டிற்குப் போயிருந்த பொழுது, அவள் வாசற்படியிலே நின்றுகொண்டிருந்தாள். நான் போனதும் என்னை வந்து கட்டிக்கொண்டு, 'வேணு மாமா, நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறயா, சொல்லு. அம்மா அப்படித்தான் சொல்றா!' என்றாள். அவள் ஒழுகுகிற மூக்கையும் கிழிசல் பாவாடையையும் நீ பார்த்திருக்க வேண்டும்! அப்புறம் அவர்கள் வீட்டுப் பக்கமே போகவில்லை நான்!”

“அப்பாடா! ஒன்று தெரிந்து விட்டது, எனக்கு. அப்பொழுது நம்ம ஜாதிப் பையனாகத்தான் இருக்க வேண்டும். பையன் நன்றாயிருக்கிறானே என்று நான் கேட்டேன் — தலையிலே கட்டுக் குடுமியும் அதுவும்!”

“ஐயோ, அக்கா! என்ன இப்படிப் போய் விட்டாய், சுத்த பத்தாம் பசலியாக! பெண் கல்யாணத்திற்குத் தான் அவசரப்படுகிறாயே என்று நினைத்தேன். போயும் போயும் குடுமியைக் கண்டு கூடவா, மோகம்? எங்கள் காலேஜில் புதிதாக ஒரு பையன் வந்து சேர்ந்தான் போனவருஷம்— குடுமித் தலையுடன். நாங்கள் நடு வகுப்பில் காகிதத்தில் ஏரோப்ளேன் செய்து நேரே அவன் தலையைப் பார்த்து விடுவோம். இரண்டு வாரம் இப்படி நடந்திருக்கும். ஒரு சனி ஞாயிறு கழித்து, திங்கட்கிழமை வரும் போது அவன் தலைக் குடுமிபோய் கிராப்பாயிருந்தது! அப்புறம் எங்களுக்கு வகுப்பில் பொழுது போகிறதற்கு அவ்வளவு ஸ்வாரஸ்யமாக ஒன்றும் கிடைக்க வில்லை.”

“இப்பொழுது உனக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும், அம்பி! என் வயது வந்தால் அப்புறம் சொல்லுவாய்.”

“அக்கா, அந்த மாதிரி மாத்திரம் பேசாதே. எனக்கு என்னவோ போல இருக்கிறது. போகட்டும்; சுந்தரம் ஜாதகம் பார்த்து விட்டானாம். இரண்டு நாள் லீவில் போய் எல்லாரையும் அழைத்து வரப்போவதாகச் சொன்னான். தெரு, வீடு, அடையாளம் சொல்லியிருக்கிறான். நான் கட்டாயம் எல்லாம் விசாரித்துக் கொண்டு வருகிறேன். 'எல்லாரையும்' என்று பொதுவாகச் சொன்னான். கல்யாணம், ஆயிற்றோ ஆகவில்லையோ, தெரியாது. ஆகவில்லையென்றால் நம் நாகத்தின் அதிருஷ்டம்தான். சிநேகத்திற்குக் கட்டுப்பட்டவன். என் வார்த்தையைத் தட்ட மாட்டான் என்கிறது நிச்சயம். நல்ல குணசாலி. படிப்பு அதிகமில்லையே தவிர வேலையில் சூரன். பதினெட்டு வயதிலேயே வேலையில் சேர்ந்துவிட்டான். இரண்டு மூன்று இடங்களுக்கு சட் சட் என்று மாற்றி இப்பொழுது சீக்கிரமாகப் பிரமோஷன் ஆகியிருக்கிறது. நல்ல சம்பளம். ஆபீஸ் விஷயம் தான் அத்தனை நேரம் சொல்லிக் கொண்டிருந்தான். தகப்பனார் கிடையாது. இவன் தான் குடும்பத்தில் பெரிய பிள்ளை. ஒரு வாரம் அவகாசம் கொடு. வேறே தடங்கல் இல்லையென்றால் காலேஜ் திறக்கிறதற்குள் நாகத்தின் கல்யாணத்தை நடத்திக்

கொடுத்து விட்டு ஊருக்குப் போகிறேன்" என்றான் அம்பி.

* * *

இப்பொழுது எங்கேயும் முற்போக்கு ஏற்பட்டு விட்டது என்பது வாஸ்தவம். எனக்குத் தெரிந்த இடத்திலெல்லாம் இருபது வயது வரை கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்காத பெண்களும் இருக்கிறார்கள். அதைப் பற்றி அக்கம் பக்கத்தில் யாரும் பிரஸ்தாபிப்பது கிடையாது. அவர் கூட அடிக்கடி இதைப் பற்றி வேடிக்கையாகச் சொல்லுவார். "இந்த சாரதாச் சட்டம் இருக்கிறதே, லலிதா, அது 'பால்ய விவாகம் செய்யாதே' என்று நம்மைக் கட்டுப் படுத்தவில்லை. நேரே அது பிரஹஸ்பதி பகவானுக்கே தடை யுத்தரவு போட்டு விட்டது! முன்னே யெல்லாம், ஆறிலேயும் எழிலேயும் கல்யாணம் ஆகிற பொழுது, 'ஏதோ குருபலம் இருந்தது, நடந்தது' என்பார்கள். இப்பொழுது பதினைந்து வயது ஆகாத பெண்களுக்குக் குரு பார்வை ஏற்படுகிறதா, பார்த்தாயா?" என்பார்.



அந்த நாளில் நான் துணிச்சலாய்த்தான் இருந்தேன். அதற்கு எத்தனையோ காரணம். பிறர் 'கூடாது' என்று சொல்வதைச் செய்தேனானால் அதில் எனக்கு அலாதி திருப்தி. பதின்மூன்று ஆகிக் கல்யாணம் ஆகாத பெண்ணே அந்த நாளில் கிடையாது என்று சொல்லி விடலாம். என்னோடு 'ஸெகண்ட் பாரம்' வரையில் படித்த பெண்களில் ஒருவர் இருவர் கூட மேல் வகுப்புக்கு என்னோடு வர வில்லை. கல்யாணம் ஆன பிற்பாடும் ஒரு வருஷம் இரண்டு வருஷம் படிக்கலாம், தோஷமில்லை, என்கிற சம்பிரதாயம்கூட ஏற்படாத நாள் அது.

அதோடு, அடுத்த வீட்டிலேயே எங்கள் ஹெட்மாஸ்டரும் அப்பொழுது குடியிருந்தார். அவர் மனைவி ராதையம்மாள் பம்பாயில் பிறந்து வளர்ந்தவள். என்னை வீட்டில் யாராவது கடிந்து பேசினால் நேரே போய் அந்த அம்மாளிடம்தான் முறையிடுவேன். என் கட்சிக்கு, வரிந்து கட்டிக் கொண்டு, அந்த அம்மாள் ஒருத்தியாக அத்தனை பேரும் வாயடைத்துப் போகும்படி ஏதாவது நாலு வார்த்தை சொல்லுவாள். அப்பொழுது எவ்வளவு நன்றி பொங்கும் என் இருதயத்தில்!

என் தகப்பனார் எதிலும் தலையிடுவதே யில்லை. "தாயார் பாடு பெண்பாடு, எனக்கு ஒன்றும் தெரியாது" என்று அவர் சிரித்து மழுப்பி விடுவார். ஆனால் உள்ளூற அவர் சலுகை எனக்கு உண்டு என்பது எல்லாருக்கும் தெரியும். இல்லாவிட்டால் அவ்வளவு நாள் நான் வருவாகத் தப்பித்திருக்க முடியுமா? அதுவும் அந்த நாளில்!

அம்மாவுக்கு மாத்திரம் மனசு ரொம்பக் கோழை. அக்கம் பக்கத்தார் கடுமையாக ஏதேனும் சொன்னால் அப்பொழுது பேசாமல் இருந்து விட்டு, அவர்கள் எழுந்திருந்து போனதும் அழுவாள். அவளை அந்தப் பாடு படுத்தி வைத்ததில் எனக்கு அப்பொழுது கொண்டாட்டமாகத்தான் இருந்தது. அவள் மனம் எப்படித் தவித்துக் கொண்டிருக்கும் என்பது அப்பொழுது தெரியாது எனக்கு. ஊகிக்கவும் முயற்சி செய்யவில்லை. என்

பிடிவாதமே எனக்குப் பெரிதாய் இருந்தது. அந்த மென்மையான மனத்தில் தோன்றிய கவலையும் வேதனையும் எப்படி யிருந்திருக்கும் என்பது இப்பொழுதுதான் தெரிகிறது.

இன்று நடந்ததுபோல் நினைவு இருக்கிறது எனக்கு. இயற்கையின் சதி எதிலும் கட்டுப்படாது அல்லவா? பனிக்காலம் நீங்கி வஸந்த காலம் வந்ததும் மரங்களெல்லாம் கிரமமாகப் பூத்துச் சொரியவில்லையா? மல்லிகைக்கும் மாமரத்திற்கும் தூண்டுகோல் யார் போடுகிறார்கள்? அவ்விதமே இயற்கையின் லீலை என்னிடத்திலும் ஒருநாள் பூர்த்தியாயிற்று. கல்யாணமான பெண்கள் வீடுகளில் அம்மாதிரியானால் அமர்க்களப்படும். மேளமும் நானமும் பந்துக்களின் கூட்டமும் சொல்லி முடியாது. அம்மாவுக்கானால் அவமானமாய்த்தான் இருந்தது. தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். ராதையம்மாள் யதேச்சையாய் அப்பொழுது உள்ளே வந்தாள். முதலில் அவளுக்கு விஷயம் தெரியவில்லை. என்னவோ ஏதோ என்று நினைத்தாள். பிற்பாடுதான் நான் அவள் கண்ணில் பட்டேன். சடக்கென்று எழுந்திருந்தாள். வீதியில் ஜலம் தெளித்து, கோலம் போட்டு, செம்மண் இட்டாள். "உங்களைப்போல அசடு கிடையாது, அக்கா. வெள்ளிக்கிழமையும் அதுவும்; அதோடே பஞ்சமி; பூச நக்ஷத்ரம். வைகாசி மாஸம் வேறே. லலிதாவின் அதிருஷ்டம் யாருக்கு வரும்? நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்" என்று சொன்னாள். அந்த அம்மாள் தன் வீட்டில் அப்படியே நடத்துகிறவள். அவள் பெண்களுக்கும் ஒன்றும் இதுவரை குறைவில்லை. எல்லோரும் நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டுச் சோகத்தான் இருக்கிறார்கள். பிறர் வீடாயிற்றே என்று அவளுக்கு அப்பொழுது சற்றுக் கூச்சம் தயக்கம் உண்டாயிற்று. இல்லாவிட்டால் மேளக்காரனுக்குக் கூடச் சொல்லி யனுப்பி யிருப்பாள்.

வருஷம் கிட்டத்தட்ட இருபதுக்குமுன் நடந்த விஷயம். இன்னும் அந்த விதமான சாத்விக தைர்யம் யாருக்கும் வந்திருப்பதாகத் தெரியவில்லை. நானும் சுற்று முற்றும் பார்க்கிறேன். அந்தமாதிரி பக்கபலம் எனக்குக் கிடைக்கவில்லை.

அம்மாதிரி அனுசரணை யில்லாததினால் தானோ எனக்கு இப்பொழுது கவலையும் அதைரியமும் அதிகமாகிவிட்டது? நாகத்திற்கு வயது பதின்மூன்று. ஆனால் இரண்டு மூன்று வயது அதிகமாகவே யாரும் மதிப்பார்கள். நாலாவது பாரம் படிக்கிறாள். சமத்துத்தான். ஆனால் அவள் மனத்துக்குள் என்ன இருக்கும் என்பதைத்தான் நான் முழுவதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒவ்வொருவருடைய மனோபக்குவம் ஒவ்வொரு விதம். எனக்கு எது நல்லதாகத் தோன்றிற்றோ அதுதான் அவளுக்கும் நல்லதாக இருக்க வேண்டும் என்று நியதியில்லை அல்லவா? ஆகையினால் அவளுடைய மனத்தைக் கண்டு பிடித்து அதற்கிணங்கப் பிரயத்தனம் பண்ண வேணுமென்பது என்னுடைய கோரிக்கை. அதற்காக நான் அவளைச் சும்மா கேள்வி கேட்க வேண்டுமோ, என்ன? தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன். அந்த சந்தர்ப்பமும் கிடைத்தது சமீபத்தில். அதிலிருந்துதான் வரன் தேடுவதில் எனக்கு அவ்வளவு ஆதுரம்.

சாதாரணமாகப் பெண்களிடம் இந்த நாளில் கல்யாணப் பேச்சு எடுத்தால், வருகிற பதில் "நான் கல்யாணமே பண்ணிக் கொள்ளப் போகிறதில்லை" என்பதுதான். அல்லது, "எனக்குக் கல்யாணத்திற்கு என்ன அவசரம், அம்மா?" என்பார்கள். இரண்டும் இல்லாமல், கல்யாணப் பிரஸ்தாபம் வந்ததுமே, சிரித்துக்கொண்டோ, மௌனமாகவோ, தலை குனிந்தபடி உள்ளே ஓடி மறைந்து கொள்ளும் காலம் போய் விட்டதல்லவா? அன்றைக்கு நாகத்தின் அப்பாவே அவளைக் கல்யாணத்தைப் பற்றிக் கேட்டார். அலமாரியில் புஸ்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தவள் நேரே அவர் நாற்காலியின் பின் பக்கமாக வந்து நின்று கொண்டாள். "உட்கார்!" என்று அவர் சொன்னதும் மேஜையின் மேலேயே ஒரு பக்கமாக உட்கார்ந்தாள்; சிரித்தாள்.

"ஏன், நாகம், சிரிக்கிறாய்?" என்றார்.

"எல்லாரும் சாதாரணமாகக் கேட்கிறார்களே, அதைப் போல நீங்களும் கேட்கிறீர்களா, அப்பா; இல்லை, வாஸ்தவமாகவேதான் கேட்கிறீர்களா?"

"வாஸ்தவமாகத்தான் கேட்கிறேன் அம்மா; இத்தனை நாள் அந்தப் பேச்சை எடுத்தேனா, சொல்!"

"அதுதான் நானும் யோசனை பண்ணினேன். என்னடா, எல்லாரும் நம்மைக் கல்யாணத்தைப் பற்றிக் கேட்கிறார்களே? அப்பா மாத்திரம் வாயைத் திறக்கவில்லையே; அப்பாவிற்கு இல்லாத

பொறுப்பு இவர்களுக்கு எப்படி வந்தது என்று யோசனை பண்ணிக்கொண்டிருந்தேன்."

"இப்பொழுது?"

"நீங்கள்தான் யதார்த்தமாகக் கேட்டு விட்டீர்களே."

"கேட்டதும் சிரிப்பானேன்?"

"நிஜத்தைச் சொல்லட்டுமா, அப்பா?"

"சொல்லு."

"நான் பதில் தயாராக வைத்திருந்தேன் — நீங்கள் கேட்டதும் சொல்லவா மென்று. நீங்களோ, வருவில் கேட்கிறதா யில்லை."

"கேட்டுவிட்டதனால் சிரித்தாயாக்கும்; இருக்கட்டும். உன் அபூர்வமான பதில் என்ன? அதை முதலில் சொல்லு, கேட்போம்."

"வேறொன்றும் இல்லை. எனக்கு எப்பொழுது கல்யாணம் ஆகவேண்டும் என்று தோன்றுகிறதோ அப்பொழுது உங்களிடம் நானாக வந்து சொல்கிறேன்! அப்பொழுது பண்ணிவையுங்கள்."

"திடீரென்று நீ அவசரப்படுத்தினால் அப்பொழுது ஏற்பாடு பண்ண முடியுமா, அம்மா?"

"உங்களுக்கென்ன, பணச் செலவைப் பற்றிக் கவலையா?"

"இல்லை. பணம் இருக்கிறதாகவே வைத்துக் கொள்; மாப்பிள்ளை தேடவேண்டாமா? லகுவிலே ஆகிற காரியமா, அது?"

"அடடா, அதை முதலில் சொல்லவில்லையா, நான்? மாப்பிள்ளையை நானே நிச்சயம் செய்து விட்டு, இரண்டு பேருமாகச் சேர்ந்து வந்தே உங்களிடம் உத்தரவு கேட்பதாக உத்தேசம், அப்பா!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே வெளியில் போய்விட்டாள் அன்றைக்கு.

குழந்தையினுடைய மனோராஜ்யத்தைத் தான் அந்தச் சம்பாஷணை காட்டியதே தவிர, அவளுடைய உண்மை மனோநிலையை அது பிரதிபலிக்கவில்லை. அது எனக்குத் தெரியாததல்ல. அதோடு, அந்த சம்பாஷணையில் சாதுர்யம் பிரதானம்; அந்தரங்கம் பிரதானம் இல்லை. ஆனால் நான் கவனித்து அவளுடைய மனதைத் தெரிந்துகொண்ட சந்தர்ப்பம் வேறு. அதைச் சொல்ல வந்த நான் அதை முதலில் சொல்லாமல் எங்கேயெல்லாமோ சுற்றிக் கொண்டிருக்கிறேன்.

மூன்று நான்கு மாதங்களுக்கு முன், பஸ்ஸில் நாகத்தோடு வந்து கொண்டிருந்தேன். எங்களுக்குப் பக்கத்தில் வேறு ஒரு ஸ்திரீயும் உட்கார்ந்திருந்தாள். இருந்தாலும் அவளைக் கொஞ்சம் ஜாடையாகக் கவனித்துக் கொண்டு வந்தேன். அன்று அவள்மீது ஒரு கண் இருக்கவேண்டுமென்று ஏதுவோ என்னைத் தூண்டிற்று.

அவளுக்கு எதிர் ஸீட்டில் இளம்பிராயத்துப் பிள்ளையாண்டான் ஒருவன் உட்கார்ந்திருந்தான். இருபது வயது இருக்கும். ஆனால் முகத்தில் பால் வடிந்தது. நல்ல தேஜஸ்; தளதளப்பான, சித்தடக்கமான உடம்பு. நெற்றிக்கு இட்டுக் கொண்டிருந்ததும் கருகருவென்ற சிகையுமாகச் சேர்ந்து அவனுக்கு ஒரு தனி வசீகரத்தைக் கொடுத்தது.

அந்தப் பையனுடைய நடத்தை எனக்கு முதலில் ஒரு மாதிரி சுவாரஸ்யமாக இருந்தது. இந்தக் காலத்தில் புருஷர்கள் யாருமே ஸ்திரீகள் எல்லாரையும் கூசாமல் வெறித்துப் பார்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் எழுந்திருந்தால் மேலே இடிக்கும்படி அவ்வளவு சமீபத்தில் இருந்த போதிலும்கூட, அந்தப் பிள்ளை நாகத்தையோ, வேறு எங்களில் யாரையேனுமோ கவனித்ததாகவே தெரியவில்லை. அது சங்கோசத்தினால் அல்ல. அந்தக் கண்களில் அவ்வளவு அலக்ஷியம்!

தான் ஏதோ உயர்ந்த சிருஷ்டி போலவும், தான் யாரையும் பார்க்கத் தேவையில்லை என்று சொல்வது போலவும் இருந்தது அந்தக் கண்களில் வீசிய ஒளி. அதில் ஒரு தனி மமதை, ஒரு தனி உதாசீனம்!

அதை ஒரு க்ஷணம் பரீக்ஷிப்பதில் லயித்திருந்த நான் பிறகு தான் நாகத்தின் நினைவு வந்து அவளைக் கண்காணிக்க ஆரம்பித்தேன். அந்நியர்கள் எதிரில் மிகவும் அடக்கமாக இருப்பவள் அவள். அவள் முகத்தில் சஞ்சலம் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. நெற்றியிலும் மேல் உதட்டிலும் வியர்வை அரும்பிற்று. முகமே சிவந்திருந்தது. அவள் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது என் அகக் கண்ணிற்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

அந்தப் பையன் வேறு பக்கம் கவனிக்கிறான் என்பது நிச்சயமாகத் தெரிந்தபொழுது நாகம் தன் குனிந்த முகத்தைச்

சற்று உயர்த்தி மேலும் கீழுமாக அவனைப் பார்த்தாள். "அவனுக்குத் தெரியாமல் நாம் அவனைக் கவனிக்கிறோம்" என்ற எண்ணம் அவள் மனத்தில் இருந்ததால் ஒவ்வொரு தரமும் அரை க்ஷணத்திற்குமேல் கவனிக்கவில்லை. பிறகு தலையைக் குனிந்து கொள்வதும் சற்று நேரத்திற் கெல்லாம் அதே விதம் மறுபடி பார்ப்பதுமாக இரண்டு மூன்று தடவை இப்படி நடந்தது. அவனுடைய முகத்தில் அவள் பார்வை தன்னை மறந்து ஈடுபட்டிருந்த அந்த ஒரு க்ஷணம் எவ்வளவு உத்கிருஷ்டமானது என்பதை என் மனம் அறியும். அந்தப் பார்வையின் அர்த்தத்தைக் கிரஹிப்பதில் எனக்கு யாதொரு சிரமமும் இல்லை. அவள் கண்கள் அவன் முகத்தை அப்படியே பருகிய காட்சி இன்னும் என் மனத்திலிருந்து அகலவில்லை. சிறு பெண்ணாகவிருந்தவள் போய், அந்த க்ஷண நேரத்தில் அவள் யௌவன ஸ்திரீயாக மாறிய விநோதத்தைக் கண்டதும் என் மனம் ஆனந்தத்தால் துள்ளிக் கூத்தாடியது. வாழ்க்கையின் நறுமணம் அவளிடத்தில் அந்தச் சில நிமிஷங்களுக்குள் அரும்பி மலர ஆரம்பித்து விட்டது என்பதை அறிந்து கொண்டேன்.

இனி அதே பருவத்தில் அதைப் பூர்த்தி செய்து, நறு மணத்தோடு நிறைவையும் கலந்ததாக அதைச் செய்து பார்த்துவிட வேண்டுமென்பதுதான் என் மனோரதம்.

இளம் பிராயத்தில் இவ்விதமாக ஓர் உருவம் நிர்மலமான ஒரு மனத்தில் பதிவது என்பது எல்லோருக்கும் நேரக்கூடிய சம்பத்து அல்ல. அது ஒருவருக்குக் கிடைத்து விட்டால் அதை உடனே தொடர்ந்து பூர்த்தி செய்து விடவேண்டும்.



அது கிடைக்கப் பெறாதவர்கள்தான், வயது வந்த பிறகு, ஒத்த மனம், அபிப்பிராயம் முதலான விஷயங்களை விவேகம் கொண்டு ஆராய்ந்து, பிறகு அன்பு ஜனனமாகி, வாழ்க்கையில் ஈடுபட வேண்டும்.

ஆகையினால்தான் அன்று அம்பியோடு ஒரு வாலிபன் வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. அன்று நான் பஸ்ஸில் சந்தித்த அதே பையன் போலவே இவன் இருந்தான். முக்கால் வாசி அவனாகவே தான் இருக்கும் என்பது என் மனத்திற்குள் நிச்சயம். இன்று ஆபீஸ் உடையில் பார்த்தேன்; அன்று ஒரு துண்டு மாத்திரம் போட்டிருந்தான். அதனாலே கொஞ்சம் சந்தேகம்.

* * *

இரண்டு நாள் கழித்து மறுபடியும் அம்பியைத் தூண்டினேன். சாயந்திரம் போனான். கால் மணியில் திரும்பி வந்தான். வீடு அடையாளம் கண்டுபிடித்துக் கொண்டு போய்க் கதவண்டை நின்று, "சுந்தரம்! சுந்தரம்!" என்று இரண்டு குரல் கூப்பிட்டானாம். பளிச்சென்று மின்னல்போல் ஒரு முகம் எட்டிப் பார்த்து விட்டு, உடனே உள்ளே போய் விட்டதாம். பதில் இல்லையாம். தெருவைத் தாண்டி வரும்பொழுது கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த சுந்தரத்தின் தாயாரை விசாரித்தானாம். அவருக்கு அம்பியைச் சட்டென்று அடையாளம் தெரியவில்லை. பிறகு தெரிந்ததும் தம்மோடு வீட்டிற்கு வரச் சொன்னாராம். "நான் இங்கேதான் பக்கத்துத் தெருவிலே இருக்கிறேன், அக்காள் வீட்டிலே. காலையில் வருகிறேன்" என்று சொல்லி விட்டு அம்பி வந்து விட்டானாம்.

"முகம் மாத்திரம்தான் தெரிந்தது. ஒரு வேளை அந்தப் பெண் வீட்டு மாட்டுப் பெண்ணாக இருந்தாலும் இருக்கலாம்" என்று அம்பி சொன்னதிலிருந்து எனக்கு சஞ்சலம் அதிகமாயிற்று. ஆனால் அவன் என்னவோ என்னிடத்திலிருந்து மறைக்கிறான் என்று எனக்கு உள்ளுக்குள்ளே ஏதோ சொல்லிற்று. அதிலிருந்து ஒரு ஆசை; ஒரு நம்பிக்கை.

மறு நாள் காலையில் சீக்கிரம் சாப்பாடானதும் அம்பியை அழைத்துக்கொண்டு கொஞ்சம் புஷ்பமும் பழமும் வாங்கிக் கொண்டு நானும் போனேன். அவன் கூட வந்து, "அம்மாமி, இவள்தான் என் தமக்கை. உங்களைப் பற்றிச் சொன்னேன். பார்க்க

வேண்டும் என்றான். அழைத்துக் கொண்டு வந்தேன்" என்று சொல்லிவிட்டு உடனே வெளியில் போய்விட்டான். அந்த அம்மாள் என்னிடம் ரொம்பப் பிரியமாயிருந்தார்.

"கமலம்! கொஞ்சம் தீர்த்தம் கொண்டு வா! இதோ இந்த மாமியை வந்து நமஸ்காரம் பண்ணு!" என்றார் அந்த அம்மாள். சமையல் உள்ளில் பாத்திரம் ஓசைப்படுவது நின்றது.

"கமலம் என்கிறது உங்கள் மாட்டுப் பெண்தானே?" என்றேன். ஆனால் அவர் பதில் சொல்லத் தேவையில்லை. கமலம் அவருடைய பெண்; அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்பதை அவள் வந்ததுமே தெரிந்து கொண்டேன். இது தெரிந்துதான் அம்பி மெதுவாக நழுவிவிட்டான் என்பதும் பளிச்சென்று எனக்குத் தெரியவந்தது. "சரி, திருடன் எங்கே போனான் பார்க்கலாம்; பிடித்துக் கட்டிப் போடுகிறேன்?" என்று தீர்மானித்துக் கொண்டேன். ஆனால் என் கவனம் எல்லாம் அப்போது வேறிடம்.

"அம்பி, உங்கள் பிள்ளையோடு பால்ய சிநேகமாம்; சொன்னான். இந்த ஊரிலே உத்யோகம் என்றான். அப்பொழுது ஜாகை வைத்தாயிற்று என்றால் மாட்டுப் பெண்ணை என் அழைத்துக் கொண்டு வரவில்லை? பிறந்தகத்திற்குப் போயிருக்கிறாளோ?" என்றேன். என் அவசரம் எனக்கு அல்லவா தெரியும்!

"சுந்தரத்துக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை, அம்மா! வளர்ந்த பெண்ணை வீட்டிலே வைத்துக் கொண்டு பிள்ளைக்கு யாராவது முதலில் கல்யாணம் பண்ணுவார்களா? அவனுக்கும் வேண்டிய ஜாதகம் வருகிறது. அவனும், 'தங்கைக்கு நல்ல இடமாகக் கிடைத்து விட்டால், பிற்பாடு கையோடு எனக்கு ஒத்தாசைக்கு ஒரு மாட்டுப் பெண்ணைக் கொண்டு வந்து விடுகிறேன், என்ன பிரமாதம்?' என்று சொல்கிறான். நல்ல வரனாகக் கிடைத்தால் சொல்லேன், அம்மா! கோடிப் புண்ய முண்டு. அந்த நாளிலே கமலத்தை உங்கள் வேணுவுக்குக் கொடுக்கிறதாகப் பாதி பரிகாசமாகச் சொல்லிக்கொண்டிருப்போம். நேற்று அவனைக் கேட்டேன் — கல்யாணமாயிற்றா என்று. இல்லை என்றான். அவனாக இஷ்டப் பட்டுப் பண்ணிக்கொண்டானானால் பண்ணிக் கொள்ளலாம். தங்கமான பிள்ளை."

அந்த அம்மாள் இப்படிச் சொல்ல வேண்டுமே என்றுதான் பிரார்த்தனை யெல்லாம் செய்து கொண்டிருந்தேன். என் வயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது. அவன் முன்னே வர்ணித்த ஒழுகுகிற மூக்கும் கிழிசல் பாவாடையும் தான் இப்பொழுது அதிரூப சௌந்தர்யத்தோடு இந்த மாதிரி ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அவளை முதல் நாள் பார்த்தது முதற்கொண்டு ஆளே வேறு விதமாய் மாறி விட்டான்.

எல்லாம் ஒரு தினுசாகப் பேசி முடிவு செய்தேன். சாயந்திரம் பையன் ஆபீஸிலிருந்து வந்ததும் அவனையும் பெண்ணையும் அழைத்துக்கொண்டு என் வீட்டிற்கு வருவதாகச் சொன்னார் அந்த அம்மாள்.

ஒரு சின்னக் காரியம் பாக்கி இருந்தது. நாகத்தினிடம் "யாரோ பெண் பார்க்க இன்று வருகிறார்கள்" என்று மாத்திரம் சொன்னேன். "உன்னை யாரம்மா கல்யாணப் பேச்சு எடுக்கச் சொன்னது!" என்று சண்டை போட்டாள்.

"பெண்ணைப் பார்க்க ஒருவர் வருகிறேன் என்று சொன்னால் உடனே கல்யாணம் நிச்சயமாகி விட்டது என்று அர்த்தமா? வரப் பட்டவர்கள் வந்து கொண்டுதான் இருப்பார்கள். வருஷம் பத்து ஆனாலும் உன் சம்மதம் இல்லாமல் ஏதாவது நடக்குமா; அப்பாதான் சம்மதிப்பாரா? இது தெரியாதா? அசடே!" என்றேன்.

முதலில் "எங்கேயாவது ஓடிப் போய் விடுகிறேன்" என்று சொன்னவள் ஒருவாறு வீட்டில் சம்மதித்து இருந்தாள். அவர்களை வழியனுப்பி விட்டு உள்ளே வந்ததும், கூடத்திலிருந்தவள் என்னை வந்து கட்டிக்கொண்டு "உனக்கு எப்படியம்மா தெரியும்?" என்றாள். உடனே 'கோ' வென்று அழுது விட்டாள். பிறகு ஏதேதோ பேசிக்கொண்டு என் மடியிலேயே வெகு நேரம் படுத்திருந்தாள். அவள் ஹிருதயத்திலிருந்த உணர்ச்சி வேகம் கொஞ்சம் கொஞ்சமாக நிதானமாயிற்று. பெற்ற தாய்க்கு இதைவிட ஆனந்தம் வேறு ஏது?

அம்பியும் தான் கொடுத்த வாக்கை எப்படியோ நிறைவேற்றி விட்டான். லீவு கழிந்து ஊருக்குப் போகிறதற்குள் நாகத்திற்கு அவள் மனதிற்குப் பிடித்த புருஷனாகப் பார்த்துத் தேடிக் கொடுத்து விட்டான். ஏதன் மத்தியிலே அதே பந்தலிலே தானும் தன் இஷ்டப்படி சுயம்வரமும் செய்துகொண்டான். எனக்கு இப்பொழுது ஒரு கவலையும் இல்லை. சியாமளாவுக்குக் கூட இரண்டு வருஷம் கழித்துத் தானே பேஷான வரன் கொண்டு வருகிறதாக ஏற்றுக் கொண்டிருக்கிறான் அல்லவா?

காலக்ஷேபம்

சொர்க்கம்தான்

"உங்கள் 'தியேட்டர்' சொர்க்கம் போல் இருக்கிறது."

"நிஜமாகவா?"

"உன்னை ஒரு பாவி மனுஷனாவது இருந்தால்தானே?" —கே. வி. ஸ்ரீனிவாசன்.

★

வருத்தத்திற்குக் காரணம்

ராமு:—கோபு! ஏன் வருத்தத்தோடு நின்று கொண்டிருக்கிறாய்?

கோபு:—நானும் சீனுவும் தெருவில் ஒரு ரூபாய் கண்டெடுத்தோம். அதை ஆளுக்கு அரை ரூபாயாகப் பங்கு போட்டுக் கொண்டோம்.

ராமு:—இதில் வருத்தப் படுவதற்கென்ன இருக்கிறது?

கோபு:—அந்த ரூபாய் என் மடியிலிருந்து நழுவி விழுந்துவிட்ட ரூபாய்தான் என்று பிறகு தெரிந்தது. —எஸ். ஷண்முகம்.

★

கேள்விக்கேற்ப பதில்

எஜமானி (சமையல் வேலைக்கு வந்தவனிடம்):— நீ யோக்கியமானவனென்று உத்திரவாதம் யாராவது சொன்னால் மேல் விவகாரங்களைப் பேசலாம்.

சமையல்காரன்:—அது சரிதானம்மா. முதலில் நீங்கள் நல்லவர்களென்று எனக்குத் தெரிய வேண்டுமே!

—டி. எம். வி. பார்த்தசாரதி.

★

புத்திசாலிப் பையன்

மணி (கதைப் புஸ்தகம் படிக்கும் தகப்பனிடம்):—அப்பா, உனக்கு கதைப் புஸ்தகம் படிப்பதில் பிரியம் அதிகமா அல்லது மைசூர்பாகு தின்பதில் பிரியம் அதிகமா?

தகப்பனார்:—கதைப் புஸ்தகம் படிப்பதில் தான் பிரியம் அதிகம்.

மணி:—இப்பொழுது உனக்கு யாராவது மைசூர்பாகைக் கொண்டு வந்து கொடுத்தால் என்ன செய்வாய்?

தகப்பனார்:— உனக்குக் கொடுத்துவிடுவேன். எதற்குக் கேட்டாய்?

மணி.— இல்லை; உனக்கு இப்போது அம்மா மைசூர்பாக் கொண்டு வந்து கொடுக்கப் போகிறாள். அதற்காகத்தான் கேட்டேன். —டி. என். கோபாலகிருஷ்ணன்.

பைத்திய சம்பாஷணை

முதல் பைத்தியம் (இரண்டாவது பைத்தியத்தினிடம்):—இதோ என் கைக்குள்ளே என்ன இருக்கு சொல்லு பார்க்கலாம்?

இரண்டாம் பைத்தியம்:—ஏரோப்ளேன்!

முதல் பைத்தியம்:—போடா, நான் கைக்குள் ஏரோப்ளேனை ஒளிக்கும்போது பார்த்து விட்டாய். —ஜாஜு.

★

அட பாவமே!

ஒருவர்:—நேற்று நான் ஒரு கூட்டத்தில் எழுந்து பேச ஆரம்பித்து ஐந்து நிமிஷம் கூட ஆகவில்லை. அதற்குள் எவனோ கூட்டத்தில் ஒருவன் என்மீது ஒரு செருப்பை எடுத்து வீசினான். பேசாமல் உட்கார்ந்து விட்டேன்.

நண்பர்:—அட பாவமே! இன்னும் ஒரு ஐந்து நிமிஷம் பேசியிருக்கக் கூடாதோ? மற்றொரு செருப்பையும் வீசி எறிந்திருப்பான். காலில் மாட்டிக் கொண்டு வந்திருக்கலாமே! —கே. நாராயணசாமி.

★

காரணம்!

மனைவி:—நம்ம பக்கத்து வீட்டுக்கு குடி வந்திருப்பவர்கள் புதிதாகத் தெலுங்கு கற்றுக் கொள்கிறார்களே? காரணமென்ன?

புருஷன்:—பாவம்! அனாதையான ஒரு தெலுங்கு குழந்தையை அவர்கள் வளர்க்கிறார்கள். அது பேச ஆரம்பித்தால் என்ன பேசுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்குத்தான் தெலுங்கு கற்றுக் கொள்கிறார்கள்! —ஜி. எச். எஸ்.

★

யார் குற்றம்?

புருஷன்:—நீ 'டிரஸ்' பண்ணிக் கொள்வதற்கு அவ்வளவு நேரம் செய்யாமலிருந்தால் நமக்கு இப்போது கிளம்பிப் போன பஸ்ஸே கிடைத்திருக்கும்.



மனைவி:—நன்றாயிருக்கிறது! நீங்கள் என்னை ரோட்டின் ஓட்டமும் பிடியுமாகக் கரகர வென்று இழுத்துக் கொண்டு வாராமலிருந்தீர்களானால் அடுத்த பஸ்ஸுக்கு இவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்காது! —என். லும்பகம்.

அஷ்டாவக்கிரன்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பாண்டவர்கள் வனவாசம் செய்து கொண்டு சுற்றித் திரிந்த போது உபநிஷத்தில் சொல்லப்பட்ட சுவேதகேதுவின் ஆசிரமம் என்று வழங்கும் வனத்துக்கு ஒரு நாள் வந்து சேர்ந்தார்கள். லோமசர் அந்த இடத்துக்குரிய கதையை யுதிஷ்டிரனுக்குப் பின்வருமாறு சொன்னார்:

வேதாந்தம் உபதேசித்த பெரியோர்களில் சிறந்தவரான உத்தாலகருக்குக் கஹோளர் என்ற ஒரு சிஷ்யர் இருந்தார். அவர் மிகுந்த நியமமும் பக்தியும் கொண்டவர். ஆனால் அவருக்குக் கல்வி கற்கும் திறமை இல்லை. இதனால் அவரை மற்ற சிஷ்யர்கள் சிரித்துப் பரிகசிப்பார்கள். உத்தாலகர் இதைப் பொருட்படுத்தாமல் கஹோளருடைய நல்ல குணத்தையும் பக்தி சீலம் நியமம் இவற்றையும் பார்த்துத் திருப்தியடைந்து தன் குமாரத்தி சுஜாதையை அவருக்கு விவாகம் செய்து கொடுத்தார்.

கஹோளருக்கும் சுஜாதைக்கும் மகன் உண்டானான். தகப்பன் தாய் இருவர்களுடைய குண விசேஷங்களும் குழந்தைக்குப் பிறவிச் சம்பத்தாகும். உத்தாலகருடைய பேரனான இந்தக் குழந்தை தாய் வயிற்றிலிருக்கும்போதே வேதத்தை அறிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. கஹோளர் தப்பும் தவறுமாக அத்தியயனம் செய்வதை வயிற்றுக் குள்ளிருந்த குழந்தை கேட்டுப் பிழைகளைப் பொறுக்கமாட்டாமல் கருவிலேயே குழந்தை வக்கிரங்கள் அடைந்துவிட்டதாம். பல கோணல்களுடன் பிறந்ததால் குழந்தைக்கு அஷ்டாவக்கிரன் என்று பெயர் வழங்கிற்று.

அஷ்டாவக்கிரன் பால்யப் பருவத்திலேயே சிறந்த வித்துவானாக வளர்ந்தான். பன்னிரண்டு வயதுக்குள்ளேயே வேத வேதாந்தங்களை ஓதி முடித்து விட்டான்.

ஒரு நாள் மிதிலையில் ஜனகன் ஒரு பெரிய யாகம் நடத்துவதாகவும் அங்கே கூடிய வித்துவான்கள் சாஸ்திரங்களை வாதிப்பார்கள் என்றும் கேள்விப்பட்டு அஷ்டாவக்கிரன் "அங்கே போகலாம் வா!" என்று தன் அக்காள் மகனும் தன்னுடன் சம வயதுமான சுவேதகேதுவுக்குச் சொல்லி இருவரும் மிதிலைக்குச் சென்றார்கள்.

மிதிலையில் யாகசாலைக்குப் போகும் வழியில் அரசனும் பரிவாரமும் சென்று கொண்டிருந்தார்கள். "விலகு! விலகு! அரசனுக்கு வழிவிட்டு விலகு!" என்று வேலைக்காரர்கள் கத்திக் கொண்டு முன்னால் சென்றார்கள். அஷ்டாவக்கிரனை வேலைக்காரர்கள் விலகச் சொன்ன போது அவன்:—

"குருடனுக்கும் அங்கஹீனர்களுக்கும் பெண்களுக்கும் சுமை தூக்கிக் கொண்டு செல்பவர்களுக்கும் அரசனும் விலகி வழிவிட வேண்டும். பாதையில் வேதம் ஓதிய அந்தணன் சென்றுகொண்டிருந்தால் அவனை விலகிச் செல்லும்படி அரசன் சொல்லலாகாது. இது சாத்திரம்" என்றான்.

பிராமணப் பையனுடைய கம்பீரப் பேச்சைக் கேட்ட அரசன் பிரமித்தும் மகிழ்ச்சியடைந்தும், "பிராமணச் சிறுவன் சொல்லுவது சரியே! நெருப்பில் சிறியதென்றும் பெரியதென்றும் இல்லை; சிறு நெருப்பும் சுடும்" என்று தன் பரிவாரத்துக்குச் சொல்லி வழி விட்டு விலகினான்.

* * *

யாகசாலையில் அஷ்டாவக்கிரனும் சுவேதகேதுவும் நுழைந்தார்கள்.

"இந்த இடத்தில் சிறுவர்கள் பிரவேசிக்கக் கூடாது. வேதம் ஓதிய முதிர்ந்தவர்களே யாக சாலைக்குள் போகலாம்" என்று வாயில்காப்போன் முறைப்படி தடுத்தான்.

"நாங்கள் சிறுவர்கள் அல்ல. விரதங்களைக் காத்து வேதம் ஓதியவர்களாவோம். வேதாந்த சாஸ்திரத்தின் முடிவுகளை அறிந்தவர்கள், வயதையும் வெளித் தோற்றத்தையும் பார்த்து ஒருவனைச் சிறியவன் என்று நிச்சயிக்க மாட்டார்கள்" என்றான் அஷ்டாவக்கிரன்.

துவாரபாலன், "நில், நில்! சிறுவனாகிய நீ எவ்வாறு உபநிஷத்தை ஓதி

வேதாந்த உண்மை யறிந்திருக்க முடியும்? வீண் பேச்சுப் பேசுகிறாய். தற்புகழ்ச்சி வேண்டாம்" என்றான்.

"இலவங்காயைப் போல் வெளி வடிவம் பருத்து உள்ளே வெறும் பஞ்சாக இருந்தால் என்ன பயன்? வெளித் தோற்றம் அறிவுக்குப் பிரமாணமாகாது. முதிர்ச்சி என்பது சரீர வடிவத்தில் இல்லை. உயரமாக வளராதவனும் ஞானம் அடைந்திருந்தால் சாஸ்திரப்படி முதிர்ந்தவன் ஆவான். அறிவு அடையாத மனிதன் வயதினால் மட்டும் முதிர்ந்தவன் ஆக மாட்டான். என்னைத் தடுக்காதே" என்றான் அஷ்டாவக்கிரன்.

"சிறு பையனாயிருந்தும் ஏன் வீணாக முதிர்ந்தவனைப் போல் பேசுகிறாய்?" என்றான் வாயில் காப்போன்.

"துவார பாலகனே! தலை நரைப்பது முதிர்ச்சிக்குப் பிரமாணமல்ல. வயதும், தலை நரைப்பும், பொருளும், பந்துக்களின் கூட்டமும் ஒருவனைப் பெரியவனாக்கும் என்று ரிஷிகள் சொல்லவில்லை. எவன் வேதங்களை அங்கங்களுடன் படித்து ஆராய்ந்து பொருள் அறிந்திருக்கிறானோ அவனே பெரியவன். நான் அரசனுடைய முக்கிய வித்துவானாகிய வந்தியைப் பார்க்க வந்திருக்கிறேன். ஜனக ராஜனுக்கு என் விருப்பத்தைத் தெரிவிப்பாயாக" என்று அஷ்டாவக்கிரன் சொன்னான்.

இதற்குள் அரசன் வந்து சேர்ந்தான். பையனுடைய சாகசத்தை வாயில் காப்போன் அரசனிடம் தெரியப்படுத்தினான். அஷ்டாவக்கிரனைப் பார்த்து, தான் முந்திப் பார்த்த சிறுவன் என்பதை அரசன் தெரிந்து கொண்டான்.

"என்னுடைய வித்துவான் வந்தி பல பெரிய வித்துவான்களை இதற்கு முந்தி வாதத்தில் தோற்று அவர்களைக் கடலில் வீழ்த்தும்படி செய்திருக்க, சிறுவனாகிய நீ ஏன் இந்தத் துணிச்சல் காரியம் செய்கிறாய்?" என்று அரசன் கேட்டான்.



"உம்முடைய வித்துவான் என்னைப் போல் வேதாந்தப் பயிற்சி பெற்றவர்களுடன் வாதிக்கவில்லை. பண்டிதர்களாகாதவர்களைத் தோற்கடித்து அகம்பாவம் கொண்டிருக்கிறார். என் தகப்பனாரை இவர் வென்று அவரை நீரில் மூழ்க வைத்ததாக என் தாயாரிடம் நான் அறிந்து அதற்காகவே கடன் தீர்க்க வந்திருக்கிறேன். இவரை நான் எதிர்த்து வெல்லப் போகிறேன். அச்சு முறிந்து வண்டி வீழ்வதைப்போல் உம்முடைய வித்துவான் என்முன் வீழ்வதைப் பார்ப்பீர். உம்முடைய வந்தியை என்னருகில் அழைத்துவரச் செய்வீராக" என்றான் அஷ்டாவக்கிரன்.

* * *

வந்தியுடன் அஷ்டாவக்கிரன் வாதம் நடத்தினான். கேள்விகள் கேட்கப்பட்டு ஒருவர் சொல்லுக்கு ஒருவர் பதில் சொல்ல, மிதிலா நகரத்துப் பண்டிதனான வந்தி தோல்வி யடைந்து அஷ்டாவக்கிரன் வெற்றி யடைந்ததாகச் சபையிலுள்ளோர் அனைவரும் ஒப்புக் கொள்ள நேர்ந்தது. மிதிலா நகரத்துப் பண்டிதன் தலை குனிந்தான். பந்தயப்படி அவன் கடலில் அமிழ்த்தப்பட்டு வருணாலயம் சென்றான்.

அந்தச் சமயத்தில் அஷ்டாவக்கிரனுடைய தகப்பனாரான கஹோளருடைய ஆத்மா மகனுடைய புகழைக் கண்டு மகிழ்ச்சி யடைந்து சொன்னதாக பௌராணிகர் அவன் வாயில் வைத்துத் தத்துவத்தை விளக்குகிறார்:—

"தகப்பனைப்போல் மகன் இருக்க வேண்டியதில்லை. தேக பலமில்லாத தகப்பனுக்குத் தேக பலம் படைத்த மகனும், கல்வி கற்பதற்கு வேண்டிய திறமையைப் படைத்திராத ஒருவனுக்குப் பண்டித குமாரனும் உண்டாவதுண்டு. வடிவத்தையும் வயதையும் பார்த்து மனிதனுடைய பெருமையை நிர்ணயிப்பது தவறு. வெளித் தோற்றம் ஏமாற்றத்தைத் தான் தரும்."

நினைத்ததும் நடந்ததும்

சாவி

தீபாவளி நெருங்க நெருங்கக் காட்டுப் பாளையம் ஸ்டேஷன் மாஸ்டர் அடிக்கடி ரயில் எஞ்சினைப்போல் பெருமூச்சு விட ஆரம்பித்தார். காரணம், தம்முடைய நாலாவது பெண் மரகதத்தின் தலைதீபாவளியைக் கொண்டாடக் கையில் போதுமான பணமில்லாமைதான். அதிலும் இந்தக் கடைசி மாப்பிள்ளை மிகவும் முடுக்கான ஆசாமியாயிருந்தான். முன் கோபிஷ்டன்; அசல் பச்சை மிளகாய்!

போன தடவை அவன் தலை நோன்புக்கு வந்திருந்த போதே மோதிரம் செய்து போடவில்லை என்று கோபித்துக்கொண்டு டிக்கட்கூட வாங்காமல் ரயில் ஏறி ஊருக்குப் போய்விட்டான். காரணம் அந்த ஸ்டேஷனில் டிக்கட் விற்பதும் ஸ்டேஷன் மாஸ்டர் தான் ஆகையால் மாப்பிள்ளை மாமனார் முகத்தில் விழித்து டிக்கட் வாங்க இஷ்டப்படவில்லை!

எனவே, இந்தத் தலை தீபாவளியிலாவது மாப்பிள்ளையின் பழைய கோபத்தை யெல்லாம் தீர்க்க எண்ணியே அடிக்கடி பெருமூச்சு விடலானார் ஸ்டேஷன் மாஸ்டர்.

அன்று புதன்கிழமை. ஏழரை மணிக்கு வரவேண்டிய மெயில் வண்டி வழக்கம் போல் தாமதமாக எட்டரை மணிக்கே வந்து சேர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் கூட்டத்தில் தமது மாப்பிள்ளையும் இறங்கி வருவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். அவன் கேட்டண்டை வந்ததும் சமாளித்துக் கொண்டு "வாருங்கோ, மாப்பிள்ளை" என்று உபசரித்தார்.

ஸ்டேஷன் மாஸ்டருக்கு அன்று இரவெல்லாம் தூக்க மில்லை. ஸ்டேஷனில் 'நைட் டியூடி' பார்க்கும்போது கூட நிம்மதியாகத் தூங்கக்கூடிய அவருக்கு மாப்பிள்ளை விஜயம் பெருத்த கவலையை உண்டு பண்ணி விட்டது. கையில் பணமில்லாத சமயத்தில்தானா இந்தப் பாழும் தீபாவளியும் மாப்பிள்ளையும் வந்து சேர வேண்டும்?

பாவம்! ஸ்டேஷன் மாஸ்டர் பெரிய குடும்பஸ்தர். இருபது வருஷ காலமாக ரயில்வேயிலேயே உத்தியோகம் பார்த்து இப்போதுதான் 72½ ரூபாய் சம்பளம் வாங்குகிறார்.

இந்த நிலைமையில் தலை தீபாவளியை எப்படிக் கொண்டாடுவதென்றே அவருக்குப் புரியவில்லை. இன்னும் மூன்றே நாட்களில் ஏதேனும் ஏற்பாடு செய்தாக வேண்டுமே என்பதை நினைக்க நினைக்க ஸ்டேஷன் மாஸ்டருக்கு 'ரெட் ஸிக்னல்' அணைந்து அணைந்து எரிவதைப் போல் இருந்தது!

வெகு நேரம் வரையில் தீபாவளிச் செலவுக்கு என்ன செய்வதென்றே ஒன்றும் தோன்றாதவராய் யோசிக்கலானார். மனச் சோர்வினால் அவருடைய தலை கை காட்டி மரம்போல் சாய்ந்து கிடந்தது! இதற்குள் கூட்ஸ் வண்டி ஒன்று வருவதாக அடுத்த ஸ்டேஷனிலிருந்து டெலிபோன் எச்சரிக்கை வந்தது. கூட்ஸ் வண்டியை வரவேற்பதற்காக அறையை விட்டு எழுந்து பிளாட்பாரத்துக்கு வந்தார். வண்டி வந்து நின்றதும் அதிலிருந்த சாமான்களை எல்லாம் போர்ட்டர் மாரிசாமியைப் பார்ஸல் அறையில் கொண்டுபோய்ப் போடச் சொல்லிக் கதவைப் பூட்டிச் சாவிக் கொத்தைக் கோட்டுப் பையில் போட்டுக் கொண்டார்.

இரவு வெகு நேரம் வரை தூக்கமே வரவில்லை. கூட்ஸ் வண்டியில் வந்த கார்டு கொடுத்துவிட்டுப் போன பழைய தினசரிப் பத்திரிகை ஒன்றை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். அதில் "தபாலாபீஸில் கொள்ளை" என்ற ஒரு சிறு விஷயம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டருக்கு அதிலிருந்து ஒரு சிறு எண்ணம் உதித்தது. அந்த எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக முற்றிக் கடைசியில் மனச் சாட்சிக்கும் அவருக்கும் ஒரு சிறு போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தில் மனச்சாட்சிதான் தோல்வியுற்றது என்று சொல்லத் தேவையில்லை. அதன்படி பார்ஸல்

அறைக்குள் புகுந்து வேண்டிய சாமான்களைக் கொள்ளையடிப்பதே சரி என்ற முடிவுக்கு வந்தார். போர்ட்டர் மாரிசாமி 'டூடி' முடிந்து வீட்டுக்குப் போனதும் பார்ஸல் அறைக்குள் புகுந்து உள்பக்கம் தாளிட்டுக் கொண்டார். மார்பு 'பட் பட்' என்று வேகமாய் அடித்துக் கொண்டது. வெகு தூரத்தில் போய்க் கொண்டிருந்த கூட்ஸ் வண்டியின் நீண்ட ஊதல் சத்தம் அவருடைய செய்கையை வேண்டாமென்று எச்சரிப்பதுபோல் இருந்தது. தேகம் குப்பென்று வியர்க்க ஜன்னல் வழியாய் ரயில் போகும் திக்கை நோக்கினார். தொலைவில் இருந்த கைகாட்டி மரத்தின் சிவப்பு விளக்கு "அபாயம், அபாயம்" என்று கூறுவதைப்போல் கண்களைச் சிமிட்டியது.

ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஒவ்வொரு பார்ஸலாக எடுத்து அவை ஒவ்வொன்றின் மீதும் இருந்த விலாசத்தைப் படித்துப் பார்த்தார்.

பார்ஸலை நன்றாகப் பிரித்ததில் வைக்கோல் கூளங்களும் ரம்பத் தூள்களுமாக வந்து கொண்டே யிருந்தன. கடைசியாக அதற்குள் ஒரு காகிதப் பொட்டணம் தெரிந்தது. ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தபோது ஸ்டேஷன் மாஸ்டருடைய முகம் பல்லைக் கண்ட பிரயாணியின் முகம்போல் மலர்ந்தது. ஆகா! என்ன ஆச்சரியம்! மூன்று கல் வைத்த மோதிரம். ஒரு சவரன் இருக்கலாம். அளவும் தன் மாப்பிள்ளையின் விரலுக்குச் சரியாக இருக்கும் என்றே பட்டது. "சரி; இதை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டியதுதான்" என்று அதைத் தமது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார்.

அடுத்த பார்ஸலை உடைத்தார். அதில், இரண்டு பட்டுப் புடவைகள் இருந்தன. "பேஷ்! மரகதத்துக்கும் அவளுக்கும் ஆச்சு!" என்றார்.



இன்னொரு பார்ஸலில் வேஷ்டிகளும் மற்றொன்றில் பட்டாசுக் கட்டுகளும் கிடைத்தன. கடைசியில் ஒரு சாக்கு மூட்டையை அமுக்கி அமுக்கிப் பார்த்தார். அவர் நினைத்தபடியே மூட்டை நிறைய உளுந்தா யிருந்ததைக் கண்டு, "நல்லவேளை, தீபாவளிக்கு இட்டிலியும் தோசையுமாய் ஜமாய்த்து விடலாம்" என்று சந்தோஷப்பட்டார்.

ஸ்டேஷன் மாஸ்டர் எல்லாச் சாமான்களையும் எடுத்து இராவோடு இராவாகக் கொண்டு போய் வீட்டில் சேர்த்தார். ஸ்டேஷனுக்கும் அவர் வீட்டுக்கும் நேர் வழியில் போவதென்றால் ஒரு பர்லாங்கு தூரம் இருந்தது. அதற்காக அவர் பிளாட்பாரத்தின் இரும்பு வேலிச் சட்டங்களில் ஒன்றைப் பெயர்த்து குறுக்கு வழி போட்டிருந்தார். பார்ஸல் அறையில் களவாடிய சாமான்கள் அவ்வளவும் குறுக்கு வழியில் தான் வீடு போய்ச் சேர்ந்தன என்று சொல்லத் தேவையில்லை.

பொழுது விடிவதற்குள் மற்ற பார்ஸல்களையெல்லாம் ஒழுங்காக அடுக்கிவிட்டுக் கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு புக்கிங் அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டார். ஏறக்குறைய தீபாவளிக்குவேண்டிய எல்லாச் சாமான்களும் சிரமமின்றிக் கிடைத்து விட்டதைப் பற்றிப் பெருத்த சந்தோஷமடைந்தார். ஆனால் விஷயம் மேலதிகாரிகளுக்குத் தெரிந்து விட்டால் உத்தியோகத்துக்கு 'ஓட்டு' விழுவதோடு தலைக்கே அல்லவா தீங்கு நேரிடும் என்று நினைக்கும்போது அவர் தலை வேதனையால் கனத்தது.

"இரவு, ஸ்டேஷனுக்கு வந்த பார்ஸல்களுக்குக் கையெழுத்துப் போட்டல்லவா வாங்கி வைத்திருக்கிறோம்? மேலதிகாரிகளுக்கு எப்படிப் பதில் சொல்வது?" என்று யோசித்தார்.

"ஐயோ! விஷயம் தெரிந்து விட்டால் ஊரெல்லாம் சிரிப்பார்களே? அப்புறம் நம்முடைய மானம் என்னத்திற்கு ஆச்சு? வந்திருக்கும் மாப்பிள்ளை தான் என்ன நினைக்க மாட்டான்? தப்பித்தவறி விஷ

யம் தெரிந்து போனால் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று முடிவு செய்தார். அப்படித் தற்கொலை செய்து கொள்வதாயிருந்தால் தூக்குப் போட்டுக் கொண்டோ, விஷம் அருந்தியோ உயிரை விடக்கூடாது. ரயிலில் இருபது வருஷ ஸர்விஸுக்குப் பிறகு வேறு இடத்தில் போய் உயிரை விடுவதாவது? அப்படி உயிரை விட்டால் தண்டவாளத்தில் தலையை வைத்து ரயிலடியிலேயேதான் உயிரை விடுவேன்!" என்று தமக்குத் தாமே தீர்மானித்துக் கொண்டார்.

பலவிதமான யோசனைகள் ஹிருதயத்தில் புகுந்துகொண்டு வேலை செய்ய ஆரம்பித்தன. போலீஸ்காரர்கள் வருவதுபோலவும் தம்மைக் கைது செய்து கொண்டு போவதைப் போலவும் நினைத்து நடுங்கினார். "கடவுளுக்கு ஏழைகளின் மீது இரக்கம் உண்டு என்பது நிச்சயமென்றால் தம்மை இந்தப் பேராபத்தினின்றும் காப்பாற்ற வேண்டியது அவருடைய பொறுப்பாகும்" என்று பாரத்தைக் கடவுள்மீது போட்டார்.

பொழுது விடிந்ததும் ஸ்டேஷன் மாஸ்டர் மெதுவாகக் கூட்ஸ் வண்டி மாதிரி நடந்து வீட்டை அடைந்தார். ஆழ்ந்த யோசனையோடு இருக்கும்போது கூட்ஸ் வண்டி போலவும், உற்சாகமான சமயங்களில் மெயில் வண்டியைப் போலவும் நடப்பது அவருடைய வழக்கம்.

சாமான்களை யெல்லாம் கண்டதும் வீட்டில் மாப்பிள்ளை, பெண், மனைவி எல்லோரும் ஒரே குதூகலமாய் இருந்தார்கள். அந்த ஆனந்தத்தில் மாப்பிள்ளை எல்லோரையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போவது என்று நிச்சயித்தான்.

அன்றிரவு எல்லோரும் சினிமாவுக்குப் போனதும் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்டேஷனுக்கு வந்து தமது அறையில் உட்கார்ந்து சிந்தனை செய்யத் தொடங்கினார்.

இந்தக் காட்டுப்பாளையம் ஸ்டேஷனுக்கு எவனாவது ஒரு திருடன் வந்து பார்ஸல் அறையைக் கொள்ளை யடித்துக்கொண்டு போனால், அந்த அறையிலிருந்து தான் களவாடிய சாமான்களையும் திருடன் கொண்டு போய் விட்டதாகச் சேர்த்துச் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாமே என்றுதான் ஸ்டேஷன் மாஸ்டர் அவ்விதம் வருத்தப்பட்டார். திருடர்கள் இருக்கும் விலாசம் தெரிந்தால் ஒரு கடிதம் போட்டாவது வரவழைக்கலாமே என்றும் வருத்தப்பட்டார்.

ஸ்டேஷன் மாஸ்டர் நினைத்தபடி அதிருஷ்ட வசமாய் அன்றிரவு வாஸ்தவமாகவே ஒரு திருடன் வந்தான்!

மணி பதினொன்று இருக்கலாம். எங்கு பார்த்தாலும் ஒரே இருட்டு சூழ்ந்து கொண்டிருந்தது. இலேசாகத் தூற்றல் வேறு. அப்போது ஸ்டேஷன் வேலியின் சந்து வழியாக, யாரோ ஒரு ஆசாமி உள்ளே நுழைந்து வந்தான். அவன் தன்னை ஒரு பிச்சைக்காரன் என்றும் தூற்றலாய் இருப்பதால் இரவு படுத்துக் கொள்ள பிளாட்பாரத்தில் இடம் தர வேண்டும் என்றும் ஸ்டேஷன் மாஸ்டரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அவன் இஷ்டப்படி ஸ்டேஷன் வராந்தாவிலேயே படுத்துக் கொள்ளச் சொன்னார். ஸ்டேஷன் மாஸ்டர் தயாராக மூன்று கஜ நீளத்தில் ஒரு கயிற்றைக் கொண்டு வந்து பக்கத்தில் வைத்து விட்டுத் தூங்குவதைப் போல் பாவனை செய்து கொண்டிருந்தார். (மூன்று கஜக் கயிறு ஸ்டேஷன் மாஸ்டர் தூக்குப் போட்டுக் கொள்வதற்கென்று நேயர்கள் நினைத்தால் அது தவறாகும்!)

மணி பன்னிரண்டு அடித்தது. ஒரே இருட்டு. ஸ்டேஷன் மாஸ்டர், வந்திருக்கிற பிச்சைக்காரன் திருடனாக மாறக்கூடாதா என்று கவலைப்பட்டார். அவர் எதிர்பார்த்தபடி—என்ன அதிசயம்!—படுத்துக் கொண்டிருந்த ஆசாமி மெதுவாக எழுந்து வந்து ஸ்டேஷன் மாஸ்டர் தூங்கிவிட்டாரா என்று கவனித்தான். ஸ்டேஷன் மாஸ்டர் தூங்குவதைப் போல் பாசாங்கு செய்தார். வந்தவன் ஸ்டேஷன் மாஸ்டர் நல்ல தூக்கத்தில் இருப்பதைக் கண்டு மெதுவாகப் பார்ஸல் அறைப் பக்கம் வந்து சிரமப்பட்டுக் கதவை உடைத்து உள்ளே நுழைந்தான். அந்தச் சமயம் பார்த்து ஸ்டேஷன் மாஸ்டர் அவன் பின்னால் வந்து அவனுடைய இரு கண்களையும் தமது இரு கரங்களாலும் பொத்திக் கொண்டார். "நான் யார் கண்டுபிடி!' என்று அவனிடம் 'கண்ணாமூச்சி' வேடிக்கை பண்ணினார். திருடன் நடு நடுங்கிப் போய் "ஐயோ!" என்று அலறினான். ஸ்டேஷன் மாஸ்டர் அவனைத் தைரியப்படுத்தி, "பரவாயில்லை; பயப்படாதே. பாவம், நீ என்ன செய்வாய்? தீபாவளிக்குச் சாமான்கள் இல்லாது கஷ்டப்படுவாயே? இதோ இந்தா" என்று சொல்லித் தாமாகவே சாமான்களை யெல்லாம் எடுத்துத் திருடன் கையில் கொடுத்தார். வந்தவன்

இதை யெல்லாம் கண்டு திருடன் மாதிரி விழித்தான்!

ஸ்டேஷன் மாஸ்டர் மேலும் அவனை தைரிய மூட்டி "ஆனால் நீ ஒன்று மட்டும் செய்யவேண்டும். போகும்போது நீ என்னை என்னுடைய நாற்காலியில் கட்டிப்போட்டு விட்டுப் போக வேண்டும். கயிறுகூடத் தயாராய் வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் நீ திருடிக்கொண்டு போகும்போது நான் சும்மா பார்த்துக் கொண்டிருந்ததாகவோ அல்லது தூங்கிக் கொண்டிருந்ததாகவோ என் பேரில் குற்றம் ஏற்படும். அதற்காகத்தான் கட்டிப் போடச் சொல்கிறேன்" என்றார். திருடனுக்கு ஸ்டேஷன் மாஸ்டர் வார்த்தைகளில் நம்பிக்கை பிறந்தது. "இவர் இவ்வளவு சாதுவானவர் என்று தெரிந்திருந்தால் இந்த அறைக் கதவை உடைக்க இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லையே? முன்னாடியே சாவியை இவரிடம் கேட்டு வாங்கித் திறந்திருக்கலாமே" என்று வருந்தினான். பிறகு அவர் சொன்னபடியே நாற்காலியில் அவரைக் கட்டிப் போட்டு விட்டுச் சாமான்களை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். திருடன் ஓடி மறைவதை நன்றியறிதலோடு பார்த்துக் கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் கண்கள் பச்சை விளக்குகளைப் போல் பிரகாசமாய் ஜொலித்தன!


மறுநாள் பொழுது விடிந்து மாரிசாமி 'டூடி'க்கு வந்தபோது ஸ்டேஷன் மாஸ்டர் நாற்காலியில் கட்டிப்போட்டுக் கிடப்பதையும் பார்ஸல் அறை உடைக்கப்பட்டு சாமான்கள் சிதறிக் கிடப்பதையும் கண்டு திடுக்கிட்டுப் போனான். ஸ்டேஷன் மாஸ்டரைக் கட்டுகளிலிருந்து விடுவித்து சங்கதியைத் தெரிந்து கொண்டான். உடனே ஸ்டேஷன் மாஸ்டர் தலைமை ஆபீஸுக்கு விஷயத்தைச் சுருக்கமாகத் தந்தி மூலம் அறிவித்தார். களவுபோன சாமான்கள் ஜாபிதாவுடன், தான் எடுத்துக் கொண்ட சாமான்களையும் சேர்த்துத்தான் தந்தி கொடுத்தார் என்று சொல்லத் தேவையில்லை. பிறகு, அவருடைய வேதனைகள் எல்லாம் தீர்ந்து தலையிலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கியதைப் போல் உணர்ந்தார். சாவதானமாக எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு மன நிம்மதியுடன், "அப்பா! தீபாவளியை இனி சந்தோஷமாய்க் கொண்டாடலாம். இனிமேல் பயமில்லை. மேலதிகாரிகளோ, போலீஸோ தன் மீது சந்தேகப்படுவதற்குத் துளிக்கூட நியாயமில்லை. கதவு உடைபட்டிருந்ததையும் தான் நாற்காலியில் கட்டிப்போட்டுக் கிடந்ததையும் மாரிசாமியே கண்ணால் பார்த்திருக்கிறான். அவன் சொல்லும் சாக்ஷியே போதுமானது" என்று தம்மைத் தாமே சமாதானப்படுத்திக் கொண்டார்.

இந்த மனத் திருப்தியுடன் உற்சாகமாக மெயில் வண்டியைப் போல் நடந்து வீட்டை அடைந்தார். ஆனால், என்ன ஆச்சரியம்! இராத்திரி அவருடைய மாப்பிள்ளை, மனைவி எல்லோரும் கதவைப் பூட்டிக் கொண்டு ஸினிமாவுக்குப் போயிருந்த சமயம் அவர் வீட்டில் வேறு யாரோ ஒரு திருடன் புகுந்து தீபாவளிக்காக அவர் சேகரித்து வைத்திருந்த அவ்வளவு சாமான்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போயிருந்தான். வீட்டில் இவர் காலடி எடுத்து வைத்தபோது எல்லோரும் 'குய்யோ முறையோ' என்று அலறிக் கொண்டிருந்தார்கள். விஷயத்தைக் கேட்ட ஸ்டேஷன் மாஸ்டருடைய தலை ரயில் சக்கரம்போல் சுழன்றது. முகம் 'பிரம்மஹத்தி' பிடித்த மாதிரி களை யிழந்து காணப்பட்டது.

இந்தக் கண்ணராவியைக் காணச் சகியாத மாப்பிள்ளை, மாமனார் மீது இரக்கம் கொண்டான்.

பிறகு மாமனாரை அழைத்து, "நடந்ததைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்; எனக்கு மோதிரம் ஒன்றும் வேண்டாம். என்னிடம் ஐம்பது ரூபாய் பணம் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு தீபாவளிப் பண்டிகையை நடத்துங்கள்" என்றான்.

மாப்பிள்ளை கொடுத்த பணத்தைக் கொண்டு ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டில் தலை தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டது. இந்தத் தடவை மாப்பிள்ளை ஊருக்குப் போகும்போது எந்த விதமான மனஸ்தாபமும் இன்றி மரகதத்தோடு டிக்கட் வாங்கிக்கொண்டே ரயில் ஏறினான்!



மனச் சாட்சி

வஸந்தன்


“அம்மா! ஒரே ஒரு குடம் கொண்டு வா!” என்று குழந்தை ராஜகோபாலன் தன் தாயாரைப் பார்த்துக் கேட்கவில்லை. அப்புறம், ஒரு யானையைக் கொண்டுவாச் சொல்லி, அந்த யானையைக் குடத்துக்குள் போகச் சொல்ல வேண்டுமென்று அசட்டுத்தனமாகக் கேட்டு அழும்பு செய்யவுமில்லை. ஆனால், அவர்கள் வீட்டு மோட்டார் காரைத் தூக்கித் தன் கையில் கொடுக்க வேண்டுமென்று தான் குழந்தை அழும்பு செய்தான். “அசடு மாதிரி படுத்துகிறாயே! எப்படி மோட்டாரைத் தூக்கி உன் கையில் கொடுப்பேன்?” என்று சமாதானம் சொல்லுவாள் தாயார். ஆனால், குழந்தை தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விடுவான்.



ராஜகோபாலன் நீலகண்ட ஐயரின் ஒரே குழந்தை. ஆகவே, அவரும் அவர் மனைவி சுந்தரியம்மாளும் போட்டி போட்டுக் கொண்டு குழந்தைக்குச் செல்லம் கொடுத்து வந்தார்கள். குழந்தை எது செய்தாலும் பெற்றோர்களுக்குப் பெரிதாகத் தோன்றிற்று. குழந்தை ஏதாவது சாமானைக் கீழே கொட்டினால், “பார்த்தாயாடி! குழந்தை எவ்வளவு அழகாகக் கொட்டியிருக்கிறான், பார்! இவ்வளவு நன்றாக வேறு எந்தக் குழந்தையாவது கொட்ட முடியுமா?” என்று கேட்பார் தகப்பனார்.

அவர்கள் வீட்டுக்கு அக்கம் பக்கத்திலுள்ள வீடுகள் எல்லாம் காலியாக இருந்ததற்குச் சின்னஞ் சிறு குழந்தை ராஜுதான் காரணம் என்று கூறினால் சற்று வியப்பாகத்தானிருக்கும். ஆனால், குழந்தைச் சண்டையின் மகத்துவத்தை அறிந்தவர்களுக்கு அது ஆச்சரியமாயிராது.

“அதோ, அவா ஆத்து பாலு என்னை அடிச்சான்” என்று ராஜு அப்பாவிடம் சொல்ல வேண்டியதுதான் தாமதம், நீலகண்ட ஐயர் ஒரு கான்ஸ்டேபிளைக் கூப்பிட்டு ஒரு உத்தரவு போடுவார். மறுநாள் அவன் பாலுவின் தகப்பனாரை எப்படியோ ‘நியூ ஸென்ஸ் சார்ஜு’ செய்து வம்பில் மாட்டி வைத்து விடுவான். எனவே, அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் போலீஸ் இன்ஸ்பெக்டர் நீலகண்ட ஐயரைக் கண்டு நடுங்கியதில் என்ன ஆச்சரியம்? நீலகண்ட ஐயர் குழந்தையிடம் கொண்டிருந்த அபார அன்பைத் தங்களுக்குச் சாதகமாகச் சிலர் உபயோகித்துக் கொள்ளத் தவறவில்லை. நீலகண்ட ஐயரிடம் ஏதாவது காரியம் சாதித்துக்கொள்ள வேண்டுமானால் அவர்கள் முதலில் இரண்டு நிமிஷம் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி விட்டுப் போவார்கள்! உடனே அவர்கள் போன காரியம் ஆனமாதிரிதான்!



இரண்டு பேர்களும் ‘காப்பி’ அடிக்கிறார்களோ என்று உபாத்தியாயர் சந்தேகிக்கிறார்.


வருஷங்கள் சென்று கொண்டிருந்தன. ராஜகோபாலன் வகுப்பில் முதலாவதாகத் தேறிக் காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். நீலகண்ட ஐயர் அப்பொழுது போலீஸ் இலாகாவில் பெரிய உத்தியோகம் வகித்து வந்தார். குழந்தை எங்கு போனாலும் 'ஆர்டர்லி' சேவகர்கள் துணையாகப் போவார்கள். அவன் இட்ட கட்டளையைத் தலையால் ஏற்றுச் செய்ய அவர்கள் கையைக் கட்டிக்கொண்டு காத்திருப்பார்கள். தகப்பனாரை யார் பார்க்க வந்தாலும் ராஜகோபாலனுக்கு ஏதாவது வெகுமதி வாங்கிக் கொண்டு வருவார்கள். என்றைக்காவது ராஜு தகப்பனாரின் ஆபீசுக்குப் போனால் கேட்கவே வேண்டாம்! சேவகர்களும் கையைக் கட்டிக்கொண்டு எழுந்து நிற்பார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர்களென்ன, பெரிய பெரிய அதிகாரிகளென்ன அவனைப் பிரேமாலிங்கனம் செய்து கொள்வார்கள். "கொல்லையில் கத்தரிக்காய் காய்க்கிறதா?" "கன்றுக் குட்டியின் ஜலதோஷம் சரியாகப் போய்விட்டதா?" என்றெல்லாம் அவனை அக்கரையாய் விசாரிப்பார்கள். போலீஸ் உதவிக் கமிஷனர் நீலகண்டய்யரின் செல்வக் குமாரனை இவ்வளவுகூட விசாரிக்காவிட்டால் போலீஸ் உத்தியோகம் பார்த்துப் பிரயோசனம் இல்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ராஜுவுக்கு உலகமே இன்ப மயமாயிருந்தது. வீட்டில் சீராட்டல்; வெளியிலோ அந்தஸ்து. ராஜு 'டிப் டாப்'பாக டிரஸ் செய்துகொண்டு 'ஜம்'மென்று காரில் காலேஜுக்குப் போவான். "அடேயப்பா! என்ன ஜம்பம் வேண்டிக் கிடக்கிறது!" என்பார்கள் அவன் நடையைப் பார்த்தவர்கள். "மோட்டார் ஒன்று இருந்தால்தான் என்ன? அதை இப்படியா 'கிரீச்' சென்று பிரேக் போட்டு நிறுத்தவேண்டும்?" என்பார்கள், அவன் மோட்டாரை நிறுத்தும் ஜோரை ரசிக்கத் தெரியாதவர்கள்.

நான்கு வருஷங்கள் சென்றன. ராஜகோபாலனின் வாழ்க்கையில் எதிர்பாராத மாறுதல் உண்டாயிற்று. ஒரு நாள் நீலகண்ட ஐயர் வீட்டின் எதிரிலுள்ள 'ஆர்டர்லி' சேவகர்கள் மறைந்து விட்டார்கள். ஐயரின் குடும்பம் முன்பு வசித்து வந்த பெரிய பங்களாவைக் காலி செய்துவிட்டு ஒரு சிறிய வீட்டிற்குக் குடி வந்தது. இப்பொழுது அந்த வீட்டுக்கு எந்த உத்தியோகஸ்தரும் வருவதில்லை. "எஜமான் வீட்டில் இருக்கிறாரா?" என்று கசமுசக் குரலில் யாரும் கேட்கவில்லை. காரணம், ஐயர் வேலையிலிருந்து ரிடையராகி விட்டதுதான்.



இப்பொழுது ராஜுவைப் பார்த்துப் பயபக்தியுடன் புன்னகை செய்து, "கன்றுக் குட்டி சௌக்கியமா?" என்று யாரும் விசாரிக்கவில்லை. தகப்பனார் ரிடையரானதும் உலகமே அஸ்தமித்து விட்டதுபோல் அவனுக்குத் தோன்றிற்று.



இருவரையும் கையும் களவுமாய்ப் பிடிக்கிறார். காகிதத்தைப் பார்த்ததும் விஷயம் புரிகிறது!

அப்பொழுது ராஜு படிப்பை முடித்து விட்ட சமயம். தகப்பனார் அவனுக்கு வேலைக்காக எவ்வளவோ சிபார்சு செய்து பார்த்தும், ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில், அவனுக்கு ஒரு சர்க்கார் காரியாலயத்தில் அறுபது ரூபாயில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. அந்த வேலை பார்க்கக் கொஞ்சமும் ராஜு இஷ்டப்படவில்லை. ஆனால், தாயார் ரொம்பவும் கேட்டுக் கொண்டதன்பேரில் வேலையை ஏற்றுக் கொண்டான்.

எந்த வேளையில், ராஜகோபாலன் உத்தியோகம் பார்க்கப்போனானோ தெரியவில்லை, அவன் மனத்திலிருந்த கொஞ்ச நஞ்ச சந்தோஷமும் பறந்தே போய் விட்டது.

சுந்தரியம்மாள் ஒரு நாள் கணவரிடம் சென்று, "குழந்தைக்கு அந்த உத்தியோகம் பிடிக்க வில்லை என்று தோன்றுகிறது. இஷ்டமில்லா விட்டால், ராஜினாமாச் செய்யச் சொல்லி விடுங்கள்" என்றாள். அன்று சாயங்காலம் ராஜகோபாலன் வந்ததும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார் நீலகண்ட ஐயர். "அப்பா! அந்த வேலை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. எதற்காக அதை என்னை விட்டு விடச் சொல்கிறீர்கள்?" என்றான் ராஜு.

மறுநாள் காலை ராஜு ஆபீஸுக்குப் புறப்பட்ட காட்சியைப் பார்த்ததும், சுந்தரியம்மாளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. வழக்கமாக அணியும் ஆடைக்குப் பதிலாக ராஜு ஒரு பழைய சட்டையையும் கோட்டையும் போட்டுக் கொண்டிருந்தான். தலையில் பழைய குல்லாய் ஒன்று வைத்துக் கொண்டிருந்தான்.

"இது என்ன வேஷம்?" என்று தாயார் கேட்பதற்குள் ராஜு முந்திக்கொண்டு "அம்மா! டிபனுக்கு வழக்கமாகக் கொடுக்கும் பிஸ்கோத்து, கோக்கோ, ரொட்டி ஒன்றும் எனக்கு வேண்டாம். கொஞ்சம் குழம்புஞ் சாதம் பிசைந்து கொடு" என்றான். "கண்ணே! ஏன் இப்படிப் பேசுகிறாய்?" என்று மனம் கலங்கிக் கேட்டாள் தாயார்.

"அம்மா! இத்தனை நாளாய் நான் ஏதோ அசட்டு நினைப்பு நினைத்தேன். இவ்வளவு நாள் என்னை எல்லோரும் கொண்டாடினார்கள். எங்கே போனாலும் மரியாதை கொடுத்தார்கள். அதையெல்லாம் பார்த்து நான் கர்வங் கொண்டேன், அம்மா! ஆனால் அந்தக் கௌரவம் என் யோக்கியதைக்காகக் கொடுக்கவில்லை. அப்பா செல்வாக்கில் இருக்கிறார் என்பதற்காகக் கொடுத்தார்கள்."

இந்தச் சமயத்தில் நீலகண்ட ஐயர் மெதுவாக வந்து பின்னால் நின்றதை அவன் கவனிக்கவில்லை.

"அம்மா! நீங்கள் அன்பு, ஆதரவு எல்லாம் கொடுத்தீர்கள். ஆனால் யோக்கியதையையும் கௌரவத்தையும் தானாகச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான் என்று இப்பொழுது அறிந்து கொண்டேன். நான் காரை ஓட்டிக்கொண்டு போய் அன்று ஆபீசில் நிறுத்தினேன். என் சகாக்களில் இருவர் என்னைப் பார்த்து ஏதோ பேசிக்கொண்டு சிரித்தார்கள். அம்மா, அவர்கள் என்ன பேசியிருப்பார்கள்? அப்பாவின் அந்தஸ்தைக் கொண்டு நான் டாம்பீகமாக இருக்கிறேன் என்றுதானே? என் அப்பா பணக்காரர் என்பதைத் தவிர, மோட்டார் வைத்துக் கொள்ள எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அம்மா! யார் எங்கே சிரித்தாலும் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலவே யிருக்கிறது. அந்தக் காரில் உட்காரும்போது என் மனச்சாட்சி உறுத்துகிறது. ஒருவர் எதற்கு அருகதையோ, அந்த சுகங்களைத்தானே அனுபவிக்கலாம்? அதற்கு மேல் அடைவது அகௌரவம் என்றே நினைக்கிறேன். அறுபது ரூபாயில் நான் எவ்வளவு சௌகரியம் அடையலாமோ, அதை அடைவதுதான் கௌரவம். இனி எனக்குக் காரும் வேண்டாம், டாம்பீகமும் வேண்டாம்!"

சுந்தரியம்மாள் ராஜுவின் விசித்திரமான பேச்சைக் கேட்டு முகத்தை மூடிக் கொண்டு துக்கம் தாங்காமல் அழ ஆரம்பித்து விட்டாள். நீலகண்ட ஐயர் அருகே வந்து, "சுந்தரி! இது ஆனந்தக் கண்ணீர் தானே? குழந்தை இவ்வளவு புத்திசாலியானதற்கு ஆனந்தப்பட வேண்டியதுதான்" என்று சொல்லிக் குழம்புஞ் சாதத்தைத் தன் மூடிய கைகளால் பிசைந்து ராஜுவிடம் கொடுத்தார்.

மேற்படி சம்பவம் நடந்த சில வருஷங்களுக்கெல்லாம், ராஜு சோற்று மூட்டையுடன் ஆபீஸுக்கு நடந்து போவதென்ற வைராக்கியத்தை நிறைவேற்ற முடியவில்லை. இப்பொழுது அவன் காரில்தான் ஆபீஸுக்குப் போகிறான். ஏனெனில், அவன்தான் இப்போது அந்த ஆபீஸின் மானேஜர்!

தெய்வத் தாத்தா

விந்தன்

சினிமாக் காட்சிகளைப் போல் இந்தக் கதையின் சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சில தமிழ் டாக்கிகளைப் பார்க்கும்போது நேயர்கள் அனுபவிக்கும் அத்தனை கஷ்ட நஷ்டங்களையும் இந்தக் கதையைப் படிக்கும்போதும் அனுபவிக்கலாம்.

★

அன்று தீபாவளி. ஆதவன் மறைந்து அந்தகாரம் சூழும் நேரம். எல்லையில்லாத குதூகலத்துடன் அந்தக் கிராமமே கோலாகலமாய்க் காட்சியளிக்கிறது.

ஒரு கூரை வீடு. திண்ணையின்மேல் இரண்டு கிழவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒரு யுவதி மாடத்தில் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் நீண்ட ஜடையில் அடுக்கடுக்காய்க் கத்தரித்து வைக்கப்பட்டிருக்கும் தாழம்பூ, தங்கத் தகடுகளைப்போல் 'தகதக'வென்று ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பூ மணத்தில் ஏதோ புத்துணர்ச்சி பெற்ற ஒரு கிழவன், அவள் பின்னலை லேசாக இழுத்து விட்டுவிட்டுச் சிரிக்கிறான்.

"என்ன, தாத்தா! ஏன் பின்னலைப் பிடிச்சு இழுத்தே?"

"இல்லை, திருமேனி! உன் தாழம்பூ ஜடையைப் பார்த்ததும் செத்துப் போன அவளை நினைச்சுக்கிட்டேன்!"

"உனக்கு இன்னும் என்ன ஆசை தாத்தா!" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே, அந்தப் பெண் தோட்டத்தை நோக்கி ஓடுகிறாள்.

இந்தச் சமயத்தில் ஒரு வாலிபன் அங்கே வருகிறான். அவனைப் பார்த்ததும், "போடா, அழகப்பா! போ! உன்னைத் தேடித்தான் அவ தோட்டத்துக்குப் போறா!" என்கிறான் கிழவன்.

அவன் தலை மறைந்ததும் அந்தக் கிழவன் பக்கத்திலிருந்த கிழவனைப் பார்த்து, "பெரியண்ணா! என் மவன் மருதப்பன் இருக்கானே, அவன் ஒரு சமயம் இந்தப் பெண் வாழ்வையே குட்டிச்சுவராக்கப் பார்த்தான். அந்தக் கதையைச் சொல்கிறேன், கேளு!" என்று கிழவன் ஆரம்பிக்கிறான்.

★

ஒரு நாள் காலை. அருணோதயத்தைக் கண்டு ஆத்திரமடைந்த அந்தகாரம் மெள்ள நழுவிக் கொண்டிருக்கிறது. அழகப்பன் குளத்தங்கரை ஆலமரத்தடியில் நின்று பல் தேய்த்துக் கொண்டிருக்கிறான். திருமேனி குளத்தங்கரையை நோக்கி வந்துகொண்டிருக்கிறாள்.

'குக்கூ, 'குக்கூ' என்று குயில் கூவுகிறது. அவளும் அந்தக் குயிலுடன் சேர்ந்து, 'குக்கூ, குக்கூ' என்று கூவுகிறாள். அவளுடைய குரலைக் கேட்டு வெட்கம் தாங்க முடியாமல், 'குக்கூ, குக்கூ' என்று இரைந்து கூவிக் கொண்டே குயில் பறந்து ஓடுகிறது!

இந்தக் காட்சி அழகப்பனுக்கு இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு இன்ப வேதனையை உண்டாக்கி விடுகிறது. அவன் அவளையே கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருக்கிறான்.

அந்தப் பெண் குளத்தங்கரையை நாடுகிறாள். அப்பொழுது குளத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த ஒரு பச்சைக் கிளி, அவளைக் கண்டதும் பறந்து ஓடுகிறது. விஷமக்காரியான



கடைக்காரர்:—நான்தான் துணியே ஒன்றும் கிடையாது என்கிறேனே, எதற்காக இப்படி வீணாய் மல்லுக்கு நிற்கிறீர்கள்?

வந்தவர்:—வாஸ்தவம்தானய்யா! மல்லுக்குத்தான் நிற்கிறேன். இரண்டு கஜம் மல்லாவது கொடுங்கள்!



அந்த விளையாட்டுப் பெண்ணும் அதற்குப் பின்னால் பறந்து ஓடுகிறாள்.

பறந்து சென்ற பச்சைக் கிளி, பக்கத்திலிருந்த ஒரு மாமரப் பொந்துக்குள் தலையை நீட்டுகிறது. தாயைக் கண்டதும், 'கிக்கீ, கிக்கீ' என்று கொஞ்சிக் கொண்டே பொந்தை விட்டு வெளியே வந்த அதன் குஞ்சு, தவறிக் கீழே விழுந்து விடுகிறது.

உடனே குஞ்சு விழுந்த இடத்திற்கு 'ஜிவ்'வென்று பறந்து வந்த பச்சைக் கிளி, அதைப் பார்த்துப் பதறுகிறது.

இந்தக் காட்சியைக் கண்டு திருமேனியின் உள்ளம் உருகுகிறது. அவள் அந்தக் கிளிக் குஞ்சைப் பிடித்துக் கொண்டு மரத்தின்மீது ஏறுகிறாள். பொந்துக்குள் குஞ்சை விட்டு விட்டுக் கீழே இறங்கும்போது, அவள் ஆதரவாகப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு கிளை, திடீரென்று முறிந்து விடுகிறது. அவள் கீழே விழுந்து விடுகிறாள்.

பேச்சு மூச்சின்றி விழுந்து கிடக்கும் அவளைத் தூக்கித் தோளின்மீது போட்டுக்கொண்டு, அழகப்பன் தன் வீட்டை நோக்கி விரைந்து ஓடுகிறான்.

குளிர்ந்த நீரும் குளுகுளுப்பான காற்றும் அவளைச் சற்று நேரத்தில் மூர்ச்சை தெளியச் செய்கின்றன. தெளிந்ததும் அவள், "ஐயோ! சித்தி என்னைத் தேடிக்கிட்டு இருப்பாளே!" என்று குளத்தை நோக்கி ஓடுகிறாள். ஓடும் ஓட்டத்தில் அழகப்பனைத் திரும்பிப் பார்த்து ஒரு முல்லைச் சிரிப்புச் சிரிக்கிறாள் திருமேனி. அந்தச் சிரிப்பிலே அவன் ஆசைத் தீ ஜ்வாலை விட்டு எரிகிறது!

★

குளத்தங்கரையில் கோபாவேசமாய் ஒருத்தி நின்று கொண்டிருக்கிறாள். அவள் திருமேனியைப் பார்த்ததும், "ஏண்டி! நீ வீட்டை விட்டுக் கிளம்பி எத்தனை நேரமாச்சு? இந்நேரம் எங்கே போயிருந்தே?" என்று சீறி விழுகிறாள்.

"இல்லே, சித்தி...!" என்று மேலே சொல்லத் தயங்கிக் கொண்டே, திருமேனி குடத்தில் நீரை நிரப்பி இடுப்பில் வைத்துக் கொள்கிறாள்.

அப்பொழுது, அங்கே வந்த ஒரு வாலிபன், அவள்மேல் தண்ணீரை வாரி இறைக்கிறான். "சீ! 'என் பேச்சுக்கு வராதே வராதே!' ன்னு எத்தனை தரம் சொல்றது? உனக்கு வெட்கமில்லே?" என்று சீறுகிறாள் திருமேனி.

"அக்கா! அவ சொல்றதைப் பாரு, அக்கா!" என்று திருமேனியின் சித்தியிடம் முறையிடுகிறான் அந்த வாலிபன்.

"அவ கிடக்கிறா, சிங்காரம்! அவளை உன் காலிலே கட்டி, உனக்குக் கழுதை மாதிரி நான் வேலை செய்ய வைக்கிறேன்!" என்கிறாள் சித்தி.

"வைப்பே, வைப்பே!" என்கிறாள் திருமேனி.

"ஏண்டி! வைக்க மாட்டேன்?" என்று கேட்டுக் கொண்டே அவள் திருமேனியின் கன்னத்தில் ஒரு இடி இடிக்கிறாள்.

அவள் அழுதுகொண்டே வீட்டிற்குச் செல்கிறாள். அங்கிருக்கும் ஒரு கிழவன், "என்ன, அம்மா! என்ன நடந்தது?" என்று அவளை விசாரிக்கிறான்.

"தாத்தா! சித்தி இல்லே, சித்தி..." என்று அவள் ஆரம்பிக்கும்போதே, அங்கே வந்த சித்தி, "அவன் என்னமோ மாமன் மகளாச்சேன்னு அந்தத் தண்ணியை வாரி இறைச்சான்; அதுக்குத்தான் இத்தனை அமர்க்களம்!" என்கிறாள்.

"எல்லாம் அவளுக்கு ஒரு அக்கா இருக்கிறாப்போல, அவளுக்கும் ஒரு

அம்மா இருந்தாத் தெரியும்!'' என்றான் கிழவன்.

"நீதான் இருக்கயே, தாத்தா!" என்கிறான் சித்தி.

"ஆமாம்; இந்தத் தாத்தா இருக்கிற வரையிலே, உன் தம்பிக்கு இவளைக் கட்டி வைக்கலாம்னு நீ கனவிலும் நினைக்காதே!" என்கிறான் கிழவன்.

★

மறுநாள் மாலை. அந்தி தரும் சித்திரம் அந்தக் கிராமத்திற்கே ஒரு தனி அழகைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. திருமேனி தோட்டத்தில் பூப் பறித்துக் கொண்டிருக்கிறாள். அழகப்பன் தோட்டத்துக்கு வெளியே நின்று கொண்டிருக்கிறான். முட்கள் நிறைந்த ரோஜாச் செடிகளில் அடிக்கடி அவள் சேலை சிக்கிக் கொள்கிறது. "சீ! விடு, விடு!" என்று சிடுசிடுத்துக் கொண்டே அவள் தன் சேலையை விலக்கிக் கொள்கிறாள்.

இந்தக் காட்சியில் அவளுக்குத் தெரியாமல் நெடு நேரம் ஈடுபட்டிருந்த அழகப்பன், "என்னையும் ஒருதரம் 'சீ! விடு, விடு!'ன்னு சொல்லேன்" என்று வேண்டிக் கொண்டே திருமேனியின் கரத்தைத் தீண்ட வருகிறான்.

"இதென்ன வேதனை! ஐயோ! என் அப்பா வருவாரே!" என்கிறாள் திருமேனி.

அப்பொழுது ஒரு கன்றுக் குட்டி அந்தத் தோட்டத்துக்குள் துள்ளி ஓடி வருகிறது. அதைப் பின்பற்றி அவள் தந்தையும் வந்து விடுகிறான்!

அவன் தன்னைப் பார்த்த பார்வையிலேயே திருமேனி நடுநடுங்கி விடுகிறாள். அழகப்பன் ஒன்றும் செய்யத் தோன்றாமல் வெலவெலத்து நிற்கிறான்.

"அடேய்! அத்தனை தைரியமா உனக்கு?" என்று இரைந்து கொண்டே அவன் அழகப்பனைப் பிடித்து அங்கிருந்த மரத்தில் கட்டி விடுகிறான்.

திருமேனி திருதிருவென்று விழித்துக் கொண்டே, "தாத்தா, தாத்தா!" என்று அலறுகிறாள்!

உடனே தாத்தா விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறார். நடந்த விஷயத்தை யாரும் சொல்லாமலே புரிந்து கொண்ட தாத்தா, "அடேய், மருதப்பா! இதற்கு ஏன்டா இத்தனை அமர்க்களம்? நாலு பேர் பார்த்தா என்ன சொல்லுவாங்க? நடந்தது ஒன்னுன்னா நடக்காதது ஆயிரம் சேர்த்துச் சொல்லுவாங்க! அதாலே உன் பெண்ணை எவனும் கல்யாணம் பண்ணிக் கொள்ள வராமலே போனாலும் போகலாம். பேசாமல் நான் சொல்றதைக் கேளு. நாளைக்கே அவனுக்கு இவளைக் கட்டி வைத்து விடு! அதுதான் அவனுக்குத் தக்க தண்டனை!" என்கிறார்.

"அப்படின்னா, இத்தனை நாளா இவளையே நம்பிக்கிட்டு இருந்தானே நம்ப சிங்காரம், அவன் கதி என்ன?" என்று கேட்கிறான் மருதப்பன்.

இதைக் கேட்டுக் கொண்டே அப்பொழுது அங்கே வந்த சிங்காரம், "நான் என்ன, அப்படி மானங் கெட்டவனா, இனிமே அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க?" என்கிறான்.

அதைக் கேட்டு அகமும் முகமும் ஒன்றாய் மலர்ந்த தாத்தா, "பார்த்தாயா, மருதப்பா! இவனே இப்படிச் சொல்லும் போது, இன்னும் ஊரார் என்ன சொல்லுவாங்க?" என்று கேட்கிறார்.

மருதப்பன் மௌனம் சாதிக்கிறான்.

அழகப்பன் விடுதலை யடைகிறான்.

"தாத்தா! நீங்க தெய்வத் தாத்தா!" என்று சொல்லிக் கொண்டே அழகப்பன் அந்தத் தாத்தாவின் காலில் விழுகிறான்.


திருமேனியின் கண்கள் அழகப்பனை நோக்குகின்றன; அழகப்பனின் கண்கள் திருமேனியை நோக்குகின்றன. இருவரின் கண்களும் சிறிது நேரம் ஏதோ பேசிக் கொள்கின்றன! — அதென்ன பாஷை? நமக்கு ஒன்றுமே புரியவில்லையே!

★

மறுபடி. இரண்டு கிழவர்கள் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் காட்சி.

"அப்பொழுது நான் அப்படிச் செய்திராவிட்டால், இப்பொழுது அந்தப் பெண் அத்தனை சந்தோஷமாயிருப்பாளா?" என்று கேட்கிறார் தெய்வத் தாத்தா.

"ஆயிரம் வருஷத்துப் பயிரு; அப்படிச் செய்ததுதான் சரி!" என்று சொல்லிக் கொண்டே எழுந்து நடக்கிறார் பெரியண்ணு.




திருப்தி, அமைதி
ஒரு கப் டீ அருந்தியவுடன்.
கேட்பானேன், நரஸுஸின் டீ
தான்! நல்ல காபி, டீயை
அனுபவிக்க அறிந்தவர்கள்
நரஸுஸ் காபி, டீயையே
விரும்புகிறார்கள்.
நரஸுஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MNK-22-TN

கல்கி



KALKI அக்டோபர் 22, 1944 4 அ


வைரம்
பொன்
வெள்ளி
நகைகளுக்கு
P.A.ராஜ செட்டியார் பிரதர்
தந்தி: ராஜா-கோயமுத்தூர்-போன்.218A

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.